383

ரூ. 1

28 JUN 1944
MADRAS

ஆசிரியை ஸ்ரீமதி வை. மு.
கோதைநாயகி அம்மாள்

43199 383
2-44
S84

வீர வஸந்தா

ஐந்தாம் பதிப்பு

O-,3MKN,V
N44
58755

SANTHA

ஜகன்மோகினி பிரசுரம் 11

வீரவஸந்தா

அல்லது

சுயேச்சையின் பரிபவம்

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

28 JUN 1944
MADRAS

11-வது நாவல்

ஐந்தாம் பதிப்பு

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
சிங்கப்பெருமாள் கோவில்

[காபிரைட்]. [ரூ. 1.

WAR TIME EDITION. 1944.

Printed in conformity with modern wartime standard of *utmost printing economy*, with lesser margin, more matter and solid printing.

Eleventh "JMO" Publication

ALL RIGHTS BELONG TO THE AUTHORESS.

சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை.

முன்னுரை

பாரதத் தாயின் அருந்தவ மக்களாகிய அன்பு மிக்க சகோதர சகோதரிகளே!

நமது பாரத நாட்டு நாரீமணிகளுக்குக் குடும்ப மாகிய இராஜ்யத்தில் எப்போதும் சுதந்தரமுண்டு என்பதை விவேகிகள் யாவரும் நன்குணர்வர். குடும்ப காரியங்களைக் கவனித்தல் மக்களின் பாதுகாப்பில் சிரத்தையெடுத்துக் கொள்ளல், குடும்பத்திலேற்படும் சுக துக்கங்களில் ஈடுபடல் ஆகியவைகளில் மாதர்கள் தங்கள் சுயேச்சையின்படி சுதந்தரம் வகிக்க இடமுண்டு.

தற்காலத்தில் சில ஸ்திரீகள் அந்தச் சுதந்தரம் தங்களுக்கு ஏற்ற வழியில் அமைந்த அரிய சுதந்தரம் என்பதை உணராமல், தங்கள் சுதந்தரத்தை நினைத்த படி, நினைத்த இடங்களில் செலுத்த வேண்டுமென்கிற அவாக்கொண்டு, நாகரிகமற்ற முறையில்—அதாவது ஒழுக்கமற்ற இழுக்கான செய்கைகளில்—புகுந்து குடும்பத்திற்கும், குலத்திற்கும் பழிப்பை விளைவிப் பதுமல்லாமல். தங்களையும் பெருந் தொல்லைகளுக்குள் ளாக்கிக் கொள்வதை, பிரத்யக்ஷத்தில் காண்கிறோம்.

அப்படி நாம் கண்ட ஓர் உண்மை வாலாற்றி னையே கற்பனாலங்காரங்களுடன், வீரவஸந்தா அல்லது சுயேச்சையின் பரிபவம் என்னும் நாவலாக எழுதி யுள்ளோம்.

சுதந்தரம், நாகரிகம், சுயேச்சை என்னும் மூன்றும் தங்களுக்கு வேண்டுமென்று விரும்பி அவைகளுக் காக கிளர்ச்சி செய்ய முன் வந்திருப்பது ஸ்திரீகள் தங்கள் பெருமையைக் கெடுத்துக்கொள்வதற்கே முன்வந்திருப்பதாக அறிவுடையார் ஊகிக்கின்றனர். சுதந்தரமாய்த் தங்களுடைய சுயேச்சையின்படி வாழ்க் கையை நடத்த ஆடவர்களும் சக்தியற்றவர்களாவர். அவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் துணையா யமைந்த மனைவிமார்களின் துணையும், ஆலோசனையும், உறவும் அவசியமாயிருக்கின்றன. இதனை நோக்கும்

போது ஒரு ஸ்திரீ சுதந்தரமாய்ச் சுயேச்சையின்படி நடப்பது எப்படி சாத்தியமாகும்? அது எப்படி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும்? அது எப்படி அவர்களை ஒழுக்கத்தில் நிலை நிறுத்தும்? நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு காவலையுங் கடந்து மனம்போனபடி அலைவதையே சுதந்தரமென்றும், மேல் நாட்டாருடைய நடையுடை பாவனைகளை மேற்கொண்டு நம் தேசத்திற்கும் நம் குலத்திற்கும் பொருந்தாத வழிகளில் உழல்வதையே நாகரிகமென்றும், தங்கள் மனப் போக்கையே உசிதமான போக்கெனக் கருதிப் பெரியாருடைய வழியைப் பழிப்பதையே சுயேச்சையெனவும் கொண்டு, உண்மையில் தமக்குள்ள சுதந்தரம், தாம் மேற்கொள்ளத்தக்க நாகரிகம், தாம் உபயோகிக்கத்தக்க சுயேச்சை இவைகளை மறந்து கெடுகின்றது தமிழ் உலகம்.

இக் கதையானது, மேலே கண்டபடி, போலி சுதந்தரம், நாகரிகம், சுயேச்சை முதலியவைகளை வகித்துப் பாழான ரமாமணி, மனோகரி இவர்களின் வரலாற்றினையும், நம்முடைய தேசம், குலம், பெரியார் காட்டிய வழி இம்மூன்றையும் பின்பற்றி, உண்மை சுதந்தரம், நாகரிகம், சுயேச்சை இவைகளைக் கைக்கொண்ட பதிவ்ரதா சிரோமணி வஸந்தவல்லியின் வரலாற்றினையும் விளக்குகின்றதாகையினால், இதனைப்படிக்கும் நாரீமணிகள் வரம்புமீறிய சுதந்தரம் நன்மை பயக்காதென்பதை நன்கு உணர்வார்களென்பது திண்ணம். ஸ்திரீகள் தங்களுடைய குலத்திற்கும், குடும்பத்திற்கும், பெருமைக்கும் குறைவுண்டாகாத வழியில் சுதந்தரத்தை மேற்கொண்டு, கணவனுடைய துணையை அனுசரித்துச் சுகமாக வாழவேண்டுமென்பதே எமது கருத்தாகுமாதலால், இக்கதையின் மூலமாக அதனை வெளியிடலானோம். இதிலே சிலர் குற்றங் குறைகள் காணலாம்; நல்லெண்ணங்கொண்டு எழுதியதாதலின் அவைகளைப் பொருட்படுத்தாமல், குணத்தையேற்று

ஆதரிக்கவேண்டுகிறேம். மாதவன் திருவருள் தீதற ஓங்குக!

—வை. மு. கோதைநாயகி,

முகவுரை

வீரவஸந்தா அல்லது சுயேச்சையின் பரிபவம் என்னும் நாவலை நான் முற்றும் படித்துப் பார்த்தேன். இந்த நாவல், மாதுஸ்ரீகோதைநாயகி அம்மாள் அவர்கள் எழுதிய வனைய நாவல்களைப் போன்றது அன்று. இக் காலத்தில் ஸ்திரீகளுள், படித்த வகுப்பார் என்றும், நாகரிகமுடையாரென்றும் உலாவிவரும்ஸ்திரீகள் பலர். அவர்கள், தங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாய் இருப்பது, தங்களுடைய இச்சையின்படி நடக்கவும், நடையுடை பாவனைகளில் மேனுட்டாரின் கொள்கைகளைக் கைக்கொள்ளவும், தங்களுக்குச் சுதந்தரங் கொடாதிருத்தலே என்று முறையிட்டுப் பெருங்கிளர்ச்சி செய்து வருகின்றனர். அவர்களுடைய அப்படிப்பட்ட கிளர்ச்சி பொருந்தும் எனத் தாளம் போடும் பத்திரிகைகளும், புருஷர்களும் பல.

இந் நோக்கம் நம் நாட்டுக்குத் தீமை பயப்பதாகுமெனக் கண்ட பெரியவர்களும் வர்ணாச்ரம தரும நெறி கடவாத மாது சிரோமணிகளும், 'இது கலிகால விபரீதம்' என நினைத்து, மௌனமாய் இருக்கின்றனர். ஏதோ சிலரே, அங்கும் இங்குமாக இருந்து இந்தக் கிளர்ச்சியைக் கண்டிக்கின்றனர்; வெறுக்கின்றனர். தங்கள் வீட்டிலேயே அவ் வளர்ச்சிக்குக் காரணபூதராய்ச் சில மாதர்கள் வெளிவரக் கண்ட சிலர், பலவாறுன மானக்கேட்டிற்காளாய் நாணமென்னும் படுகுழியில் வீழ்ந்து தவிக்கின்றனர்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இக் கிளர்ச்சியைக் கண்டிக்கிறது இந் நாவல். ஆதலின், இது நூலாசிரியரின் மனேதிடத்தை உணர்த்தும் உயர்வினை யுடையதாகிறது. இத்தகைய மனேதிடம் நூலாசிரியர்க்கு இருக்கவேண்டிய முக்கியமான தன்மைகளில் ஒன்ருகு

மேன்பதைச் சிறந்த நூலாசிரியரும், பத்திரிகாசிரியரும் நன்குணர்வர். நூலாசிரியரென்றும், பத்திரிகாசிரியரென்றும் முன்வருபவரிடம் இத்தகைய மனோநிடம் விளங்கவில்லையானால், அவர்களால் உலகமும் நலம் பெறாது; அவர்களும் தங்கள் உழைப்பினால் நலம் அடையமாட்டார்கள்.

நூலெழுதுவதும் வெளியிடுவதும் பொருளீட்டுவதற்கு மாத்திரமல்ல. உலகம் நேர்வழியை—அதாவது, உய்யும் வழியை—அடைவதற்கேற்ற நோக்கமே பிரதானமாய்க் கொண்டிருப்பது அவசியம். "யதார்த்த வாதி பகுஜன விரோதி" என்பதுண்டு. அதுபோல், இத்தகைய நூலாசியர் பலருக்கு விரோதியாவதுண்டு. அந்த விரோதத்தினால் பலவிதமான இடர்கள் நேரிடுவதுண்டு. இவ்வாறு நம் தேசத்திலும் மேல் நாட்டிலும் நூலாசிரியர் பலர் பலவிதமான இடர்களுக்கு உள்ளானதுண்டு. உலகம் உய்யும் வழியை நாடும் பரிசுத்த மனமுடைய நூலாசிரியர், தெய்வத்திற்கும், பாபத்திற்கும், வேதம் விதிக்கும் விதி விலக்கிற்கும் அஞ்சுவராதலால் அவர்களுடைய தீர்மானம் இப்பொழுது விரோதமாக நினைக்கப்பட்டாலும் அப்பால் அது நல்ல பயனைத் தராதிராதேன்பது திண்ணம்.

சுந்தரம் நாகரிகம், சுயேச்சை என்பவைகளை நூலாசிரியர் தம்முடைய முன்னுரையில் செவ்வனே விளக்கியுள்ளார்கள். அன்றியும், ஸ்திரீகள் சுதந்தரம் வேண்டுமென்று போராடுவதற் கிடமே யில்லையென்றும், அவர்கள் குடும்பமென்னும் இராஜ்யத்தில் சுதந்தரவாதிகளாகவே இருக்கிறார்களென்றும், இப்பொழுது வேண்டுமென விரும்பும் சுதந்தரத்தினால் தீமையேஉண்டாகுமென்பதை, உண்மையில் நடந்த ஒரு குடும்ப வரலாற்றினைக்கொண்டு விள்க்கியிருப்பதாகவும் கூறுகிறார்கள்.

இந்த முறை பற்றிய நாவல்கள் பல, ஸ்திரீகள் மூலமாகவே தோன்ற இறைவன் கருணை பெருக வேண்டுகிறேன். —திரு. அ. சுப்ரமண்ய பாரதி.

ஸ்ரீ

வீரவஸந்தா

அல்லது

சுயேச்சையின் பரிபவம்

கலைமகள் துதி

மலரயன் மகிழும் மான்விழியாளே!
மலர்ப்பதம் போற்றினேன் வரமருள்வாயே!

கணபதி துதி

விக்கின மின்றியே, காத்திடும் விநாயகா!
இக்கதை தன்னை ஈடேறச் செய்குவாய்!

அதிகாரம் 1

திரு மணமா! கரு மணமா!

"கமலவல்லி! இதோ, சம்பந்தி வீட்டாரிட மிருந்து கடிதம் வந்துவிட்டது. கடிதத்தின் மேல்உறையில் மஞ்சளுந்தடவியிருப்பதால், சுப காரியம் நிச்சயமென்று அர்த்தமாகின்றது. ஆகையால், இனிமேல் நீ கவலையே கொள்ளவேண்டாம். நமது மகளின் திருமணத்தைச் சீக்கிரம் முடித்துவிடலாம். கடிதத்தைப் படிக்கின்றேன் கேள்:—

"மஹாராஜ, ராஜ, ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு அநேக நமஸ்காரங்கள். க்ஷேமம். க்ஷேமத்தை அடிக்கடி எழுத ஆசிக்கின்றேன். உங்கள் குமாரத்தி படத்தைப்பார்த்ததும் என் குமாரன் சிரஞ்சீவி வீரநாதனுக்குப் பூரணதிருப்தி உண்டாகிவிட்டது. அவனுடைய விருப்பம் படித்த பெண்ணை மணப்பதிலிருந்ததேயன்றி, எங்கள் இஷ்டப்படி செய்வதற்கு அவன்

சம்மதிக்கவில்லை. இவ்விடத்திலோ எல்லாம் ஒத்து இருப்பதால் காரியம் முடிந்துவிட்டதென்று தாராளமாய்க் கூறலாம். உங்கள் பெண் எப். ஏ. பாஸானதைக் கண்டு நாங்கள் எல்லோரும் சந்தோஷமடைகின்றோம். அவளை மருத்துவக் கல்லூரியில் படிக்கவைக்க வேண்டுமென்று என் குமாரன் விரும்புகின்றான். அவன் இஷ்டம்போலவே செய்யவும். இம்மாதம் 20-ந் தேதிக்குமேல் முகூர்த்தம் வைத்து விவாகத்தை நடத்திவிடலாம். சேலை முதலியன வாங்குவதற்கும் பெண்ணைக்கேட்டு, அவள் அபிப்பிராயத்தை அறிந்து எழுதவும். அதன்படியே செய்கின்றேன். என் குமாரன் மருத்துவனானபடியால் அவனுக்கு ஜரிகை முதலிய வேஷ்டிகள் அதிகம் வாங்கவேண்டாம். கால் சட்டை (புல் ஸூட்) களாகவே தைத்துவிடவும். தாங்கள் முகூர்த்தம் வைத்தவுடன் நேரில் ஒருதரம் வந்தால் சகல வேலைகளையும் பற்றிப் பேசி முடித்துக்கொள்ளலாம்; ஆகையால், எல்லாவற்றிற்கும் தாங்கள் அவசியம் நேரில் வரவும். மற்றபடி வேறு விசேஷமில்லை.

இங்ஙனம்
உங்கள் நன்றியுள்ள,
நாராயணன்."

என்று, தன் புருஷன் படித்துக் கேட்டதும், கமலவல்லியின் மனம் நிரம்பவும் அபரிமிதமான சந்தோஷத்தையடைந்தது. அவள், தன் புதல்வியின் திருமணம் நடக்கும் நாள் என்று வரும் என்று எதிர்பார்க்கலானாள்; அவளுடைய சந்தோஷப்பெருக்கால் விவாக காரியங்களைப்பற்றியும், சம்பந்தி வகையராக்களை நடத்தும் முறையைப்பற்றியும் அப்போதே தடபுடலாக பேச ஆரம்பித்துத் தன் புதல்வியை அழைத்து அவளிடமும் இச் செய்தியை உரைத்தாள். கிருஷ்ணமூர்த்தியும் மட்டற்ற சந்தோஷத்துடன் நாள் பார்க்கப் புரோகிதரைத் தருவித்தார். முகூர்த்தமும் 25-ம் தேதியன்று நிச்சயமாயிற்று.

கிருஷ்ண:—கமலவல்லி! நான் இன்றைக்கே ஊருக்குச் சென்று சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வருகிறேன், அதற்குள், நீ இங்கு ஆக வேண்டிய காரியங்களை முடித்துவிடு—என்று கூறித் திட்டம் செய்து, விவாகப்பத்திரிகையும் அச்சிடுவதற் குத் தயார் செய்தார்.

பிறகு, சம்பந்தி இருக்கும் ஊருக்குப் பிரயாண மாய் வந்து சேர்ந்தார். சம்பந்திகள் இருவரும் நேரில் கலந்து யோசனை செய்து கலியாண ஏற்பாட்டை முடித்துவிட்டார்கள். சீர்வரிசைகள் ஒன்றும் செய்ய வேண்டாமென்றும், அதற்குப் பதிலாகத் தன் குமார னின் டிஸ்பென்ஸரிக்கு வேண்டிய மருந்துகளை வாங் கிக்கொடுத்துவிடவேண்டுமென்றும் தீர்மானமாயிற்று கிருஷ்ணமூர்த்தி அதற்கிசைந்து அவ்வாறே செய்வ வதாக ஒப்புக்கொண்டு அவர்களுக்கு முகூர்த்தப் பத்திரிகையும் கொடுத்துவிட்டுப் போனார். விவாகத் திற்கு வேண்டிய சகல காரியங்களும் செய்து பந்தல் படி முதலிய யாவும் தயாராயின. சம்பந்திக்காக அமைத்திருந்த விடுதியில் அவர்களும் வந்து இறங்கி னார்கள்.

விவாக தினமும் வந்தது. காலையில் மாப்பிள்ளைக்கு ஆகவேண்டிய சகல சடங்குகளும் நிறைவேறின. மாப்பிள்ளை காசியாத்திரை வந்தபின் மணித்தேங்காய் கொடுத்து அவனை அழைத்துச்சென்றதும், அலங்காரம் செய்துகொண்டு இரதிபோல நின்றிருந்த மணப் பெண்ணை அழைத்துக்கொண்டுவந்து, மாலைமாற்றி மாப்பிள்ளையின் பக்கலில் நிற்கச்செய்து ஆலத்தி எடுத்துப் பின் இருவரையும் கைசேர்த்த வண்ணம் மணவறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

மணமகளைக் கண்டவுடனே வீரநாதனுக்கு உண் டான ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அவன் மகிழ்ச்சி மயமானான். "அவள் கையை எப்பொழுது பற்றுவோம்?" என்ற பேரவாவுடன் காத்திருந்தவ

னுக்கு அச்சந்தர்ப்பம் கிடைத்தவுடன் தன் ஐந்து விரல்களாலும் மணமகளின் வளையல் போடும் இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஆனந்தப் பூரிதனாய்ச் சென்று, மணவறையில் உட்கார்ந்தான். அவ்வாறு உட்கார்ந்த பின்னரும் தான் பிடித்த கைப் பிடியை விடாமலேயேயிருந்தான். அப்போது அவன் முகத்தில் திடீரென்று ஒருவிதமான ஆத்திரமும், அவமானமும் தோன்றி, "ஹா! அநியாயக் கொள்ளையே!' என்று கர்ஜித்தவண்ணம் அவள் கையைத் திடீரென்று உதறிவிட்டு, ஒரே ஓட்டமாக ஓடி, தான் இறங்கி இருந்த ஜாகைக்குச் சென்று தனது மணக்கோலத்தை எல்லாம் களைந்தெறிந்துவிட்டு, கண்களில் நெருப்புப் பொறி பறக்க, முகம் குங்குமம் போன்று சிவக்க, மார்பு அடிக்க உட்கார்ந்துவிட்டான்.

மணமகன் மணையில் உட்கார்ந்தபின்னரும் பெண்ணின் கையை விடாது பிடித்திருந்ததைக் கண்ட எல்லோரும், "ஆஹா! தாலிகட்டுவதற்கு முன்னரே மனைவியிடத்தில் கொண்ட அதிகமான ஆசையால் மாப்பிள்ளை இன்னும் அவள் கையை விடவில்லை" என்று பரிகஸிக்க ஆரம்பித்தார்கள். அந்த க்ஷணமே மணமகன், ஒருவரும் எதிர்பாராத விதமாக ஆவேசம் கொண்டவன்போல எழுந்து ஓடிவிட்டதைக் கண்டதும் விஷயமறியாது எல்லோரும் திடுக்கிட்டார்கள். "ஹா! மாப்பிள்ளை ஏன் ஓடிவிட்டார்? ஏன் ஓடி விட்டார்?" என்ற கோஷம் பிரம்மாண்டமாகக் கிளம்பியது. ஆண்பாலர்களும் பெண்பாலர்களும் இன்னதென்று விவரிக்கமாட்டாத பதைப்பும், திகைப்பும் அடைந்து விழித்தவாறு அந்த வீட்டை நோக்கி ஓடத் தலைப்பட்டார்கள்; மணப்பெண், கண்களில் நீர் பெருகியவண்ணம் எழுந்து உள்ளே போய்விட்டாள். பெண்ணின் தாயும் தந்தையும் துடிதுடித்தவண்ணம் மாப்பிள்ளையின் வீட்டிற்கு ஓடினார்கள். மாப்பிள்ளை சாதாரண உடையுடன் வீற்றிருக்கும் கோலத்தைக்கண்ட

கிருஷ்ணமூர்த்தியும், நாராயணனும் "என்ன விஷயம்? ஏன் ஓடிவந்துவிட்டீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதற்கு வீரநாதன் கண்ணில் நீர் ததும்பி நெருப்புப் பறக்க ஆவேசத்துடன் கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, "ஐயா! நான் ஓர் சந்தேகத்தின்மேல் எழுந்து வந்துவிட்டேன். அதாவது, நான் உங்கள் குமாரத்தியை மணப்பதா! இது திருமணமா! அன்றிக் கருமணமா! இதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டாகவே எழுந்துவந்துவிட்டேன்" என்று அவன் சொல்லி முடிக்குமுன்னர் கிருஷ்ணமூர்த்தியும், இன்னும் அங்குள்ள மற்ற எல்லோரும் சகிக்கக்கூடாத வியப்பும், திகைப்பும் அடைந்து, "ஹா! என்ன! என்ன! கலியாணப்பெண் கருப்பவதியா! ஐயோ! இதென்ன அக்கிரமம்! இவ்விதமான வார்த்தை எங்கும் இதுபரியந்தம் காதினாலும் கேட்டறியாத விஷயமாகவிருக்கிறதே! ஆஹா! அக்ரமமே!" என்று எல்லோரும் மூக்கின்மீது விரலை வைத்தார்கள். கிருஷ்ணமூர்த்தியும் கமலவல்லியும் இவ் வசனத்தைக் கேட்டவுடன் ஸ்மரணையற்றார்கள். பிறகு தெளிந்ததும் "ஆஹா! இந்த வார்த்தையை நான் என் காதினால் உண்மையில் கேட்கிறேனா, அல்லது கனவு காண்கிறேனா?" என்று தாங்கமாட்டாத மனத் தவிப்புடன் கிருஷ்ணமூர்த்தி கேட்டார். நாராயணனும், அவர் மனைவி லக்ஷ்மியும் ஒன்றுமே தோன்றாதவர்களாய்த் தம்பித்துவிட்டனர்.

மணமகன், பிதாவை நோக்கி, "அப்பா! இப்போதே நான் செல்கிறேன். நீங்கள் புறப்படுகின்றீர்களா, இல்லையா? கர்ப்பவதியை மணக்கக்கூடியவர்களைத் தேடி விவாகத்தை முடிக்கட்டும். நமது மேன்மையான ஹிந்து சமூகத்தில் இத்தகைய ஊழல்கள் நடைபெறுவதை நோக்க என் ஆவி தவிக்கின்றது" என்று கூறியவாறு எழுந்தான். அவ்வாறு எழுந்தவனை மடக்கிக்கொண்டு கிருஷ்ணமூர்த்தி நிரம்பவும் விசனமும், அவமானமும், ஆத்திரமும் கொண்டு பேசத்

தொடங்கி, "ஐயா! டாக்டரே! என் மகள் கர்ப்பவதி என்பதைத் தாம் திடீரென்று எவ்விதம் உணர்ந்தீர்கள்? அவ் விரகஸியத்தை எனக்கு உடைக்கவேண்டும். அது உண்மையாயின், என் பெண் என்பதையும் பாராமல் அந்த பாதகியைத் தொலைத்துவிடுகிறேன். தயவு செய்ய வேண்டும். அது வீணானதாயிருக்குமாயின், நான் உம்மை இலேசில் விடமாட்டேன். ஜாக்ரதை. நான் ஓர் உயர்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவன் என் பதையும், கண்ணியமான கலெக்டர் வேலை பார்க்கும் யோக்யதையுடையவன் என்பதையும் நினைவில் கொள் ளும். உண்மையை இப்போது நீர் விளக்காவிட்டால் உமது நிலைமை மிக்க கேவலமாய்விடும்" என்று ஆக் ரோஷத்துடன் கூறினர்.

வீரநாதன்:—ஆஹா! என்னையா முட்டாளென்று எண்ணினீர்! நீர் உரைத்தபடி, நானும் ஓர் கண்ணிய மான மருத்துவன் என்பதை மறக்கவேண்டாம். உமது குமாரத்தியின் கையைப் பிடித்தபோதே கர்ப்ப நாடி ஓடியதை நான் அறிந்தேன்; அதைச் சந்தேக மறத் தெரிந்துகொள்வதற்காகவே, பின்னும் கையைப் பிடித்துப் பார்த்தேன். எனது சந்தேகம் நிவர்த்தியாகி யதும் நான் வந்துவிட்டேன். உமது பெண்ணை இவ் விடம் வரவழையும்; உயர்தர டாக்டர்களையும் அழைத்து வாரும். அவர்களைக்கொண்டு சோதிக்கச் செய்த பின்னர் என் வார்த்தை தப்பிதமாகவிருப்பின் நான் உமக்கு அடிமையாகிவிடுகிறேன். இது உண்மை. உம். தாமதிக்கவேண்டாம். இதை இன்று விளக்காது போவதில்லை—என்று சத்தமிட்டுக் கத்தினன்.

தாங்கமாட்டாத அவமானத்தினல் குன்றிப் போன கமலவல்லி தன் வீட்டுக்குச்சென்று எல்லோ ரையும் விலக்கிவிட்டுத் தன் பெண்ணைத் தேடினள். அவளைக் காணவில்லை. உடனே அவள், திடுக்கிட்டு நெருப்பை மிதித்தவள்போலானுள். "ஆ! ரமாமணி யைக் காணவில்லையே! எங்கே! எங்கே!" என்று

தனக்குள்ளாக எண்ணித் தேடிக்கொண்டே ரமா மணியின் அறைக்குச் சென்றாள். அங்கும் அவளைக் காணாது, பின்னும் அதிகரித்த மனக்குழப்பத்துடன் அவ்வறைமுற்றும் சுற்றிப்பார்க்கையில், மேஜைமீது ஓர் கடிதம் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு எடுத்தாள். இதற்குள் கிருஷ்ணமூர்த்தி, ப்ரபல மருத்துவர்களுடனும், மணமகனுடனும் அவ்விடம் வந்தார். அத்தருணம் கமலவல்லி கடிதத்தைப் படித்துவிட்டு, அதைக் கையில் பிடித்தவாறு மூர்ச்சையாகி கிடப்பதைக் கண்டு நடுக்கலுற்று, அக் கடிதத்தை எடுத்து தனக்குள் படிக்கலானார். அதன் விவரமாவது:—

"மகா பாபியாகிய என்னைப் பெற்றுப் பரிபாலித்த மாதா பிதாக்களின் கமல மலர்க் கழலடிகளைப் பணிந்து வரையும் விஞ்ஞாபனம். நமது குடும்ப வழக்கப்படி ரஜஸ்வலையாவதற்குமுன்னர் விவாகத்தைச் செய்யும் பழக்கத்தை உங்கள் உத்தியோக ஆடம்பரத்தினாலும் மேனாட்டாரின் போதையாலும் கைவிட்ட மகா கொடிய பாவம் இவ்விதமான கதிக்கு என்னை ஆளாக்க நேர்ந்துவிட்டதென்று நான் இப்போது நினைக்கின்றேன். நம்முடைய பூர்வாசார நெறி தப்பியதால், நீங்கள் என்னையும் இழக்க நேர்ந்தது. தலைவிதி என்பதையும், கடவுள் செயல் என்பதையும் யாற்ற ஒருவராலும் ஆகாது என்ற உறுதியை அறிந்தேன். இக் கலி காலத்தில் யாரையும் நம்பலாகாது என்ற பாடத்தை என் அநுபவபூர்வமாக நான் தெரிந்துகொண்டேன். யாரை அதிகமாக நம்பி நமது மதிப்பை வைக்கின்றேமோ அவர்கள்தான் நமது உயிருக்கும் நமனாக வருகின்றார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமாகிய யோக்கியதையை வகித்த மனிதர் இக்காலத்தில் கிடைப்பது துர்லபம். சொந்த மனிதர்களாயினும், அயல் மனிதராயினும் நாம் நம்பாது விலகிக்கொள்ளும் நன்மைமையைப்போன்றது எதுவுமில்லை எனலாம். இவ்வுலகம் நம்பிக்கைத் துரோகஞ்செய்யும் கொடிய சண்டாளர்

களைத் தாங்கிய உலகமாக மாறிவிட்டது. அத்தகைய சதிகாரர்களுக்கே நன்மை செய்வதுபோலான நிலைமையில் அவர்களைக் கடவுளும் வைக்கிறார், இத்தகைய நன்மை முற்றும் தீமை என்பதை அவர்கள் தற்போதுணராவிடினும் அவர்களின் ஆயுள் காலத்திற்குள் அறியும்படியாகக் கடவுள் செய்யாது போகமாட்டார். நம்பியவர்களுக்குத் துரோகம் செய்வதைவிட, ஓர் உயிரை நேருக்கு நேராகக் கொலை செய்துவிடலாம். அதனால், நம்பியவர்கள் பின்னால் யாதொரு கஷ்டமும் அனுபவிக்கமாட்டார்கள். இனி மனிதர்களின் தாரதாரங்களையும், யோக்யதாசக்தியையும் கண்டறிந்து நம்பிக்கை வைக்கும்படியான மதியை உலகத்தவருக்குக் கடவுள் கொடுக்கும்படியாக நான் பிரார்த்தனை செய்கிறேன். ஜாதியனுஷ்டானங்களையும், தாய் நாட்டுப் பழக்கவழக்கங்களையும் விட்டு நடக்கும் எல்லோருக்கும் நிச்சயமாக பேராபத்து நேருவது திண்ணம் என்று என்னுள்ளம் காட்டுகின்றது.

நிற்க, மேனாட்டுப் பழக்கம் மேன்மையான இந்தியர்களாகிய நமக்கு மிகவும் கொடியது என்பதையறியாது, நான் ஆடம்பரமாயும், பலவிதமான மாறுதல்களுடனும் வாழ்ந்த எனது சுயேச்சையே என்னைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிவிட்டது; நான் என் தாயார் கூறிய மொழிகளையெல்லாம் தள்ளினேன்; மனம்போலவும் எனது சுதந்திரத்துடனும் நடந்ததன் பலனை யறிந்தேன். ஆகையால், யுக்தவயதில் விவாகத்தைச் செய்துகொண்டு தம்பதிகளிருவரும் மனமொத்த வாழ்க்கை நடத்துவதற்குச் சமானம் இவ்வுலகத்தில் வேறெதுவும் இல்லை என்று உறுதியாகக் கூறுவேன். அன்னிய நாட்டுப் பழக்கமே என்னை இன்னலுக்கு உள்ளாக்கிவிட்டது.

என்னுடன்கூட பாலியம்முதல் படித்துவந்த ஜோஸேப் என்னும் கிருஸ்துவ வாலிபனும் நானும் நெருங்கிப்பழகியதன் பலன் இவ்விதமாயிற்று. ஆனால்,

அவன் என்னுடைய கற்பையழித்து விடுவான் என்று நான் முதலில் எண்ணவில்லை. மேலும், மேல்நாட்டாரின் கதைகளைப்படித்தும், அவர்களைப்பார்த்தும் அவர்களுடைய நடையிலேயே பாவி என் மனம் லயித்துவிட்டதனால், என் மதி கெட்டுப்பாழாயிற்று. அண்ணன், தங்கையைப்போலிருந்தும் ஜோஸெப்பின் மனமும் கெட்டு, அத்தருணம் என் உணர்வும் கலங்கும்படியாக நேர்ந்த இக் காரணங்களை என் மனம் இந்த விநாடியில் அறிவதைப்போல, அப்போது அறிந்திருக்குமாயின், எத்துணை மேன்மையாக இருக்கும்? பாழாய்ப்போன மமதையும், படித்துவிட்ட அகம்பாவமும், அன்னிய நாட்டாரது பழக்கத்தின் கொடுமையும், சுயேச்சாதிகாரத்தின் பலனும் ஒன்றுகூடி என்னை மடித்துவிட்டன.

என் அன்பான பெற்றோர்களே! இனிமேல் உலகத்தில் ஸ்திரீகளை அத்து மீறி வெளியில் விடாமலிருப்பதற்கு எனது அநுபவத்தையும், என் கடிதத்தையும் சான்றாக எடுத்துக் கூறுங்கள்.

அபாரமான உன்னத பதவியையுடைய இந்துப் பெண்மணியாக ஜனித்த நான் என் தாய்ப் பாஷையை விட்டு, தாய்நாட்டுப் பழக்கத்தையும் விட்டு, மிதமிஞ்சிய கர்வத்தோடு அன்னிய ஆடவனுடன் மனங்களித்துப் பழகியதன் பயனை அறிந்தேன்; அத் தீத்தொழிலின் இழிவை இன்று தெரிந்தேன். என் சுயேச்சையின் கேடுகெட்ட நிலைமையை இப்போதறிந்தேன். நெருப்பையும் பஞ்சுப் பொதியையும் அருகில் வைத்ததுபோல எனது நிலைமை ஆய்விட்டது. என் தப்பிதத்தை இதுகாறும் உங்களிடம் கூறுதொழிந்த பாவியானேன். பெண்களுக்குச் சத்ரு சுயேச்சை என்பதைக் கண்டேன். இனிமேல் என்னைப்போல் ஒருவரும் கெட்டு அழியும்படியான சுயேச்சை வகிக்கவேண்டாம். தாய்ப் பழக்கத்தைத் தள்ளவேண்டாம். ஜோஸெப்பின் மீது மட்டும் குற்றம் கூறுவதற்கு என் மனம் இசை

யாது. எனது அறிவிழந்த மந்தமதியும், பட்டம் பெற்று விட்ட அகம்பாவமும், சுயேச்சை என்னும் பைசாசமும், என்னைப் பிடித்து ஆட்டிய மமதையும், யானை தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்வது போல் என் தலையில் நானே மண்ணைப்போட்டுக் கொள்ளும்படிச் செய்தன.

பெற்றோர்களே! இனி உலகத்திலுள்ள பெற்றோர்கள், என் போன்ற பெண்மணிகளையுடையோர்கள், அப் பெண்மணிகளைச்சுயேச்சைப்பிசாசு பிடிக்கவைக் காமலும், அளவுக்குமீறிய ஆடம்பரத்தில் இறங்கிவிடாமலும், கண்டவாறு வெளியேறும் கொடிய பழக்கத்தில் புகாதபடிக்கும் பாதுகாத்துவரவேண்டும். என் தாய் தந்தையரே! ஏக புத்திரியாகிய என்னை நீங்கள் சதமாக எண்ணி மகிழ்ந்ததற்குமாறாக நான் உங்களுக்குத் தீராத துயரத்தையும், அவமானத்தையும் வைத்து விட்டு மாள்கிறேன். நான் மானமிழந்த தன்மை வெளியாகிய பின்னரே எனது ஊழல்கள் என் கண்முன் தோன்றின. இனி, ஒரு விநாடியும் உயிருடன் இருக்க சம்மதியேன். படித்தும் அறிவிழந்த எனது சவத்தையேனும் செருப்பால் அடியுங்கள். பெற்றோரே! என்னைப் புறக்கடைக் கிணற்றில் கண்டு எடுங்கள். என் கொழுப்பினால் நான் மாண்டதற்கு என்னுடைய மணப்பறையையே பிணப்பறையாகச் சாற்றி, என் மதியீனத்தை எல்லோருமறியச் செய்யுங்கள். என்னுடைய செய்கையின் கொடுமையை நான் அந்த நிமிடம் அறிந்திருப்பேனேயானால், எத்தனையோ மேன்மையடைந்திருப்பேன். எல்லாம் மண்ணாகி என் பிறவியே நகைக்கும் தன்மையாயிற்று. என் கதியை இப்போது தான் உணர்ந்தேன். என் செய்கையால் என் உயிரை மாய்த்துக்கொள்வதால் நான் உங்களைத் தீராத்துயரத்திற்கு ஆளாக்கின பாவி என்னை வெறுத்து ஒதுக்குங்கள். என் மதியீனத்தினால் மகா மேன்மையான கணவனை வகிக்க அபாக்கியவதியானேன். பெற்றோரே!

என் செய்கைக்கு என்னை மன்னிக்கவும். என்னை மகளென்று எண்ணாது, மகா கொடிய பாதகி என்று எண்ணுங்கள். என்னாலேயே எனக்குற்ற தீராத் துயரத்தை எண்ணி, வருந்தி உயிர் நீக்கத் துணிந்த சண்டாளியாகிய எனது கடைசி நமஸ்காரத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். என் மறு பிறவியேனும் உயர் பிறவியாக இருக்கும்படிக் கடவுளை வேண்டுங்கள்.

இங்ஙனம்,
தங்களை வருத்துவதற்கு
ஜனித்த சண்டாளி,
ரமாமணி."

அதை மனத்திற்குள் படித்ததும், கிருஷ்ணமூர்த்தி இன்னதென்று கூறச் சாத்யமற்ற நிலைமையை யடைந்து, "ஹா ! ஹா !" என்று அவரும் மூர்ச்சித்தார். இதைக் கண்ட மணமகன் அந்தக் கடிதத்தைப் படித்தான் ; அந்தப் பெண் படித்த மமதையால் அவளறிந்தே நடந்த தவறுதல் என்பதை அறிந்து வருந்தினான் ; இதை மற்ற மருத்துவர்களுக்கும் காட்ட அவர்களும் இவ்வதிசயமானதும், கண்ருவியானதுமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமுற்றார்கள். அதன்மேல் எல்லோருமாகச் சேர்ந்து கிருஷ்ணமூர்த்திக்கும் கமலவல்லிக்கும் மூர்ச்சை தெளியவைத்தார்கள். தமது மகள் செய்துவிட்ட காரியம் அவர்களையறியாது நடந்துவிட்டதாயினும், அச்செய்கையானது எல்லோரையும் தாங்கக்கூடிய மகா பயங்கரமானதாக நேர்ந்ததுடன், ரமாமணியின் முடிவுக்குக் காரணமானதாலும் அவளுடைய பெற்றோர்கள் சகிக்கக்கூடாத சங்கடத்தை யடைந்தார்கள். 'புத்திர சோகம் பொல்லாது' என்ற வசனம் அவர்களையும் தாக்கியது. இதற்குள் இவ்விஷயம் கலியாண வீடுடன் ஊரெங்கும் விஷம் போலப் பரவியது. எல்லோரும் தம் தம் மனம் போனவாறு பேசவாரம்பித்தனர். கமலவல்லியும் கிருஷ்ணமூர்த்தியும் ப்ரலாபிக்கலானார்கள்.

மணப்பறை பிணப்பறையாயிற்று; மணமகளே பிண மகளானள்.

அருகேயுள்ளவர்கள் கிணற்றிலிறங்கி ரமாமணியின் பிணத்தை எடுத்துக் கிடத்தினார்கள். இந்தக் கோரமான காட்சியைக்கண்டு கண்ணீர்விடாதோர் கிடையாதென்றால் பிணம் அடக்கமானதையும் பெற்றோர்கள் புலம்பியதையும் பற்றிக் கூறவேண்டுமா ! எல்லாம் முடிந்தது.

அங்கு வந்த எல்லோரும் தம்தம் இருப்பிடம் சேர்ந்தார்கள். ரமாமணியின் பெற்றோர்கள், தாங்கள் தமது புத்திரிக்கு அளித்த சுயேச்சையே காரணமாகிக் குடும்பத்தைப் பாழ் செய்த கோரத்தைச் சகியாது தம்மையே நொந்துகொண்டார்கள். பெண்களின் சுயேச்சையே கொடிய விஷம் என்பதை எண்ணி வருந்தினார்கள் ; தமக்கு நேர்ந்த அவமானத்தினாலும், புத்திரியைப் பறிகொடுத்த சோகத்தினாலும் அவ்வூரையும் உத்தியோகத்தையும் விட்டு, காசி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யக் கிளம்பினார்கள்.

அதிகாரம் 2

படாடோபம் ! பம்பர ஆட்டம் !

"ஆஹா ! என்ன அதிர்ஷ்ட ஹீனம் ! எவ்வளவோ அழகிய பெண்மணியை நாம் அடைய எண்ணுகையில் இவ்வளவு மோசம் வந்துவிட்டதே! படத்திற்கண்டு மயங்கின எனக்குப் படத்தையே பார்த்துக் களிக்கும்படியாயிற்றே! சீச்சீ! என்ன உலகம்! நமது தரித்திர தசை நீங்கும் சமயம் நேர்ந்துவிட்டதென்று எண்ணிய எண்ணத்தில் மண் விழுந்ததே! இனி அவளைப்போன்ற அழகுடையவளும், படிப்புடையவளும், பணமுடையவளுமான பெண் கிடைக்கப்போகிறாளா !" என்று வீரநாதன் அதே ஏக்கம் பிடித்துத் தனது வேலையைச் செய்து

வந்தான். படித்த பெண்ணை மணப்பதில்தான் வீர நாதனுக்குப் பிடித்தமாகையினுல் அவனது தாய் தந்தையர்கள் அவ்வாருன பெண்ணைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் இஷ்டப்படி ஒரு பெண்மணி கிடைத்தாள். குறைவில்லாத எழிலும் நிறைந்த பணமும், பி. ஏ. பாஸ் செய்த படிப்பும், ஒன்ருகூடிய மனேஹரி என்ற மடந்தைநல்லாள் கிடைத்தாள்.

அவளுடைய பிதா நியாயவாதி. அளவற்ற ஐச்வர்யம் பெற்றவர். அந்த வனிதையின் தாயார் அவளது பாலியத்திலேயே இறந்துவிட்டதால், அவளை வெகு செல்வாக்காய் அவர் வளர்த்துப் படிக்கவைத்தார். அந்தத் தருணீமணிக்கு 18 வயதே ஆகின்றது. அவள் பி. ஏ. பரீக்ஷை பாஸ் செய்துவிட்டாள். அவளது தந்தையிடம் நாராயணன் சென்று விசாரித்து விவாகத்தை நிச்சயம்செய்தார். பெண், வீரநாதனைக் கண்டு விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்தாள்; வீரநாதனும் இசைந்தான். இருவரின் மனமும் இசைந்தமையால், விவாகம் யாதொரு விக்கினமும் இன்றி நடைபெற்றது. பெண்ணின் தந்தை அவளுக்குச் சீதனமாக, முன் தெரிவித்ததுபோல ஓர் டிஸ்பென்ஸரியே தயாரித்துக்கொடுத்தார். மனேகரிக்குத் தம்பியொருவனுண்டு. அவனும் மகா புத்திசாலி. படிப்பில் வெகு திறமையுடன் பட்டம்பெறும் மனிதன். அவனை அவன் பிதா, தனது உயிரைப்போல பாவித்து வளர்த்து வந்தார். மனேகரி, கலாசாலையில் படிக்கும்போதே மேனுட்டாரின் நாகரிகத்தில் மிகவும் பிரியங்கொண்டு, தனது மனம்போனபடியெல்லாம் நடந்துவந்தாள். நெற்றியில் திலகம் இராது; காலி (டு-லெட்) தான்! வகுடு கோணலாக மாறியிருக்கும். அது, இவ்வுலகமே கோணலாக மாறவாரம்பித்ததைக் குறிப்பதுபோலும்! இப்படிக் கோண வகுடும், குச்சு சேலையும், தேகமுற்றும் வெளியில் தெரியக்கூடிய சட்டையும், காலில் சதா ஸ்லிப்பரும், கழுத்தில் ஒரேஒரு மெல்லிய செயி

னும், காதில் வைரத்திஞலான ஸ்டார் கடுக்கனும், டைமண்டுபோலான லோலாக்கும், வைரமோதிரமும், ப்ரூச்சும், கையில் ஒரு வளையலும், ரிஸ்ட்வாட்சும், மூக்குக்கண்ணுடியும், வெண்மையான ஸில்கும், கலர் களிஞலான ஸில்கும் இன்னும் இவைபோன்ற நவநாக ரீகமான அலங்காரங்களிஞல் நிரம்பிய பெண்மணி யாய் அவள் விளங்கிஞள். தாயற்ற சேயாய் வளர்த்த வாஞ்சையாலும், பிதாவும் நவநாகரிக உல்லாச புருஷ ராகையாலும் அவளுடைய அப்போதைய விநோதங் களை அவர் கண்டிக்காதிருந்தார்.

அத்தகைய நடையுடைபாவனைகளே மணந்த பின்னரும் அவளைச் சூழ்ந்து நின்றன. நமது வீரநாத னும் தற்கால நாகரிக சித்தஞகையால் இருவரின் ஆடம்பரங்களும் ஒத்துவிட்டன. மனேஹரியின் எழி லைக் கண்டு மயங்கிய வீரநாதன் அவள் இஷ்டப்படி யெல்லாம் ஷோக்காக நடக்கவாரம்பித்தான். அவ்வா றிருப்பதே சொர்க்கப்பதவி என்பதாக எண்ணித் தன் மனம்போன போக்கில் நடக்கலாஞன். மனேகரி தான் பட்டம் பெற்ற அகம்பாவத்தையே பெரி தெனக் கொண்டு மேஞட்டு மனுஷி என்றே தன்னை எண்ணி அந்த ஆடம்பரமான தோரணையிலேயே தன் கணவரிடமும் நடந்துவந்தாள். அதைக்கண்ட மாமி யார் சற்று கண்டிக்கத் தலைப்பட்டாள். மனேகரிக்கு அது மிகுந்த கோபத்தையும், ஆத்திரத்தையுமளித்ததால் மாமியை எதிர்த்து, "ஓ! நீ அதிகாரம் செய்யவும் உனக்கு நான் அடிமைபோல நடக்கவும்வேண்டு மென்கிற சட்டம் எதுவுமில்லை. ஆகையால் வாயைத் திறவாதே! நான் பி. ஏ. பட்டதாரி என்பதை மறக் காதே! என் யோக்யதையை அறியாது உளறவேண் டாம். நீ படித்திருந்தாலல்லவோ படிப்பின் மகிமை உனக்குத் தெரியும்? மட்டித்தன்மையாகவும் அநாக ரிகமாகவும்முள்ள உன் மொழி எனக்கு வேண்டாம். அதிகமாய்ப் பேசாதே!" என்று கடிந்து வாயடி

யடித்துவிடுவாள். இவளுடைய வாயின் கொடிய மொழியினால் மனங்கலங்கிய மாமி 'ஐயோ! பாழாய்ப் போன படிப்புப் படித்த பெண்ணை என் நாம் குமாரனுக்கு விவாகம் பண்ணினோம்!" என்று சிந்தித்தாள். அவளுக்கு வெறுப்பும் ஏக்கமும் உண்டாயின. "இனி மருமகளிடம் அதற்குமேல் பேசினால் மரியாதை கெட்டுவிடும்" என்கிற எண்ணத்துடன் பேசாதிருந்தாள்.

மனோகரி ஒருதினம் தன்கணவனைநோக்கி "நாதா! நான் அபரிமிதமான பி. ஏ. படித்துப் பாஸ் செய்துவிட்டு வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பது சற்றும் எனக்குப் பிடிக்கவில்லை. எனது சிநேகிதர்களெல்லோரும் என்னைப் பரிகஸிக்கிறார்கள். நான் எனது படிப்புக்குத் தகுந்த ஓர் உத்தியோகத்தை வகிக்க எண்ணுகின்றேன். காலேஜில் உபாத்திமைத் தொழில் ஒன்று காலியாக இருக்கின்றது. அதற்கு நான் எத்தனிக்கத் தீர்மானித்திருக்கின்றேன்—ஏன்? தீர்மானித்து, அப்ளிகேஷன் போட்டு, பதிலும் வந்துவிட்டது. இதோ பாருங்கள்" என்று கூறி, ஒரு கவரை எடுத்துக்கொடுத்தாள்.

அதை ஆவலுடன் பிரித்துப் படித்த வீரநாதன் மெத்த மகிழ்ச்சியடைந்தான். மனைவியை நோக்கி, "ஆஹா! 200ரூபாய் சம்பளத்தில் உனக்கு வேலை கிடைத்திருக்கிறதுபற்றிச் சந்தோஷம். உன்னிஷ்டம் போலவே வேலைக்குச்செல்ல நான் அனுமதிக்கிறேன்' என்றான். இதைக்கேட்ட மனோகரி, சந்தோஷமடைந்து, மறுதினமே காலேஜுக்கு உபாத்தியாயினியாகச் சென்றுவிட்டாள். அன்றுமுதல் காலேஜ வேலைக்குப் போகும் போதும், வேலையிலிருந்து வீட்டுக்கு வரும்போதும் சிநேகிதர்களுடன் சந்தோஷமாக பொழுதைப்போக்குவதும், கணவனோடு சில நேரம் பேசுவதுமாக தன் பொழுதைக் கழிப்பதற்குச் சரியானபடி கணக்குச் செய்துகொண்டாள். காலே

ஜூக்குச் சென்ற 6 மாதம் வரையில் ரிக்ஷா வண்டியில் செல்லலானுள். அது, தனது கௌரவத்திற்குச் சரிப்படவில்லை யென்று எண்ணி மாதம் 100 ரூபாய் கொடுப்பதாக ஓர் மோட்டார் கம்பெனியில் பேசிக் கொண்டு, முதலில் ஆயிரம் ரூபாய் தன் தந்தையிடமிருந்து வாங்கிக் கட்டிவிட்டு ஓர் மோட்டார்கார் வாங்கினுள். அந்த மோட்டாரில் சதா தன் சிநேகிதை வீடுகளுக்குச் செல்வதும், அவளுக்கு இஷ்டமான நேரங்களில் நினைத்த வீடுகளுக்கும், சினிமா முதலிய கண் காட்சிகளுக்கும் தனது சுயேச்சாதிகாரத்துடன் சென்று வருவதுமாக இருக்கத் தொடங்கினுள். அவளுடன்கூட வண்டியில் சென்றுல் வீரநாதனுக்கு வண்டி கிடைக்குமேயன்றித் தனித்துச் செல்வதற்கு வண்டி அகப்படுவது துர்லபந்தான்.

வீரநாதன், ரிக்ஷா வண்டியில் சென்று தனது அலுவலைக் கவனிப்பான். வீட்டில் மோட்டார் இருக்கையில் அவன் ரிக்ஷா வண்டியில் செல்வதைக் கண்டு சிலர் கேள்வி கேட்கவும், சிலர் தம் இஷ்டம்போல் பேசிக்கொள்ளவும் தொடங்கினுர்கள். சிலர் அவனை நோக்கி, "உன் மனைவிக்குச் சொந்தமாகிய மோட்டார் உனக்கில்லையா?" என்பர். அவ்வாறு கேட்கும் கேள்விகளுக்குச் சரியான வழியில் பதில் சொல்ல மாட்டாது வெட்கி, ஒரு தினம் அவன் தனது மனைவியை நோக்கிக் கீழ்வருமாறு கேட்டான்.

வீரநாதன்:—கண்மணீ மனேகரி! மோட்டாருக்கு கொடுக்கவேண்டிய பாக்கி முழுதும் கொடுத்தாய்விட்டதா! இன்னும் பாக்கி யுண்டா?

மனேகரி:—என்! அதைப்பற்றிய கவலை என்? உங்களிடம் ரொக்கம் இருக்கின்றதா? இருப்பின் கொடுங்கள். பிறகு, என் சம்பளத்தில் கொடுத்துவிடுகிறேன். இன்னும் ஆயிரத்து அறுநூறு ரூபாய் பாக்கி இருக்கின்றது.

வீர:— ஆஹா ! என்னிடம் கடன் வாங்குவதும், கொடுப்பதும் என்று பேசுவதற்கு நீ என்ன அயல் மனுஷியா ! நீ வேறு நான் வேறா ? என் சுக துக்கமும் உன் சுக துக்கமும் ஒன்றல்லவா ? அந்த விவரத்தை யறியமாட்டாயா ? அறியாதவள்போல வித்தியாச மாகப் பேசுகிறாயே ?

மனோ:—ஓ! நாம் தம்பதி என்ற பதத்தில் ஒன்று என்பது மட்டுமேயன்றி, மற்ற விவரங்களில் நம் சௌகரியப்படித்தான் நாம் நடக்கவேண்டும். எனது வருவாய்க்குத் தகுந்த செலவும், செலவுக்குத் தகுந்த கண்ணியமும் எனக்குத் தனியாகத்தான் இருக்கும். அதேபோல் உங்களுடைய விஷயங்கள் பல விருக்க லாம். அதை நான் கேட்கக்கூடுமா ? பண விஷயத் தில் அவரவர் செலவுகளை அவரவரே கவனிக்கவேண்டு வதுதான் முக்கியம்.

வீர:—ஆஹா! அந்த வித்யாசம்பற்றித்தான் நீ நீ மோட்டார் கார் வாங்கி, நீயே சுயேச்சையாக வைத்து ஆளுகின்றாய் ! ஒரு குடும்பத்தில் மோட்டார் கார் இருக்கையில் நான் ரிக்ஷாவில் சென்றால் என்னைக் கண்ட பிறர் பரிகஸிக்கமாட்டார்களா என்பதை நீ சற்று கவனித்துப் பார். நீ காலேஜுக்குச் செல் லும் சமயமும், உன் ஸ்நேகிதர்கள் வீட்டிற்கு அவசர மாகச் செல்லும் சமயமும் தவிர மற்றைய வேளையில் என்னுடைய உபயோகத்திற்கு அந்த வண்டி உதவ வேண்டும். நான் ரிக்ஷாவில் செல்வது மிகவும் கேவல மாக இருக்கின்றது. எனது கௌரவத்திற்கு இது பொருந்தியதல்ல. நீ மோட்டார் வாங்கினால் அது எனக்குப் பாத்தியதையாகாதா?

மனோ:—ஓ ! இந்தக் கேள்வி சரியானதல்ல; வீண்பொழுதைப் போக்கும் சிலரைப் போல நான் அறிவில்லாதவளல்ல. என் கௌரவத்தை நீங்களறிய வில்லை போலும். எனது சொந்த உழைப்பினால் நான் சம்பாதித்த பொருளை என்னிஷ்ட பூர்த்திக்குச் செல

விடாது அடிமைத்தனம் வகிக்க முடியாது. நீங்களோ டாக்டர். உங்களைப் பல விடங்களுக்குப் பலர் அடிக்கடி அழைத்தவண்ணமாக இருப்பார்கள். அவ்வாறு அழைக்கும் நேரமெல்லாம் தாங்கள் வெளிக்கிளம்ப நேருவது சகஜம். அந்த மாதிரி செல்வதற்கெல்லாம் எனது வண்டியைத் தமக்குக் கொடுத்துவிட்டால், நான் செல்லும் வழி யாது? நான் நினைத்த நேரமெல்லாம் வெளிச்செல்லக் கூடியவள். அடிக்கடி விருந்துகளுக்கும், டீபார்ட்டிகளுக்கும், கச்சேரிகளுக்கும், நாடகம், சினிமா, கிளப்பு, டென்னிஸ் (பந்து) ஆடும் இடம் முதலிய பலவிடங்களுக்குச் செல்வதற்கு எனக்கென்று சொந்த வண்டி இல்லாவிட்டால் எனக்குக் கஷ்டமல்லவா? என்னுடைய பதவியின் கண்ணியப்படிக்கு நான் நடக்கவேண்டியவளல்லவா! என்னுடைய வண்டியை உங்கள் இஷ்டப்படி உபயோகிக்க முடியாது. தாங்கள் வேண்டுமாயின் வேறு வண்டி வாங்கிக்கொள்ளுங்கள். நான் எங்கும் செல்லாது வண்டி காலியாக இருக்கும் நேரத்தில் வேண்டுமானல் தாங்கள் அதில் செல்லலாம். மற்றபடி உபயோகிக்க இதை எதிர்பார்க்கவேண்டாம்.

வீர:—ப்ரியே! நீ இவ்விதம் நிர்த்தாக்ஷண்யமாகப் பேசுவது சரியா? என் வருமானம் உனக்குத் தெரியாதா? அதைக்கொண்டு நான் குடும்பம் நடத்துவேனு? என் சுய காரியத்தைக் கவனிப்பேனு? மருந்துகள் வாங்குவேனு? கடனைத் தீர்ப்பேனு! நீ சொல்வது போல வண்டியை வாங்குவேனு? இனிமேல் உன்னுடைய சம்பளத்திலிருந்து மாதம் 50 ரூபாயாகிலும் வீட்டுச் செலவுக்குக் கொடுப்போமானல் அது எனக்கு மெத்த உபகாரமாகும். இந்தக் குடும்பம் நம் இருவருக்கும் சொந்தமானதல்லவா?

மனே:—ஓ! சொந்தமானது என்பதெல்லாம் பூர்வ அநாகரிகப் பழக்கம். புருஷன் சம்பாதித்துக் குடும்பம் நடத்துவதுதான் இந்நாட்டில் வழக்கம்.

வீர:—நீ சொல்வதையே திருப்பிக்கொள். பூர்வ அநாகரிக வழக்கத்தில் பெண்பிள்ளைகளுக்கு வீட்டு வேலையைத் தவிர வேறு வேலை கிடையாது. பணம் சம்பாதிக்கும் வழக்கம் அவர்களுக்கு அக் காலத்தில் இல்லையாகையால் புருஷன் குடும்பத்தைப் பாதுகாக்கும் முறை ஏற்பட்டது. இக் காலத்துப் பெண்மணிகள், தாம் புருஷருக்குமேலாகப் பணம் சம்பாதிக்கையில் அவர்களுக்கும் குடும்பப் பொறுப்பு ஏற்படுமல்லவா? கணவன் மனைவி என்றால் எக் காரியத்தையும் ஒன்றுபட்டு ஒருமித்துச் செய்வதல்லவா அவர்களுக்கு உரிய கடமையாகும். நீ இவ்விதம் பிரித்துப் பேசுவது நன்றாயிருக்கிறதா!

மனோ:—நீங்கள் சொல்வதுபோலப் பெண்கள் குடும்பத்தை நிர்வகிப்பதற்குப் புருஷன் கையாலாகாத கைம்பெண்ணாக விருப்பின் தீராது செலவிடலாம். நீங்கள் சம்பாதிக்கக்கூடிய சக்தியுடன் இருக்கையில், எனக்கேன் கவலை? என் சந்தோஷத்திற்கும், பொழுது போக்குவதற்கும், படித்த படிப்பை வீணாக்காது பயன்படுத்துவதற்கும் நான் சம்பாதிக்கின்றேன். எனது இப்போதைய செலவையும் நீங்கள் கொடுக்கும்படியான நிலைமையில் இல்லாமலிருப்பதுபற்றிச் சந்தோஷப்படவேண்டியது உங்கள் கடமை. எனக்கு வரும் சம்பளமும் எனது செலவிற்குப் போதவில்லை. என் பிதாவையும் சிறு தொகை கேட்டு வாங்கிக்கொள்கிறேன். என் உடை முதலியவற்றிற்கும் சலவைகளுக்குமே பெருந்தொகை செலவாய்விடுகின்றது. நான் என்ன செய்யக்கூடும்?

வீர:—கண்மணீ! கோபித்துக்கொள்ளாதே! நீ மேல்நாட்டு நாகரிகமுடையவளாயிருப்பதுபற்றி நான் சந்தோஷமே அடைகின்றேன். எனினும், உன்னுடைய செலவை எவ்வளவு குறைத்துக் கொள்ளக்கூடுமோ அவ்வளவு குறைத்துக்கொள்ளவேண்டும். உனது உடையைச் சாதாரணமான கலர் ஸில்கு, பட்டுக்கரை

முதலியவற்றில் வாங்கினால் சலவைக்காகும் செலவு குறையும். துல்லியமான வெள்ளையில் வாங்குவதாலும், அழுக்கு அதிகம் அவற்றில் காட்டுவதாலும், சலவை செய்வதால் சீக்கிரம் கிழிந்துவிடுகின்றன. அவ்வாறு கிழிவதால் உடனுக்குடன் வேறு உடை வாங்கும்படி நேரிடுகின்றது: இவைகளை யோசித்துப் பார்த்தால், கலர்ப் புடவைகளே போதுமானதென்று தெரிகிறதல்லவா?

மனோ:—ஓ! என்னைக் கர்னாடகப் பட்டிக்காட்டு மனுஷியைப்போல் வேஷம்போடச் சொல்கிறீர்களோ! எனது உடையைப்பற்றித் தாங்களென்ன கஷ்டமும் நஷ்டமும் அடைகிறீர்கள்? எனது செலவை உத்தேசித்தே நான் சம்பளம் பெற்றிருப்பதைப் பலமுறை சொல்லி யிருக்கிறேன். என் உடை முதலியவற்றை மாற்றுவது கூடாத காரியம். என் இஷ்டப் படியேதான் நான் செய்வேன். எனக்கு கர்னாடக் கலர்ப்புடவை வேண்டாம். அவைகளை நான் கண்ணாலும் பார்க்கமாட்டேன். என் அந்தஸ்திற்கு அவை ஏற்றவையாகமாட்டா. என் செலவைப்பற்றி நீங்கள் சொல்வது அநாவசியம். நான் நமது வீட்டிற்கு டெலிபோன் வைக்க உத்தேசித்திருக்கிறேன். அதற்கு இன்னும் செலவு அதிகமாக ஆகின்றது. அவைகளையெல்லாம் சமாளிக்கவேண்டும். எனது செலவுக்காக நான் தங்களைக் கேளாமலிருப்பதைக் கவனியுங்கள். உங்களுக்கு வேண்டுமானால் ஒரு சிறிய மோட்டார் கார் (பேபி ஆஸ்டின்) நான் வாங்கிய இடத்தில் சிபார்சு செய்து வாங்கித்தருகிறேன். மாதம் 100 ரூபாய் கொடுத்தால் போதும். அவ்வாறு உங்களுக்குக் கொடுக்கச் சக்தியுண்டாயின் சொல்லுங்கள். இன்றே ஏற்பாடு செய்கிறேன். எனக்குத் தற்போது அளவற்ற செலவு ஆவதால் வண்டியின் ட்ரைவரை நிறுத்தி விட்டேன். நானே வண்டியோட்டப் பழகிவிட்டேன். லைஸென்ஸும் வாங்கிவிட்டேன். வண்டியை லாயத்

திலிருந்து வீட்டிற்குக் கொண்டு வருவதற்கும் வீட்டிலிருந்து லாயத்திற்குக் கொண்டு போவதற்குமட்டும் வேலைக்காரனுக்குக் கற்று வைத்திருக்கிறேன். தாங்கள் வண்டி வாங்குவதாயின் நான் எனது வண்டியில் உங்களை வண்டியோட்டப் பழக்கிவைக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?

வீர:—("நாம் கடன் பட்டாவது தற்கால நாகரிகப்படிக்கு ஆடம்பரமாக வாழ்வதுதான் கண்ணியம். பின்னால் கடனைப் பார்த்துக்கொள்வோம்" என்கிற ஓர் ஆசை அவன் மனத்திலும் உதித்தெழுந்துவிட்டதால், அவன் மோட்டார் வாங்குவதற்கு இசைந்து) கண்மணீ! பேஷ்! ஸ்திரீகளுக்கு இத்தகைய மனோதைரியமும், மேன்மையான போக்கு மிருக்கவேண்டுவது அவசியந்தான். அநியாயமாய் நம் நாட்டில் ஆயிரக்கணக்கான பெண்மணிகள் அடுப்பங்கரையை விட்டு வெளியேறுமலும் நாட்டு நடவடிக்கைகளையும், நாகரிக மேன்மையையும் அறியாமலும் அறிவின்றி அலைகின்றார்கள். உனது இஷ்டம்போலவே நீ செய்துகொள்ள நான் சம்மதிக்கின்றேன். எனக்கும் ஒரு சிறிய கார் வாங்கிவிடு; அதை ஓட்டவும் உனது வண்டியில் எனக்குக் கற்றுக் கொடுத்துவிடு; பிறகு பார்த்துக்கொள்வோம்—என்றான்.

அதைக் கேட்டு அப்படியே ஆகட்டுமென்று தலையசைத்து, மனோகரி தன் அலுவல்களைக் கவனிக்கப் போனாள். அன்றுமுதல் தனது வண்டியில் வீரநாதனை ஏற்றிக்கொண்டு மனித சஞ்சாரமில்லாத இடத்திற்குச் சென்று வண்டியோட்டப் பழக்கினாள். சிறிய மோட்டார் காரும் வாங்கிக் கொடுத்தாள். மாதாமாதம் அவன், தனது செலவுகளைப் பார்த்துக்கொண்டு மோட்டார் கம்பெனிக்கு நூறு ரூபாய் கொடுப்பதற்கு வெகு கஷ்டப்பட்டான். எப்படியோ பிரயாசைப்பட்டுக் கடன் வாங்கித் தட்டாது ஆறுமாதகாலம் ரூபாய் செலுத்திவந்தான். வீரநாதனுடைய

வைத்தியசாலையில் முன்னர் கையிருப்பாகவிருந்த மருந்துகள் நாளடைவில் செலவாய்விட்டதால் மருந்துகள் புதியதாய் வாங்கும்படிநேர்ந்தது. வாங்குவதற்கு ரொக்கப் பணம் கிடையாது. தற்காலத்தில் எந்தப் பொருளுக்கும் விளம்பரத்தினுல் அதிக மேன்மை ஏற்படுவதுபோல வீரநாதனுடைய நாகரிகப் படாடோபமும், மோட்டார்காரின் மகிமையும், அவனது மனைவியின் டாம்பீக மதிப்பும் ஒன்றுகூடி அவனை பிரபலிக்கச் செய்ததால், அவன் பெரிய ஷாப்புகளில் கடன் வாங்குவதற்கு அனுகூலம் உண்டாகியது.

வீரநாதனின் பெற்ருேர், இவர்களுடைய ஆடம்பரத்தைக் கண்டு சகியாமல், தமது பூர்வீகமான ஊருக்குப் போய் அங்குள்ள சிறிது நிலங்களில் உண்டாகும் வருமானத்தைக்கொண்டு தமது ஜீவியத்தை நடத்தலானுர்கள். வீரநாதனும், அவன் மனைவியும், வேலையாட்களும்தான் அவனுடைய வீட்டில் வசிப்பவர்கள். வீரநாதன் கடன்பாபத்தாக மருந்துகளை வாங்கி அடுக்கி விற்பதும் செலவு செய்வதுமாக ஆனுன். கடனைக் கொடுக்கக்கூடிய அதிகமான வருவாய் அவனுக்குக் கிடைக்கவில்லையாதலால் மோட்டார் கம்பெனிப்பணமும் பாக்கி நிற்க ஆரம்பித்தது. மனோகரியின் தந்தை இறந்துவிட்டார். அவளுடைய அண்ணன் தற்கால நாகரிகப் பேய் பிடிக்காத சாதாரண மனிதனுகையால், அவனுக்கு மனோகரியின் ஆடம்பரமும், அச்சமற்ற தன்மையும் சற்றும் பிடிக்கவில்லையாதலால், அவன் அவளைக் கண்டித்தும் அவள் கேளாமையால் அவளை வெறுத்தே வந்தான். மனோகரிக்குத் தனது தந்தை இருக்கையில் கிடைத்த வருமானம் குறைந்துவிட்டது. அவளுக்கும் அண்ணனுக்கும் விரோதமென்றே கூறலாம். தந்தையின்மூலமாக வந்த வருமானம் குறைந்தபோதும் அவளுடைய ஆடம்பரமும் படாடோபமும் ஒரு சிறிதும் குறையாது விருத்தியாகிக்கொண்டே வந்தன.

வீரநாதனுக்கு வருவாய் மிகவும் குறைந்துவிட்டது. அவ்வாறு குறைந்ததால் அவன் தனது பூர்வீகமாயுள்ள நிலங்களை விற்கும்படியாகநேர்ந்தது. அதற்கு அவன் பெற்றோர் சம்மதிக்காமையால் இருவருக்கும் பலத்த மனஸ்தாபம் உண்டாகியது. "எனது மானம் போகும் தருணத்தில் எனது நிலத்தைவிற்காது எதற்கு வைக்கவேண்டும்? நீங்கள் என்னிடமே இருந்து உங்கள் காலத்தைக்கடத்தவேண்டும்" என்று தாய் தந்தையரிடம் சண்டை செய்து வாதாடி, அவன் அவர்களைப் பக்குவப்படுத்தி நிலத்தை விற்று அதில் கிடைத்த தொகையைக் கொண்டு, சில கடன்களைத் தீர்த்தான். தெருவெங்கும் மருத்துவர்கள் மலிந்து விட்டதாலும், வீரநாதனுக்குச் சல்லியமிருப்பது சிறிது வெளியில் உலாவத்தொடங்கியதாலும் அவனிடம் ஜனங்களுக்கு மதிப்பு குறைய ஆரம்பித்துவிட்டது. அவ்வாறுகுறைவதால் கேஸும் வருமானமும் குறைந்தன. வாங்கிய மருந்துகளும் பழகி உபயோகமற்றுப் பாழாகவாரம்பித்தன. மோட்டார் கடனும், மருந்து வச்சாலையின் கடனும் வட்டியுடன் வளர்ந்தன. உடை ஷாப்பிலும் பாக்கி ஏற்படத் தொடங்கியது. தான் வைத்திருக்கும் பங்களாவின் வாடகையும் பாக்கி நிற்கத்தொடங்கியது. அவ்வாறு பலவிதத்திலும் கடன் மலிந்து விட்டதை எண்ண அப்போதுதான் அவனுடைய வருத்தம் தலை தூக்கித் தெரியவாரம்பித்தது. அவனது நிலைமை அவனுடைய அகக் கண்ணாடியில் பிரதிபிம்பிக்கத் தலைப்பட்டது. "ஐயோ! நாம் இத்தனை கடன்களையும் எவ்விதம் அடைப்பது? நம்முடைய படாடோபத்தைக் கண்டல்லவா நமக்கு இத்தனை பெரிய தொகைகளடங்கிய மருந்துகளைக் கடன் கொடுத்தார்கள்? மருந்துகள் விற்ற பணமும் செலவாய்விட்டது. விற்காத சரக்குகளோ பாழாகி மக்கிக் கொண்டேயிருக்கின்றன. நம் வெளி வேஷத்தைக் கண்டு இன்னமும் நம்மை அதிகமாகத் தொந்தரவு

செய்யாமல் மரியாதையாகப் பணத்தைக் கேட்கிறார்கள். நாம் நமது மரியாதையை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது? அந்தோ! அநியாயமான படாடோபமல்லவா நம்மைப் பாழாக்க ஆரம்பித்தது! என்ன செய்வது?" என்று வருந்திக்கொண்டிருக்கையில் ஓர் ரிஜிஸ்டர் கவர் வந்தது; அதில் பின்வருமாறு இருந்தது.

"ஐயா! நீங்கள் மோட்டார் கார் வாங்குகையில் எங்களுக்குக்கொடுத்த வாக்குப்படி உங்கள் பணத்தை இன்னும் செலுத்தாதிருக்கின்றீர். மிஸஸ் மனோகரியம்மாளைக் கேட்டதற்கு அவர்கள் உங்களையே நேரில் விசாரித்துக்கொள்ளும்படியாகத் தெரிவித்தார்களாகையால் இன்னும் மூன்று நாளைக்குள் பாக்கி பூராத்தொகையையும் செலுத்தாவிட்டால் நாங்கள் வண்டியை எடுத்துக்கொண்டு அதனால் ஏற்படும் நஷ்டத்தை உங்களிடம் வசூலிப்போம்.

மானேஜர்."

அதைப் படித்தவுடன் வீரநாதனின் மார்பில் இடி விழுந்ததுபோலாயிற்று. அவனுடைய மனம் மிகவும் துடித்து வருந்துகின்றது. "ஐயோ! நான் இச்சமயம் என் செய்வேன்? இன்னும் மூன்று நாளைக்குள்ளாக நான் அத்தனை பெருந்தொகையை எவ்விதம் கொடுப்பேன்? இனிமேல் எனக்குக் கடன் கொடுக்கக்கூடியவர்களும் இல்லையே! அவ்வாறு கடன் வாங்குவதற்கும் ஏதேனும் ஈடு காட்டினாலன்றி பைசாவேனும் கொடுப்பார்களா? ஆஹா! நம் ஆடம்பர வாழ்க்கையே நமக்கு எமனாக ஆயிற்றே என்று நிரம்பவும் வருந்தி யோசித்துப் புலம்பிக்கொண்டிருக்கையில் அவன் குடியிருக்கும் பங்களாவின் சொந்தக்காரன் வந்ததைக் கண்டதும் அவன் இதயத்துடிப்பும் மனக்கொதிப்பும் அதிகரித்தன. அவன் தன் வருத்தங்களைச் சற்று உள்ளடக்கிக்கொண்டு, வந்தவரை மரியாதையாக விசாரித்து உட்காரச்செய்தான்.

வீட்டுக்காரன்:—டாக்டர்! நான் கடனைக் கேட்பதற்காக வந்ததாக நினைக்கக்கூடாது. நீங்களென்ன யோக்யரல்லவா! உங்களிடமிருந்தால் என்ன, என்னிடமிருந்தால் என்ன? அதைப்பற்றி நான் சந்தேகிக்கவில்லை. தற்போது என் நிலைமை நிரம்பவும் கேவலமாயும் இக்கட்டாயுமிருக்கின்றது. என் குமாரத்திக்கு விவாகம் நிச்சயமாய்விட்டது. அதற்காக அவசரமாகப் பணம் தேவையாயிருந்தது. அதோடு விவாகம் இந்தப் பங்களாவிலேயே செய்யவேண்டுமென்று வீட்டில் பெண்டுகள் வற்புறுத்துகிறார்கள்; ஆதலால் எனக்கு இன்னும் ஒரு வாரத்திற்குள் பங்களாவைக் காலி செய்துவிட்டால் போதும். பணத்தைத் தாங்கள் இச்சமயம் கொடுப்பது கடனைக் கொடுப்பதாக நான் நினைக்கவில்லை; தானம் கொடுப்பதைப் போலும், புதையல் எடுப்பது போலும் எண்ணியிருக்கிறேன். தங்கமான மனுஷ்யாளாகிய தங்களை நான் நிர்ப்பந்திப்பதற்கு என் மனம் படும் பாட்டைக் கூற முடியாது. இந்தச் சந்தர்ப்பம் என்னை அவ்வாறு செய்கின்றது; வித்யாசமாக நினைக்கக்கூடாது. கல்யாண விஷயமாகையால் அவசரம் கூடிக்கொண்டதாகவே கருதவும். இப்போது தாங்கள் பணம் கொடுப்பதால் அந்த கல்யாணத்துக் கன்யா பலன் முற்றும் உங்களையேசேரும் தயவு செய்து பணமும் இடமும் உதவவேண்டும்— என்று உலகத்திலுள்ள எண்ணறியாத தந்திரங்களில் ஒன்றை உபயோகித்துக் கேட்டான்.

வீரநாதன் என்ன செய்வான்? ஐயோ பாவம்! தாமரை இலை நீர்த்துளி போன்று தத்தளிக்கின்றான். "ஆ! இச்சமயம் நான் எவ்விதம் பதில் பேசுவேன்? என்ன விதமான சமாதானத்தைச் சொல்லுவேன்? ஐயோ! நம் நிலைமையை அறியாது இத்தனை பெரிய பங்களாவை என் வாடகைக்கு வைத்துக்கொண்டோம்? சிறிய வீட்டில் குடியிருந்தோமேயானால் இத்தகைய இம்சையும் சங்கடமும் நேர்ந்திரா தல்லவா!

ஆ படாடோபம்! இவையெல்லாம் நீ செய்த வேலை யல்லவா? ஏ, நவநாகரிகமே! என்னை அவமதிக்குள் ளாக்கிய பாவி நீயல்லவா! ஆடம்பரப் பேயே! என்னை முற்றிலும் கெடுத்தது எனது சுய அறிவு அற்ற தன்மையும் டம்பமும் சேர்ந்து செய்த வேலையல்லவா! தலைக்குமேல் பாயும்படியான வெள்ளத்தில் இறங்கி விட்டோமே! ஆஹா! என்ன செய்வேன்?" என்று தனக்குள் சற்று நேரம் எண்ணித் தியங்கினான். பிறகு சிறிது தெளிவுகொண்டு வந்தவரை நோக்கி, "ஐயா! நான் நாளை சாயங்காலம் உங்களிடம் பேசுகிறேன். தயவு செய்து பொறுக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டதால் வீட்டுக்காரன் போய்விட்டான்.

நமது வீரநாதனுக்கோ சொல்லவறியாத துக்க மும் அவமானமும் ஒன்று கூடி வருத்துகின்றன. வீட்டிலுள்ள வேலையாட்களுக்கு சரியானபடி சம் பளம் கொடுக்க முடியாமல் ஒருவர் இருவரைத் தவிர வேறு வேலையாட்களை நீக்கிவிட்டான். வீரநாதனின் தாயாருக்கு வயது ஏறி, விருத்தாப்பியம் வந்துவிட்ட போதிலும் வீட்டில் வேலையும் மனத்தின் கவலையும் குறையவில்லை. யார் எவ்விதமிருப்பினும் மனோகரி அம்மாள் தனது சகல சௌகரியங்களும், ஆடம்பரங் களும் ஒரு சிறிதும் குறைவு படாமல் குதூகலமா கவே இருக்கிறாள். வீட்டில் சமையலாவதற்குச் சற்று நேரமாயின் ஓட்டலுக்குச் சென்று போஜனத்தைச் செய்துவிட்டுப் போய்விடுவாள். வீட்டில் ஓர் செம்பி லுள்ள தண்ணீரையும் எடுத்து வைக்கமாட்டாள். வேளைப் பிரகாரம் காரியமானால் பார்ப்பாள். இல்லை யேல் சிநேகிதை வீடோ ஓட்டலோ இருக்கவே இருக் கின்றது. இந்தத் தைரியத்தினால் வீட்டுத் தொல்லை யில் கவனமேகொள்ளாது இருக்கிறாள். இப்படி இருக் கும் நாளில்தான் நாம் மேற்குறித்த கஷ்டங்கள் வீர நாதனுக்குண்டாயின. அன்று முற்றும் தீராத துயரத் துடன் தன் மனைவியின் வரவை எதிர்பார்த்தான்.

அன்று மனோகரி ஓர் நாடகத்திற்கு சென்றுவிட்டா ளாகையால் தான் வீட்டிற்கு வரவில்லையென்பதை வேலையாள்மூலம் தெரிவித்துவிட்டாள்.

அச் செய்தியைக் கேட்ட வீரநாதனுக்கு அப் போதுதான் தன் மனைவி இவ்வாறு தனித்து இராக் காலத்தில் செல்வது மிகவும் ஒழுங்கீனமான காரியம் என்ற ஓர் அபூர்வ அரிய எண்ணம் மனத்தில் தோன் றியது. கேவலம் இளம் வயதில் நடந்ததுபோல, தன் மனம் போனவாறெல்லாம் இரவு காலங்களில்கூட அவள் இப்போது செல்லும்படியாக நாம் விட்டுவரு வது நம் தப்பிதம்தான் என்பதை அவன் உள்ளம் அந்த நிமிஷத்தில்தான் உணர்ந்து நிரம்பவும் சஞ்சலப் படவாரம்பித்தது. "ஆஹா! இந்தமாதிரியான பேய்க் குணத்துடன் திரியவைத்ததெல்லாம் பாழாய்ப்போன நாகரிகமல்லவா! ஐயோ! அவளை ஏன் சொல்லவேண் டும்! நம் அறிவிழந்த தன்மையைச் செருப்பாலடிக்க வேண்டாமா! நம் அந்தஸ்திற்குத் தக்கபடி சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டிருந்தால் குடிக்கூலி எவ்வளவு சகாயமாயிருக்கும்? சாதாரண மான உடை (வேஷ்டி) தரித்திருந்தால் உடை வகைய ராவில் எவ்வளவு குறைந்த செலவும் நஷ்டமின்மையும் ஏற்பட்டிருக்கும்? அந்தோ! நாகரிகப்பேய் பிடித்த (புல்சூட்) கால்சட்டைக்குத் துணியின் விலை என்ன? தையல் கூலி என்ன? இவைகளையெல்லாம் கணக்கிட் டுப் பார்த்தால் ஒரு கால்சட்டை தைக்கும் பணத் திற்கு அரை டஜன் துணியும், அங்கவஸ்திரமும், சவுக் கங்களும் வாங்கிக்கொள்ளலாகுமே! அடடா! மாய மயக்காகிய படாடோபத்தின் தூண்டுதலால் நாம் மோட்டார் காரை ஏன் கடனாக வாங்கினோம்? அடடா! இப்போது உதிக்கும் புத்தி அப்போது ஏன் உதிக்கவில்லையோ, தெரியவில்லையே! அந்தோ! என் நிலைமை எனக்கே வெட்கமாயிருக்கின்றதே! என்னைக் கண்ட பிறர் எண்ணி நகைக்கமாட்டார்களா! ஹா!

இரவு மணி பத்தும் அடித்தது. மனோகரி வீட்டிற்கே வாரது அயல்வீட்டில் தங்குவது சரியல்லவென்கிற உணர்ச்சி பாழும் மனத்தில் இப்போதல்லவா தைக்கின்றது. ஐயோ! நாகரிக மயக்கே! ஆடம்பரத்தின் அழிவே! அந்த மனோகரியைத் தலை கால் தெரியாது துள்ளச்செய்துவிட்ட மூடமதியை எண்ணிவருந்துவது எனக்கே வெட்கமாக விருக்கின்றதே?'' என்று பல வாறு சிந்தித்து ஒருவாறு தேறி, "நல்லது; நாமே இப்போது அந்த நாடகக் கம்பெனிக்குச் சென்று அங்கு அவளைக் கண்டு நம்முடன் அழைத்து வருவோம்" என்று எண்ணி நாகரிகமாக அலங்காரம் செய்து கொண்டு மோட்டார்காரில் ஏறி நேரே மனோகரிசென்றிருக்கும் நாடகத்திற்குச் சென்றான்.

அப்பொழுது நாடகம் ஆரம்பித்தாயிற்று. கையில் இருந்த பணத்தை யெல்லாம் செலவுசெய்து ரிஸர்வ்டு டிக்கட்டு வாங்கிக்கொண்டு உள்ளே சென்றான். அங்கு மனோகரியும் அவள் தோழிகளான வசீகரி, ஜெயகரி, பிரியகரி முதலிய பேடன்னங்களும் இன்னும் சில ஆடவர்களும் வரிசையாக சோபாவில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். தானும் அங்குசென்று மனோகரியைக் கை குலுக்கிவிட்டு அவள் பக்கலிலேயே அமர்ந்தான். திடீரென்று வந்த தன் கணவனைக் கண்ட மனோகரி, "ஓ! நீங்கள் வருவதற்கு இத்தனை நேரம் ஏன்?'' என்றாள். அவன் ஏதோ எதிர்பாராதவிதமாக நேரமாகிவிட்டதென்று கூறிப் பின்னர் நாடகத்தைப் பார்த்தான். சரியாக இரவு ஒரு மணிக்கு நாடகம் முடிந்தது.

கும்பல் கும்பலாக ஜனங்கள் கொட்டகையை விட்டுத் தம் தம் வீடு நோக்கிச் செல்கையில் கொட்டகையின் வீதியில் அன்றைய மறுநாள் நடக்கப்போகும் நாடகத்தின் பெயர் பதித்த நோட்டீஸை ஒட்டிய பெரிய பலகை நிறுத்தி இருந்தது. ஜனங்கள் போகும் கலவரத்தில் அந்தப் பலகை ஓர் கிழவரின்மீது விழுந்து

விட்டது. "ஆ" என்று கிழவர் பெருஞ்சத்தமிட்டார். இந்தச் சத்தத்தைக் கேட்டும், பலகை விழுந்த வேகத்தைக் கேட்டும் அவ்விடத்தில் கூட்டம் கூடிவிட்டார்கள். "ஆ! பலகையின் அடியில் ஓர் கிழவர் அகப்பட்டுக்கொண்டார். உயிர் இருக்கின்றதோ, போய் விட்டதோ!" என்ற பேச்சு முழங்கிற்று. இந்த வார்த்தையைக் கேட்ட வீரநாதன் விரைந்து அவ்விடத்திற்கு ஓடினன். அவ்வாறு ஓடியவன், பலகை மேலும் கிழவர் கீழுமாக விழுந்திருக்கும் அலங்கோலத்தையும் ஜனங்கள் தவித்துக்கொண்டு நிற்பதையும், சிலர் பலகையை எடுக்க முயலுவதையும் கண்டு மனம் பதறிப் போய் அந்தப் பலகையை சிலரின் உதவியால் எடுத்து விட்டுக் கீழே இருக்கும் கிழவரைப் புரட்டித் தூக்கினன். பலகை பலமாக விழுந்ததால் தலையில் அடிபட்டு ரத்தம் வெளிப்பட்டு வழிய ஆரம்பித்தது. கிழவர் மூர்ச்சையானர். "இவர் யார், இவருக்குச் சொந்த மனிதர் இங்கே யாரேனும் வந்திருக்கிறார்களா!" என்று வீரநாதன் பலமுறை கூவியும் கிழவர் யார் என்பதே ஒருவருக்கும் தெரியவில்லை. அவ்வாறு அனதையாக இருந்தமையால் அவரைத் தூக்கித் தனது மோட்டாரில் கிடத்திக்கொண்டு, மனேகரியை அவள் வண்டியில் வரச் சொல்லிவிட்டு நேரே தனது வீட்டிற்குப் புறப்பட்டான்.

வீரநாதன் அந்த அடிபட்ட கிழவரைக் கூட அழைத்து வருவது மனேகரிக்குச் சிறிதும் பிடித்தமே இல்லை. அவள் அதை வெளிப்படையாயும் கூறினள். "ஆபத்துக்காலங்களில் உபகாரம் செய்யவேண்டுவது முக்கிய கடமை. அதிலும் கிழப்பிராணன். நானே மருத்துவன். நேராக கண்ணால்பார்த்திருந்தும் பேசாது போக என் மனம் இசையவில்லையாகையால், நான் அழைத்துத்தான் செல்வேன்" என்று கூறிவிட்டு நேரே வீட்டை அடைந்தான். கிழவர் தாடியும், மீசையும் அசாத்தியமாய் வளரப்பெற்ற யோகீச்வரரைப்

போலக் காணப்பட்டார். வீரநாதன் அவருடைய தலையில் பட்ட காயத்திற்கு மருந்து வைத்துக்கட்டினான்; உள்ளுக்கும் மருந்து கொடுத்து அவரை நிம்மதியாகப் படுக்கவைத்தான்.

கிழவருக்கு பிரக்ஞையே வரவில்லை. அவர் ஒரே நிலைமையாகப் படுத்துவிட்டார். மறுநாள் உதயமான பிறகே அவருக்கு நினைவு வந்தது. அவர், 'நான் எங்கிருக்கிறேன்' என்று தெரிந்துகொள்ள ஆசித்துக் கண்ணைத் திறந்து பார்த்தார். தன்னெதிரில் இருந்த மனிதனைக் கண்டு ஒன்றும் பேசமாட்டாமல் கண்மூடிவிட்டார். இவர் கண் திறந்ததைக் கண்டு சந்தோஷித்த வீரநாதன், "தாதா! உங்களுக்கு என்னவேண்டும்? பசிக்கின்றதா! வலி எப்படி இருக்கின்றது?" என்று நிரம்பவும் வாஞ்சையுடன் கேட்டான். கிழவர் ஏதுமே பதில்பேசமாட்டாது, 'தாகம்' என்று ஜாடை செய்தார். அதை அறிந்த வீரநாதன் சுடச்சுட பால் ஒரு கோப்பை கொணர்ந்து மெல்ல அவர் வாயில் வார்த்துப் பருகச் செய்தான். அவ்வாறு பருகிய கிழவர் களைப்பு மேலிட்டதால் அயர்ந்து படுத்துவிட்டார். வீரநாதன் அவரை அப்படியே விட்டுவிட்டுத் தன் அறைக்குச் சென்றான். பிறகு மனோகரியுடன் முக்கியமாய்ப் பேசவேண்டிய காரணம் பற்றி அவளுடைய அறைக்குச் சென்றான். அப்போது மனோகரி ஏதோ படித்துக்கொண்டே சாய்மான நாற்காலியில் படுத்திருந்தாள். அவளது பின்புறமாகச் சென்ற வீரநாதன் ஐந்து நிமிடங்கள் வரையில் மௌனமாக இருந்தான்; வெகு கவனத்துடன் மனோகரி படிப்பதைத் தடுக்கலாகாதென்று பேசாதிருந்தான். அவள் படிப்பு முடிவு பெறும் வழியைக் காணாமையால், "கண்மணீ! மனோகரி!" என்று அழைத்தான்.

உடனே மனோகரி புத்தகத்தை வைத்துவிட்டு, "ஏன்! எப்போது வந்தீர்கள்? உட்காருங்கள்" என்று கூறினாள்.

வீர:—ப்ரியே! உன்னுடன் ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டியிருக்கிறது; அதனால் வந்தேன்.

மனோ:—ஓ! எனக்கு இப்பொழுது வேலை அதிகம் இருக்கிறது. இப்போது பேச முடியாது. பிறகு பார்த்துக்கொள்ளலாம்—எனவே, வீரநாதன் சென்று மீண்டும் 9-மணிக்கு வந்து, "கண்மணீ! இப்போது தெரிவிக்கலாகுமா?"

மனோ:—ஆஹா! எனக்கு மணியாய்விட்டது. இனி நான் குளித்துப் போஜனம்செய்துவிட்டு, காலேஜுக்குச் செல்லத்தான் நேரமிருக்கும். ஆகையால் மற்றொரு சமயம் பார்க்கலாம்......

வீர:—(மாலை 5-மணி) காதலீ! இப்போது ஓய்வுதானா?

மனோ:—நான் பகல் முற்றும் ச்ரமப்பட்டு அலுத்துவிட்டேன். என்னால் பேசவே முடியாது. நான் என் சிநேகிதிகளுடன் கிளப்புக்குப்போகவேண்டும்; வேறொரு சமயம் பார்ப்போம்.........

வீர:...(இரவு 8-மணி) ப்ரிய என் மனோஹரி! இனிமேல் தடையில்லையே?

மனோ:—இதென்ன பெரிய ந்யூஸன்ஸாக விருக்கிறது. இத்தனை நேரம் கஷ்டப்பட்டு அலுத்து, நித்திரை செய்யப் படுக்கிறேன்; தொந்தரவு செய்கிறீர்கள். கண் விழித்தால், தேக சுகம் கெட்டுவிடும். எனக்கு அதிகமான நித்திரை வருகின்றது. இப்போது ஒன்றுமே என்னால் பேச முடியாது.........

வீர:—(காலை 5-மணி) கண்மணீ! எழுந்திருக்கிறாயா! மணி 5 ஆய்விட்டது. இப்போதேனும் அவகாசமுண்டா?

மனோ:—ஆஹா! தூங்கிவிட்டேனே! நேற்றிரவே செய்து முடிக்கவேண்டிய வேலை இன்னும் மிச்ச மிருக்கின்றது. காலேஜ் பேப்பர்களைத் திருத்த வேண்டும். அது மிகவும் அவசரமான வேலை. இப்போது முடியவே முடியாது—என்றாள்.

இதைக்கேட்ட வீரநாதன் சற்று வெறுப்புற்றுச் சென்று, மீண்டும் 8 மணிக்கு வந்து பார்க்கையில், அவள் இங்கிலாந்து தேசத்தின் வளமையைப்பற்றிய புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்ததைக் கண்டு அவன் "மனோகரி! காலேஜ் வேலை பாக்கியிருக்கின்றதென்று கூறினாயே! இந்தப் புத்தகம் உன் காலேஜில் பாடமா, இதைப் படிக்கின்றாயே?" என்றான்.

மனோ:—பாடமில்லை! காலேஜ் வேலை முடிந்து விட்டது. இங்கிலாந்து தேசத்தின் வனப்பைப் பற்றியும், அங்குள்ள மனிதர்களின் மேன்மையைப்பற்றியும் கூறும் புத்தகம். என் காலேஜிலுள்ள உபாத்தியாயினிகள் 8 பேர் இங்கிலாந்துக்கு ஓர் பரீக்ஷையை முன்னிட்டுப் போகப்போகிறார்கள்; அவர்களுடன் நானும் போகலாமென எண்ணியிருக்கிறேன். அதற்காக இந்தப் புத்தகத்தைப் படிக்கிறேன். காலேஜுக்கு நேரமாயிற்று. என்ன செய்தி? எங்கு வந்தீர்கள்?—என்று மூடுக்காகக் கேட்டாள்.

வீர:—(திடுக்கிட்டவனாய்) "என்ன! என்ன! இந்தியாவைவிட்டு, இங்கிலாந்திற்குப் போகப்போகிறாயா! அங்கென்ன வேலை? நீ படித்துள்ள படிப்பும் தற்போதுள்ள பதவியும் போதாதா! அதைவிடுத்து அங்கு ஏன் செல்ல விரும்புகிறாய்! நாகரிகமென்னும் நெருப்புப் பொறி கொஞ்சமாக வளர்ந்து பெருத்த தீயாக ஆய்விட்டதுபோலும்! மனோகரி! நான் ஓர் முக்கியமான காரணம்பற்றி உன்னோடு பேசுவதற்காக நேற்றுக் காலைமுதல் இத்தனை தரம் வந்திருக்கிறேன். உன்னுடைய படாடோபம் என்னும் கயிற்றினால் நீ பம்பரம்போல் ஆடுவது எம்மட்டும் போய் நிற்கிறதென்பதைப் பார்த்தேன். நவநாகரிகத்தின் மாயா விலாசத்தில் நானும் தலை கால் தெரியாமல் மூழ்கினேன்; ஜாதிப் பழக்க வழக்கங்களையும், தாய் நாட்டு நடவடிக்கைகளையும், தாய்ப்பாஷையையும் அடியோடு மறந்து ஆடம்பரத்திலேயே திரிந்த பலனை நான் தெரிந்து

கொண்டேன். பாழாய்ப்போன நாகரிகத்தில் மூழ்கி நாஸ்திகனாகி நாசமான தொன்றுதான் பலனாகக் கிடைத்தது. இந்த நாகரிகப் பேயைப் போன்ற கொடிய விஷம் வேறு எதுவும் இல்லை என்பதை நான் அனுபவ பூர்வமாய்த் தெரிந்துகொண்டேன். அந்த மாயையில் மூழ்கி, என் வாழ்நாளைக் கடத்திப் பாழாகிவிட்டேனே என்று நான் மிகவும் வருத்தமுறுகிறேன். அக் கொடிய படாடோபத்தினால் நான் பெருமையடைவதாக எண்ணி மகிழ்ந்ததெல்லாம் வறுமையும் சிறுமையுந்தான் என்பதைத் தெரிந்துகொண்டேன். ஆடம்பரத்தினால் உண்டான மூட மகிழ்ச்சியெல்லாம் அகம் வெந்து உருகும் தன்மையாக மாறிவிட்டன. நாம் நமது பழக்கத்தைவிட்டு மாறாது இருந்தால், எத்தனை மேன்மையாக இருந்திருக்கலாம்? உம். அறிவு உண்டாகப் படித்ததெல்லாம் அறிவு வற்றிடச் செய்து விட்டன. சென்றது செல்லட்டும்; இனியேனும் சுகப்படும் வழியைத் தேட வேண்டியே வந்தேன். இதோ! மோட்டார் கம்பெனிக்காரன், "இன்னும் மூன்று நாளைக்குள் பணத்தைக் கட்டாவிட்டால் மோட்டாரை ஜப்தி செய்து விடுவோம்" என்று கடிதம் எழுதிவிட்டான். என்னுடைய மனைவியாக நீ இருந்தும் என் நிலைமையைச் சற்றும் கவனிக்காது அன்னிய ஸ்திரீயைப்போல் இருக்கிறாய்! கம்பெனிக் கடன் ஒரு புறம் இருக்க, என் உடைகள் வாங்கிய துணிக்கடையின் கடன் ஒரு புறமும், வீட்டு வாடகை ஒரு புறமும், மருந்து—ஷாப்பின் பாக்கி யொருபுறமும் ஆக நான்கு பக்கங்களிலும் என் கழுத்திற்குக் கத்தியாக ஆபத்து வந்துவிட்டது. அதோடு இந்தப் பங்களாவை நாம் இன்னும் ஒரு வாரத்தில் காலி செய்துவிடவேண்டுமாம்; சிறிய வீடொன்று வாடகைக்குப் பார்க்கவேண்டும். இத்தனை சல்லியங்களும், சங்கடங்களும் உண்டாயின. மேனாட்டுப் பழக்கத்தின் ஆடம்பரத்தின், டம்பத்தின் தொல்லையல்லவா இவை

யெல்லாம்? சாதாரணமான வாழ்க்கை நடத்தியிருந் தால், நாம் எவ்விதமான மேன்மையிலும் மகிழ்ச்சியி லும் பொருந்தியிருக்கலாம்? உம். கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்வதில் ப்ரயோஜனமென்ன? நான் அந்தச் சண்டாள அட்டகாசத்தையும், நாகரிகத்தை யும் தற்போது விஷம்போல எண்ணிவெறுக்கின்றேன். என் கண்மணீ! நாகரிகத்தால் உண்டான மிடியை அந்த நாகரிகத்தை உண்டாக்கிய பொருளைக்கொண் டும் இன்னும் சிலவற்றைக் கொண்டும் போக்கிக் கொள்ள உத்தேசிக்கிறேன். அதாவது, என் சிறிய மோட்டார்கார் ஒன்றுமட்டும் வைத்துக்கொண்டு உன் பெரிய வண்டியையும், உனது வைரம் பதித்த நெக்லேஸையும் விற்றால் நம் கடன்களெல்லாம் அடைந்துவிடும்; நிம்மதியாக இருக்கலாம்; பிறகு நமது அதிர்ஷ்டம் கூடும் சமயத்தில் இவைகளை மீண் டும் அடையாலாம். இச் சமயம் எனக்கு நீ இந்த உதவியைச் செய்யவேண்டும்; அதைக் கோரியே நான் இங்கு வந்தேன்" என்று வெகு நயமாகக் கூறி முடிக்குமுன்னர், மனோஹரி மிக்க ஆத்திரமும், கடு கடுப்பும் கொண்டு பேசத் தொடங்கி, "ஓஹோ! பல் லைக் காட்டிக்கொண்டு இவ்விடத்திற்கு வரும்போதே ஏதோ பலத்த அஸ்திவாரத்துடன் வருகிறீர்கள் என் பதை நான் அறிந்தேன். நினைத்தவண்ணமே நடந் திருக்கின்றது. என் சுகமான ஜீவியத்திற்காக ஒரு பைசா நான் உங்களைக் கேட்டதுண்டா? என் சகல காரியங்களுக்கும் எனது உழைப்பினால் வருவாய் செய்து கொண்டுபோகையில், அதிலும் தாங்கள் பெருத்த பங்கா ளியாக வருவது வெகு அழகாயிருக்கிறது. ஏற்கெனவே தெரிவித்தவாறு நான் சீமைக்குப் போவதை உத்தே சித்து என் மோட்டார் காரை விற்றுவிட்டேன். தற் போது நான் வாடகை வண்டியில்தான் செல்கிறேன். என் பிதா செய்து போட்ட வைர ஹாரத்தை நான் எக்காரணம் பற்றியும் விற்க முன்வரமாட்டேன்.

தாங்கள் மோட்டார் வாங்கும்போதே நான் உங்களுக்கு மாதம் நூறு ரூபாய் கொடுப்பதற்குச் சக்தி இருந்தால் வாங்கலாமென்றல்லவா சொன்னேன்! அதை அப்போது ஏன் கவனிக்கவில்லை? அந்தக் கடனுக்கும் நான் எவ்விதம் பாத்தியமாகக்கூடும்? உங்கள் கடனுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நான் அடுத்த வாரத்துக் கப்பலில் இங்கிலாந்து செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. உங்கள் அஜாக்கிரதையாலும், சம்பாதிக்க வகையறியாத தன்மையினாலும் உண்டாகிய கடனுக்குப் பிறரைப் பொறுப்பாளி ஆக்குவது கூடாத காரியம். கணவனும் மனைவியும் என்றால், எந்தவரையில் உறவோ அந்த வரையில் பாத்தியமேயன்றிக் கடனுக்கும் ஜாமீன் கையெழுத்திற்கும் மனைவியை இழுப்பது தகாது. இவ்விதம் செய்யும் வழக்கமெல்லாம் கர்னாடகமான மூடப்பழக்கமேயன்றித் தற்காலத்திற்கு ஒவ்வாது. புருஷத் துணை ஒன்றிருந்தால் நலமென்ற நோக்கத்துடன் மணப்பதுதான் இக் கால தர்மம். முற்காலத்திய பெண்களுக்குக் கல்வி அறிவோ, நாகரிகமோ ஒன்றும் தெரியாது. மூடர்களாக இருந்தமையால் அந்த மூடப் பெண்களைப் புருடர்கள் பயமுறுத்தித் தமக்குஅடிமையாக்கி அடிமைபோலவே நடத்திவந்தார்கள். இக்காலத்தில் அந்த அடிமைத்தொழில் என் போன்ற படித்த வகுப்பாரிடம் செல்லமாட்டாது. என் காரியமும் செலவும் அனந்தமுண்டு. அவைகளையெல்லாம் நான் உங்களிடம் கூறுகின்றேனா! அவரவர் வேலையை அவரவர் கவனிப்பதே நாகரிக முறையாகும். நீர் முற்றும் நாகரிக புருஷராய் இருந்தமையால், நான் உம்மை மணந்தேனேயன்றி, கர்னாடகப் பித்தாய் இருப்பின் மணந்திருக்கமாட்டேன். நீர் வீட்டை இன்றே காலி செய்துவிடலாம். நான் அடுத்த கப்பலில் இங்கிலாந்து செல்கிறேன். அதுபரியந்தம் வேண்டுமானால் சிநேகிதையின் வீட்டில் இருக்கிறேன்; அதைப்பற்றியும்

கவலை வேண்டாம். என் இங்கிலாந்து பிரயாணத்திற்கு இப்போதுள்ள பணம் போதாது. அதற்கு நான் உம்மிடம் கடன் கேட்க நினைத்தேன். உமது நிலைமை இவ்விதமாய்விட்டதால் நான் வேறு வழி பார்த்துக் கொள்கிறேன்; என்னிடம் ஒருவிதமான உதவியையும் நீர் எதிர்பார்க்கவேண்டாம். நான் இங்கிலாந்து சென்று எப்போது திரும்புவேன் என்பது எனக்கே தெரியாது. ஆகையால் என் சகலமான சாமான்களையும் எடுத்துக்கொண்டே போகிறேன்'' என்று சற்றும் ஈவு, இரக்கம், கணவன் என்கிற பக்தி விசுவாசம் முதலியனவெல்லாம் பசைக்கும் சிறிதுமின்றி வெகு முடுக்காயும், வெடுவெடுப்பாயும் கூறினாள்.

இதைக் கேட்ட வீரநாதன் முற்றிலும் திகைத்து, ப்ரமித்துப் புதிய மனிதனாக மாறிவிட்டான். ''ஆஹா! இத்தனை துணிபும் அகங்காரமும் ஆணவமும் பாழாய்ப் போன நாகரிகத்தினாலும், நாம் மூடமதியால்கொடுத்த அதிகாரத்தினாலுமல்லவா ஏற்பட்டன? இவளுடைய தலைத்திமிர் மிதமிஞ்சிவிட்டது. உலகத்தில் ஸ்திரீகளுக்குள்ள நால்வகைக் குணங்களிலும் பதிவிசுவாசமேம்பாட்டில் அணுப்பிரமாணமும் இவளுக்கு இல்லாது செய்துவிட்டது, இவள் பட்டம் பெற்றுவிட்ட படிப்பேயாகும். பெண்கள் படிப்பதெல்லாம் நன்மார்க்கத்தையறியவும், அறிவு வளரவும், தம் குடும்பப் பாதுகாப்பிற்கான மார்க்கத்தைச் செவ்வனே தெரிந்து கொண்டு நடப்பதற்கும், உயர்தரமான நூல்களைப் படித்து விஷயம் தெரிந்துகொள்வதற்கும் ஏற்பட்டதாகவிருந்த காலமெல்லாம் கண்மூடிவிட்டதே! படித்த வகுப்பினர்கள் மேற்குறித்த எதுவும் இல்லாமல் சுயேச்சை வகிக்கவும், வர்ணாச்ரம தர்மம் தப்பிநடக்கவும், கேவலம் பெண்தன்மை அகன்று ஆண்மை பாராட்டவும், கணவனையும் குடும்பத்தையும் சிறிதும் மதியாது திமிர்கொண்டலைவதுமாகவுமல்லவோ ஆய்விட்டார்கள்! ஐயோ! இத்தனை கொழுப்பிற்கும்

துணிகரத்திற்கும் நவநாகரிகத்தின் பாழாய்ப்போன மோகமல்லவா காரணமாகிறது! நம்முடைய இந்து தேசத்துப் பெண்மணிகள் நடந்துகொள்ளும் தெய்வீகமான மேன்மையை எல்லாம் இப் பேய்ப் படிப்பு அகற்றி விட்டதே! நாம் பிராணன்போகும் தறுவாயில் அவதிப்படுவதை யுணர்ந்து தானாகவலுவில் உதவி புரிய முன்வருவது போக, இவ்விதம் நாம் கெஞ்சிக் கேட்டும் அந்தச் சொற்களை அலக்ஷ்யம் செய்து திருணமாகப் பேசிய வயிற்றெறிச்சலை யாரிடம்முறையிடுவேன்? ஐயோ! இங்கு ஆடிய ஆட்டங்கள் போதாவென்று இங்கிலாந்திற்கும் செல்வதற்கு என்னை யறியாமலேயே நிச்சயிக்கும்படியான தைரியத்தை அந்த நாகரிகம் கொடுத்துவிட்டதே! ஹா! இதென்ன கோரமான விஷயம்!" என்று தனக்குள் பற்பலவிதமாக யோசித்தவாறு அவளை நோக்கி, "ஆஹா! மனோகரி! இந்த நிமிடம் வரையில் நீ எனது மனைவி என்று நினைத்திருந்தேன்; அந்த எண்ணத்தினாலேயே நான் மதியிழந்து உனக்குச் சகல சுதந்திரங்களும்கொடுத்து என்னுயிர்போல பாவித்து விஷத்தை வேராறுக்காது வளர்த்துவிட்டேன். இப்போதே உன் வேற்றுமையை முற்றும் அறிந்தேன். நான் மோட்டார் வாங்கிய சந்தர்ப்பத்தில் நீ கூறிய வார்த்தையிலிருந்தே உன்னை முற்றும் நான் அறிந்திருக்கலாம். ஆயினும் அவ்வமயம் நானும் உன் போன்று புது நாகரிகத்திற்கு அடிமையாக இருந்தமையால், காமாலைக் கண்ணனின் கதியாக்கிவிட்டது. அதனால் அவைகள் என் மூளையில் பாய்ந்து குத்தவில்லை. என் அறிவை நான் அறியும் தருணம் வாய்த்தபோதுதான் பாழாய்ப்போன சண்டாள ஆடம்பரத்தை வெறுக்கவும், தீய செயல்கள் மனத்தில் படவும் நேர்ந்தன. அவ்வாறு பட்டதனாலேயே கெட்ட காரியம் செவ்வையாகி விடுமா என்பது கேள்வியல்ல. இனிமேலாவது நல் வழியில் திருந்தி நடந்துகொள்ளலாமே யென்பதை உத்தேசித்தே உன்

னிடம் வந்தேன். மனோஹரி! இந்து மதத்தில் பெண் மணிகள், கணவனுக்கும் மனைவிக்கும் சம்பந்தமில்லை என்பதைக்கூறக் கேட்டதுண்டா? கணவன் மனைவி என்ற பாந்தவ்யம் எப்போது உண்டாகின்றதோ அப் போதே அவர்களின் சுக துக்கம் இரண்டும் சம பங் குடையதாயிற்று என்பதை மறுக்கக்கூடுமா! நீ உன் மனம்போன போக்காக இருந்த நாள்கள் கழிந்தன. அவை தொலையட்டும். இனிமேல் நீ இவ்விதம் சுயேச்சை வகிக்க நான் அனுமதிக்கமாட்டேன். உனது பெண்தன்மையை எண்ணி, அதன்படியே நீ நடக்கவேண்டியவள் என்பதை எண்ணு. நீ இங்கி லாந்து செல்வதற்கு நான் சற்றும் சம்மதிக்கமாட் டேன். நமது மேன்மையான இந்துக்களின் குல தர்மத்தை இனியேனும் கடைப்பிடித்துஒழுகவேண்டும் கணவனுக்குக் கீழ்ப்படிந்த மனைவி என்கிற முறையை மறக்காதே! என்னுடைய ஆபத்திற்கு உதவாத பூஷ ணங்கள் எதற்கு? ஆகையால், நீ எனக்கு உனது பூஷ ணங்களில் விலை அதிகமுள்ளவற்றைக் கொடுத்துத் தான் தீரவேண்டும்" என்று சற்று முடுக்காகவே மொழிந்தான்.

மனோ:—உங்களுக்குத் திடீரென்று பித்தம் பிடித்துவிட்டதற்குக் காரணம் என்னவோ தெரிய வில்லை. உங்கள் இந்து மதத்திற்குக் காரணம் என்ன வோ தெரியவில்லை. உங்கள் இந்து மதத்தைக் குப் பையில் போடுங்கள். நான் இம் மதத்தையே வெறுக் கின்றேன். நான் இங்கிலாந்து சென்றதும் சுதந்தர முள்ள கிறிஸ்தவ மதத்தில்தான் சேரப்போகின்றேன். என்னைக் கட்டு செய்வதற்கும் இனி உங்கள் அடிமை மாக இருப்பதற்கும் எந்தச் சட்டமும் புதிதாய்த் திடீ ரென்று உண்டாகிவிடவில்லை. என் இஷ்டம் போல் தான் நான் நடப்பேன். நீங்கள் என்னைத் திடீரென்று ஏதேனும் இம்சை செய்வீர்களாயின், உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதென்று தகுந்த சாக்ஷிகளுடன்

நிரூபித்து உங்கள்மீது வழக்குத் தொடுத்து என் இச்சைப்படி நடக்கும் வழியைத் தேடுவேன். உங்களை நான் அவமானமுறச் செய்வேன். இதற்குச் சாமர்த்தியம் என்னிடமில்லை என்று நீங்கள் எண்ணவேண்டாம். எனது வித்தை, சாமான்ய அடுப்பங்கரை வித்தையல்ல. மேன்மையான பி. ஏ. பட்டம் பெற்றது என்பதை மறந்து பேசவேண்டாம். என் யோக்கியதையை அறியவும் திறமை உமக்கு இல்லை என்று நான் கட்டாயங் கூறுவேன். உமக்குப் பிரியமிருப்பின் என்னுடன் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து என் இஷ்டப்படியே நடந்துகொள்ளும்; இல்லையேல், உமது மனப்போக்கின்படியே தனித்து இருக்கலாம், நான் இங்கிலாந்து செல்வதையும், கிறிஸ்தவ மதத்தில் சேர விரும்புவதையும் யாராலும் மாற்றவியலாது. பாழாய்ப் போன இந் நாட்டிலும் விவாக ரத்துக்கோர்ட்டு அவசியமாய் வேண்டும் என்பதை இனி வற்புறுத்தியேனும் கொண்டுவந்து, சட்டமாக்கவேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம், நீங்கள் என்பொழுதெல்லாம் வ்ரயம் செய்யவேண்டாம். உம்மையே தற்போது கர்நாடக மூடப்பைசாசம் பிடித்திருக்கின்றது என்பதை நான் உணர்ந்தேன். நீர் என் வழிக்கு இனிமேல் வரவேண்டாம். நான் கிறிஸ்தவ மாது என்பதை எண்ணும். இனிமேல் உம்முடன் எனக்குச் சம்பந்தம் வேண்டாம். நான் இப்போதே செல்கிறேன். நீர் என் விஷயத்தில் அனுவசியமாகத் தலையிடுவீராயின் உம் கவுரவம் குறைந்துவிடும். என்னைப் பற்றி நீர் இனி சிந்திக்கவேண்டாம். நீரும் கிருஸ்தவ மதத்தைத்தழுவுவதாகவிருப்பின், என்னுடன் சம்பந்தங் கொள்ளலாம். எனக்கு இந்து மதம் சற்றும் பிடிக்கவில்லை; ஆகையால் என் விஷயத்தில் நீங்கள் ப்ரவேசிக்கவேண்டாம். நான் இப்போதே செல்கிறேன்" என்று கூறிக்கொண்டே எழுந்து செல்ல முயன்றாள்.

இதற்குள் வீரநாதன் வழிமறித்துத் தடுத்துப் பார்த்தான். ஏதும் பலிக்கவில்லை. இதமாயும் கூறினான்; அதுவும் செல்லவில்லை. அவளுடைய மூர்க்கத் தன்மையே முதன்மையாக நின்றது; தனக்கே அவமானமும் அவமதிப்பும் உண்டாகிவிடும்போலாயிற்று.

அச்சமயம் அங்கு வீரநாதனிடம் மருந்துக்கு வரும் மனிதர்களில் இருவர் வந்தார்கள். வீரநாதனிடம் ஏற்கெனவே பழகிய சினேகிதர்களாகையால் அவர்களிடம் வீரநாதன் அப்போதிருந்த மனக்கொதிப்பினாலும், ஆத்திரத்தினாலும் தன் மனைவியின் விஷயத்தைக் கூறிவிட்டான். அவ்வாறு கூறிய மொழியைக் கேட்டவர்களும் பிரமித்துப்போய் மனோகரிக்கு இதம் பேசத் தொடங்கியதும், அவளால் விடப்பட்ட பாணம் போன்ற சொற்களைத் தாங்கமாட்டாது துக்கித்து, "இத்தகைய துஷ்டியுடன் இல்லறம் நடத்துவது இனி கூடாத காரியம்" என்று எண்ணி, அதைக் கூறியும் விட்டார்கள்.

வீரநாதன் அப்போதும் மனம் கேளாது பற்பல விதத்தில் நயத்திலும் பயத்திலும் மனோகரிக்குக் கூறியதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராய்விட்டது. மனோகரி ஒரே பிடிவாதமாய், "இனி உங்களுடன் நான் இருக்கமுடியாது" என்று முறியல்சீட்டு எழுதிப் போட்டுவிட்டுத் தன் பெட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு, "இனி உமக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. நீர் இந்து; நான் கிறிஸ்தவ மாது'! என்று கூறிக்கொண்டு ஓடியே போய்விட்டாள்.

அதிகாரம் 3

அந்தோனியுடன் திரிந்த தாந்தோனி

மனோஹரி சென்றதைக் கண்ட வீரநாதனுடைய மனம் மிகுந்த வருத்தத்தை யடைந்தது. அவள் அவ்வளவு தூரம் மிஞ்சிவிட்டதனால், அவன் மனமும் வெறுத்தது. "சீ! துஷ்டை! ஜாதியையும், மதத்தையும்,

தேசத்தையும் வெறுத்து நீக்கி அன்னிய மதத்தில் சேர ஆசிக்கும் ஜாதிப் பிரஷ்டையுடன் வாழ்க்கை கொளல் கூடுமானதல்ல. ஆகையால், சனியன் தொலைந்து போகட்டும்” என்று மன உறுதி செய்து கொண்டு, அவளை அதற்குமேல் தடுக்காமல் விட்டு விட்டான். “ஆஹா! அத்துமீறிய படிப்பின் அலங் கோலமல்லவா இது!” என்று தனக்குள் பெருத்த வேதனையில் ஆழ்ந்து இடிந்துபோய்ச் சற்று நேரம் தவித்தான். பின்னர் மனோகரியின் அறையில் சென்று முற்றும் கவனித்தான். அவ் வறையில் அவளுடைய சட்டையொன்றுமட்டும் மறந்து வைத்துவிட்டாள். அந்தச் சட்டைப்பையில் ஓர் கவர் வைக்கப்பட்டிருந் தது. அந்தக் கவரை எடுத்துப் பிரித்துப் படிக்க லானான். அது பின்வருமாறு:—

“என் அன்புள்ள ஸாமியூல்! இனி உனக்கு இப் பெயரையே அளிக்கின்றேன். நீ உன் இந்து மதத்தை விட்டு விட்டு என் மதத்தில் சேர்ந்தவுடன், என்னை விவாகம் செய்துகொள்வதாக வாக்களித்ததைப் பற்றிச் சந்தோஷம். எனது அன்பும், முத்தங்களும் உனக்கு அளிக்கின்றேன்.

இங்ஙனம், உன் காதலன்,
அந்தோனி.”

அதைப் படித்ததும் வீரநாதனுடைய அங்கமும் ஆவியும் துடித்தன. “ஆஹா! அந்தரங்கத்தில் இத்தகைய ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டு, அவள் ஓடி யிருக்கிறாள். சீச்சீ! துஷ்டே! ஜாதிப்ரஷ்டே! இனி அந்தச் சனியனுக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை. அநியாய ஆடம்பரமும், மேனாட்டுப் பழக்க மும், மிதமிஞ்சிய படிப்பும், புது நாகரிகப்பேயும் ஒன்று கூடினால் ஆளை அடியோடு பாழாக்கிவிடுமென் பதை நமக்கு அனுபவ பூர்வமாய்க் கண்டறியும்படி யாகச் செய்த கடவுளை ஆயிரந்தரம் வணங்குகின்

றேன்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டு, தன் இருப்பிடம் வந்துசேர்ந்தான்.

அவன் மனம்மட்டும் நிம்மதியடையாது, குழம்பிக்கொண்டே யிருந்தது. தான் இதுகாறும் இருந்த மௌட்டீகத்தன்மையை எண்ணி வருந்தினான். தன் அறிவிலாத்தன்மையை யறிந்தான். பித்தங்கொண்டவன்போல படுத்துப்புரண்டான். "ஆஹா! நவ நாகரிகமே! நீ செய்த கொடுமை ஒன்றா, இரண்டா! நீ அண்டியவிடமெல்லாம் அனர்த்தந்தானே. உன்னை நேசித்தவர்கள் என்னைப்போன்று பலவிதத்திலும் பாழாகும் பாவத்தைத் தாங்கும் சுமைதாங்கியாகிவிட்டார்கள்; விடுவார்கள்; விடப்போகிறார்கள். ஏ அநியாய நாகரிகமே! உன் மயக்கமல்லவா என்னைப் பலவிதத்திலும் தொல்லைக்குள்ளாக்கியது! உன்னாலன்றோ தாய்நாட்டு வழக்கத்தை யொழித்தேன். தாய்ப்பாஷையைத் துறந்தேன். பெற்றோர் என்ற மதிப்பைக் கைவிட்டேன். கடன்காரன் என்கிற பட்டத்தைப் பெற்றேன். மனைவியினாலும் அவமதிக்கப்பட்டேன்; பித்தன்போலத் தவிக்கலானேன்.

ஆ! என்ன செய்வேன்? கண்ணியமான முன்னோர்களின் ஆசாரப்படிக்கு நமது சநாதன தர்மத்தைக் கைவிடாது அனுஷ்டித்து, சாதாரணமான அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கும் பெண்ணை மணந்திருப்பேனாயின், அவள் என் மதியீனத்தையும் போக்கி, என் ஆடம்பர டம்பாச்சாரித்தன்மையையும் நீக்கி, என்னைக் கடனாகிய கடலில் விழவொட்டாது தடுத்திருப்பதுடன், இத்தகைய சந்தர்ப்பம் வாய்த்துவிட்ட தருணம் தனது தலையைக் கொடுத்தேனும் காப்பாற்றும் வீரசிகாமணியாய் உதவி புரிந்திருக்கமாட்டாளா? இவ்விதம் கைவிட்டுவிட்டுச் சோரத்தனமான நடவடிக்கையுடன் ஜாதியைவிட்டு ஓடுவாளா? ஐயோ! படித்த பெண்ணையும், பட்டம்பெற்ற பெண்ணையும் நமக்கு இல்லாள் வந்துவிட்டாளே, நமது ஜன்மமே

புனிதமாய்விட்டதென்று எண்ணினேனே! அத்துமீறிய படிப்பின் பயனை இப்போது அடைந்துவிட்டோமே! இந்தக் கேடுகளெல்லாம் உண்டாகுமென்பதை உணராமலா நம் பெரியோர்கள் அதற்கு ஏற்றவாறெல்லாம் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அந்த அரிய நோக்கத்தை அறியாது பாழாய்விட்டோமே! இருவகையிலும் சுகப்படாத மகா பாபியாய்விட்ட என் கதியின் முடிவு எவ்வித பயங்கரத்திலிருக்கின்றது. நாளைய தினம் மோட்டார் கம்பெனிக்குப் பணத்தைக் கொடுக்காவிட்டால், மோட்டாரைக் கைவிட்டு அவமானமுறத் தயாராக இருக்கவேண்டுமே! ஹா! கஷ்டமே! கஷ்டமென்பது இப்போதல்லவா எனக்குத் தெரிகின்றது! இந்த மதி நுட்பமும் உணர்ச்சியும் அப்போதே இருந்திருக்குமாயின், எத்தனை மேன்மையுள்ளவனாய் விளங்குவேன்? ஐயோ! நாளையப்பொழுதை எவ்விதம் கழிப்பேன்?

58755

கடவுள் ஒருவர் உண்டு என்ற ஓர் அபூர்வ சக்தியை என் உள்ளம் இப்போதேனும் உணரும்படியான அருளைப்பாலித்த கடவுளை வணங்குகின்றேன். என்னப்பனே! ஜகதீசா! உன் மகிமையையும் உன் நாமத்தின் எழிலையும் சற்றும் தெரிந்துகொள்ளாத மகா பாபியாய்க் காலத்தைக் கடத்திக் கடன்காரனாயும், கசடனாயும் ஆகிவிட்டேனே! நான், இனியேனும் நன் மார்க்கத்தில் நடக்கும்படியான பேரருளைப் பிரியமுடன் அளித்துக் காப்பாற்றவேண்டும் அப்பனே! உன்னை ஏற்றித் தொழும் வகையும் அறியேன். புண்ணியம் செய்யும் புதை வழியும் அறியேன். கடந்த நாள் முற்றும் உன்னைக் கருத்தில் கொள்ளாது, நடக்கும் நாளைக்கு நற்கதியளிக்கவேண்டுவது என்னறியாமையை விளக்கவில்லையா! என்னப்பனே! சர்வேசா! தீனபந்தோ! நாளைய தினம் நான் எவ்விதம் என் மானத்தைக் காப்பாற்றுவேன்?" என்று பலமுறையில் வருந்திக் கண்ணீர் வடித்தான். அவனுடைய துயரம்

கரைபுரண்டுவிட்டது. வெகு நேரம் புலம்பிய வண்ண மாகவிருக்கையில், கிழவருக்கு நினைவுவந்தது தெரிந்து, உடனே எழுந்து அவரிடம் வந்தான்.

அப்போதும் கிழவர் கண் மூடியவாறு படுத்திருந் தார். அவரைமெல்ல எழுப்பி, மீண்டும் நீராகாரம் சிறிது செலுத்தி, மருந்துகொடுத்துவிட்டு, "தாதா! உம் வீடு எங்கே இருக்கிறது? உமது மனுஷ்யர்கள் யாரேனும் இங்கு உண்டா?" என்று கேட்டான். கிழவர், பதில் சொல்லாமையால் தொந்தரவு செய்ய லாகாதென்று எண்ணி, மீண்டும் தனது அறைக்குச் சென்று சற்று யோசனை செய்ததில் ஒரு தீர்மானம் தோன்றியது. அவ்வாறு தோன்றியதும் நேரே தன் தாய்தந்தையரிடம் சென்று, அவர்களின் காலில் விழுந்து வணங்கி, "என்னரிய பெற்றோர்களே! உங்க ளுடைய பூர்வாசாரத்தை அவமதித்து நடந்ததன் பயனை அறிந்தேன்" என்று நடந்த வாலாற்றை விவர மாகக் கூறி, அவர்களின் மன்னிப்பைக்கோரினான். இதைக்கேட்ட பெற்றோர்கள் வருந்திக் கண்ணீர் வடித்தார்கள். நொந்துபோய், தானே தன் குற்ற முணர்ந்த தமது மகனைத் தாங்கள் அதிகமாகக் கோபிக்கச் சம்மதியாது, அவனை மன்னித்தார்கள்.

பிறகு, நேரே மோட்டார் கம்பெனிக்குச் சென்று தனக்குப் பணம் கொடுக்கத் தற்போது முடியாதென் றும், அந்த வண்டியைத் தாங்களே எடுத்துக்கொண்டு பாக்கி இல்லை என்கிற ரசீதுகொடுத்து விடும்படியும் கேட்டுக்கொண்டான். முன்னால் கொடுத்த பணத் துடன் மோட்டாரும் திரும்புவதால், அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ரசீது கொடுத்து விட்டார்கள். "அப்பா! ஒரு சனியன் தொலைந்தது. மீதியுள்ள வற்றிற்கு வழிதேடவேண்டும்" என்று எண்ணி வீட்டையடைந்தான்.

வீட்டில் தான் முன்னர் தைத்த ஆடம்பரமான கால்சட்டைகள், உயர்தரமான கோட்டுகள், ஸில்கு,

சரிகை உருமாலேகள், நெக் டை, காலர் முதலிய எல்லா வற்றையும் ஒரே மூட்டையாகக்கட்டி எடுத்துக் கொண்டு, ஏலக்கடைக்குச்சென்று ஆளே வைத்து குறைந்த விலேயில் எல்லாவற்றையும் அன்று பூராவும் விற்றுவிட்டான். அவைகளேயெல்லாம் அவன் புதிதாக வாங்கியபோது சுமார் ஒரு ஆயிரத்துக்குக் குறை யாமல் செலவாகியது. தற்போது அவற்றினல் மிகவும் குறைவாய் 350 ரூபாய் கிடைத்தது. அவன், அம்மட்டு மேனும் கிடைத்ததை எண்ணி, மிகுந்த சந்தோஷத்தை யடைந்து, அதைக்கொண்டுவந்து, வீட்டுக்காரனின் பாக்கியாகிய 200 ரூபாயைக் கொடுத்துவிட்டு மிச்ச முள்ள 150 ரூபாயைக்கொண்டு மருந்து ஷாப்பிற்குக் கொடுத்து, மற்றவற்றை அடுத்தமாதம் தருவதாகக் கூறிவிட்டு வீட்டிற்கு வந்தான். அதற்கப்புறமே அவன் மனம் சற்று நிம்மதியடைந்தது. அவனுடைய விலேயுயர்ந்த வைர மோதிரத்தையும் விற்க விலேகூறத் தொடங்கினன். அதையும் விற்று மருந்து ஷாப்பின் பூராத்தொகையையும் கொடுத்துவிட்டு, ஓர் சிறிய வீடு வாடகைக்குப் பார்த்து, அதில் மறுதினமே குடியேறி னன். கிழவரையும் கூடவே அழைத்துச் சென்றான்.

அவருடைய தலேயில் பட்ட அடியின் காயம் மிகவும் பலமாக இருப்பதாலும், அது அதிகமாகக் கிளேத்துவிட்டதாலும் சீக்கிரம் ஆருமல் இருந்தது. அதற்கான சிகிச்சையை விடாது நிரம்பவும் அக்கரை யுடன் செய்துவந்தான். வீட்டை விட்டுச் சென்ற மனேகரி மீண்டும் எட்டிப் பார்க்கவில்லே. வீரநாதன், தான் கண்டெடுத்த கடிதத்தைக் கொண்டு அந்த நாகரிகப் பேயினிடம் காட்டித் தன் கோபத்தைத் தணித்துக்கொள்ள எண்ணினன். அவளிருக்கும் விடு திக்குச்சென்று விசாரிக்கையில், "அவளும் மற்றை யோரும் முன்தினம் இரவே பம்பாய்க்குப் போய் விட்டார்கள்; அங்கிருந்து சீமைக்கும் போவதாகச் சொல்லிவிட்டார்கள்" என்ற செய்தி எட்டிற்று.

உடனே வீரநாதன் சனியன் தொலைந்ததென்று மனத்தை வெறுத்துக்கொண்டு, வீடு வந்து சேர்ந்தான். வீரநாதன் முற்றிலும் புதிய மனிதனுக மாறி விட்டான். (டு லெட்) காலியாகக் கிடந்த அவன் நெற்றியில் அழகிய வெண்ணீறு அமர்ந்தது. சாதாரண மான வேஷ்டி கட்டலானுன். தலையிலிருந்த கிராப்பு பறந்து குடுமி ஏற்பட்டது. சதா ஆங்கிலத்தில் பேசிய தெல்லாம் நீங்கி தாய்ப் பாஷையே பேசலானுன். இன்னும் இவைபோன்ற மாறுதல்கள் அநேகம் உண்டாயின. தினந்தோறும் தேவாலயத்திற்குச் செல்வதும், வீட்டில் பூஜை முதலியன செய்வதும், தன் தாயார் வீட்டு வேலைகளைச் செய்கையில் தானும் ஒழிந்த நேரங்களில் உதவிபுரிவதுமாகத் இருந்தினுன்.

கிழவருக்குச் சரியானபடி நினைவு உண்டாவதற்கு 4 நாட்கள் சென்றன. பிறகு அவர் சுய நினைவுடன் கண்திறந்து வீரநாதனைக் கண்டு தாங்கமாட்டாத துயரத்துடன் ஓவெனக் கதறினுர்.

தன்னைக் கண்டு அவர் திடீரென்று கதறியதைக் கண்ட வீரநாதன் வியப்பும், பிரமிப்புமடைந்து, கிழவரருகில் சென்று "தாதா! இதென்ன, தாங்கள் திடீரென்று புலம்புகிறீர்கள்? காரணம் தெரியவில்லையே! தாங்கள் யாரென்பதும் இத்தனை நாட்களாகத் தெரியவில்லை. அதோடு உங்களைக் காணுமே என்று உங்கள் மனிதர் ஒருவரும் வந்து தேடவு மில்லை. இதைப் பற்றி நான் பேப்பரிலும் விளம்பரம் செய்தேன். ஒருவரும் வந்து கேட்கக் காணவில்லை. தாங்கள் புலம்புவதிலிருந்து என்மீது ஏதேனும் மனஸ்தாப முண்டோ என்று என் மனம் பதறுகின்றது. நான் ஏதேனும் என்னை யறியாது தப்பிதம் செய்து, அதனுல் தங்களுடைய மனத்திற்கு வருத்த மேற்பட்டிருக்குமோ, என்னவோ தயவுசெய்து கூறவேண்டும்" என்று நிரம்பவும் வாஞ்சையுடன் கேட்டான்.

இது கேட்ட கிழவர் மனந் தவித்தவாறு வீரநாத னைத் தன் இரு கரங்களினாலும் தழுவிக்கொண்டு, "ஹா! என்னப்பனே! சுகுணதீரா! வீரநாதா! என்னை இன்னானென்று தெரிந்துகொள்ளக் கூடாத நிலைமை யில் என் விதி முடிந்தது. என் செல்வ மருமகனாக உன்னை நான் அடைய எண்ணியும் துரதிர்ஷ்டவசத் தாலும், பாழாப்போன நாகரிகப் பேயின் கூற்றாலும் அது எனக்குக் கிட்டாது போயிற்று. என்னை யறி யாத வாஞ்சையால் நான் என் குமாரத்திக்குக் கொடுத்த சுயேச்சையினால் என் குடும்பமே, என் வம்சமே பாழாய்விட்டது" என்று அவர் கூறியதைக் கேட்டதும், வீரநாதன் திடுக்கிட்டான். "ஹா ! ரமா மணியின் தந்தையா நீங்கள் ? ஐயோ ! இதென்ன கோலம் ! தாங்கள் இத்தனை நாள் எங்கிருந்தீர்கள் ? தங்களின் தேவியார் எங்கே ? ஐயோ ! என் மனம் பதறுகின்றதே!" என்று வெகு ஆத்திரத்துடனும், பரிதாபத்துடனும் கேட்டான்.

கிழவர்:—அப்பா ! இத்தகைய உத்தம சிகாமணி யாகிய உன்னை நாங்கள் மருமகனாக அடைந்திருந் தால், எங்கள் மனம் எத்தகைய சந்தோஷத்தை யடைந்திருக்கும். என் மகளின் கதி அவ்வாறாகிய பிறகு நாங்கள் மனம் வெறுத்துச் சென்றுவிட்ட மறு வருஷமே என் மனைவியும் வானுலகம் சென்றாள். என் னாவிபோன்றும் என்னிரு கண்மணிகள் போன்றும் இருந்த இருவரையும் பறிகொடுத்த மகாபாதகனாக ஆகி விட்டேன். என்னுயிர் நீங்காத சவமானேன். என் னுடைய அறியாமையினாலும், நமது பழக்கத்தைவிட்டு இதாநாட்டுப் பழக்கத்தை அனுஷ்டித்து நாஸ்திகனாகத் திரிந்ததாலும் என்னுடைய கதி இவ்வாறான அலங் கோலம் அடைந்துவிட்டதை நன்றாக கடவுள் விளக்கி விட்டார். சீ ! இனிமேல் இத்தகைய நாகரிகத் தீயில் மயங்குவோர் இறுதியில் இவ்விதமான கதியைத் தான் அடைவர் என்ற எண்ணம் எனக்கு உண்டா

கியது. நான் எனது விசனங்களைச் சற்று உள்ளடக்கிக்கொண்டு, "இந்த வீண் நாகரிகப் பேயை விரட்டுங்கள். இதில் மூழ்கி நாசமடையாதீர்கள்! இந்தப் பைத்தியக்கார நாகரிகத்தை அனுஷ்டித்து நாஸ்திகர்களாக ஆகாதீர்கள். நரகத்திற்குப் போகாதீர்கள்! பாழாய்ப்போன நாகரிக மயக்கத்தில் சிக்கிவிட்டால், அது மனிதரைப் பலவிதத்திலும் கெடுத்துவிடும்; அகம்பாவத்தையும், நாம் என்கிற மமதையையும், தீய பழக்கங்களையும், கொடிய எண்ணங்களையும், அச்சமற்ற தன்மையையும், அழிந்துபோகக்கூடிய சுயேச்சாதிகாரத்தையும், துர்க்குணத்தையும், ஈவு இரக்கமற்ற கடினத்தன்மையையும், பக்தியின்மையையும், போன போக்கெல்லாம் நடக்கும்படியான தைரியத்தையும், பர்த்தா, மனைவி, மற்றைய பெரியோர் பந்துக்கள் என்கிற மரியாதை இன்மையையும் உண்டாக்கும். அன்பும் குன்றி, அலக்ஷியம், துன்மார்க்கம், இன்னும் இவைபோன்ற அலகிலாத கேடுகளையெல்லாம் அந்தச் சண்டாள நாகரிகம்—குலங்கெடுக்கும் பாஷன்—செய்துவிடும். இது எனது அநுபவம். நான் பாடுபட்டு அறிந்து பழகியதால் இந்த விஷயங்களைப் பொது மக்களுக்கு உரைக்கின்றேன். நவநாகரிகத்தைவிட்டுத் தள்ளுங்கள்; நம் பெண்கள் கோணவகுடு எடுக்கவாரம்பித்த ஒரு குறியினாலேயே உலகமே கோணலாக மாறும் தன்மையாய்விட்டது. நெற்றிக்கு நேராக உள்ள வகுட்டைக் கோணல் செய்ததானது, சரியான வழியில், மேன்மையான போக்கில், நாம் செல்வதை விட்டுத் தீய காரியங்களில் பிரவேசிக்க ஏதுவாயிற்று. பெண்கள் வகுட்டைக் கோணல் செய்துகொண்டால் அவர்கள் முற்றும் கோணலாகி விடுவார்கள் என்கிற ஐயத்தையே அது உண்டுபண்ணுகின்றது. இவ்விதமே தான் பல விஷயங்களும் கோணலாய்விடுகின்றன. ஆடவர்கள் தலையில் அழகிய குடுமியை நீக்கி, நவநாகரிகமான கிராப்பு வைத்துக்கொள்வதானது சகல

காரியமும் ஜனன, மரண, நரக, மோக்ஷமும் மொட்டையாகத்தான் முடியும் என்பதைத் தெரிவிக்கின்றது. பெற்ருேர்களே! இவ்விதமான ஆபாசங்களை நீக்குங்கள். உங்கள் பெண்மணிகளுக்குச் சுயேச்சை கொடுக்கவேண்டாம். சுயேச்சையால் தீமை தொடரும் என்பதை நினையுங்கள். பெண்களுக்கு, குலாசாரப்படிக்கு அவரவர்க்கென ஒவ்வோர் தக்க துணைவன்—பிராணநாதன்—காப்பாளியைத் தேடி விவாகத்தைச் செய்துகொடுத்துவிட்ட பின்னர், தம்பதிகள் இருவருமாக சுயேச்சையாக ஒத்து அன்புடன் தம் வாழ்நாளைக் கடத்தட்டும். அப்போது அவர்களின் இஷ்டம்போல் படிப்பதோ, பட்டம் பெறுவதோ செய்தால் அவ்வளவு கெடுதி சம்பவிக்காது. ஏனெனில், அவளுடைய நாதனின் ஆளுகைக்குள் அவளுக்கு ஹானி நேரிட வழி இராது. பாலியம் முதற்கொண்டு பழகித் தனது அன்பு முழுவதையும் தன் நாயகன்மீது வைத்து அவனிடம் பக்தி சிரத்தையுடன் அவன் இஷ்டப்படியே நடக்க அவளுடைய மனம் தாவும். இதர விஷயங்களில் மனம் பிரவேசிக்காது. மனத்திற்கும், ஆவிக்கும், அன்பிற்கும், தனது சகலமான போஷணைக்கும் கர்த்தா அவன் என்கிற ஓர் உத்தமமான உறுதி மனத்தில் ஜெனித்துவிடும். அவ் உறுதியினுல் அவள் அபாயமின்றி வாழலாம்.

வயது சென்ற பின்னரோவெனில்; மனம் அன்பை அறிந்துவிடுகின்றது. ‘அவன் வேண்டும்; இவன் வேண்டாம்’ என்கிற வேற்றுமை உண்டாகிவிடும். அவள் மனம் செல்லுமிடம் சம்பந்தம் செய்யத்தகாதவிடமாகவிருப்பின், பெற்ருேருக்குத் துன்பம். அதை விட்டு வேறு இடத்தில் மணம் செய்வித்தால், பெண்ணின் மனம் முன்னவனை நாடிப் பாழாய்விடும். ஆகையால், அன்பை முதலிலிருந்தே பர்த்தாவின்மீது வளரச்செய்வதற்கு நாம் முயல வேண்டும். நாகரிகப் பேய் இன்று ஒன்றைத்தாவும்;

நாளை யொன்றைத் தள்ளும். இவ்விதமான நாகரி கத்தில் மூழ்கியதால், நான் என் மகளையும், மனைவியை யும் இழந்து ஒண்டி (ஒன்றி) யானேன்; அதைக் கூறவே துணிபுகொண்டேன்" என்று கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பிரசங்கம் செய்யத்தொடங் கினேன். இவைகளைப்பற்றிப் பல பத்திரிகைகளிலும் எழுதினேன். என்னால் கூடியவரையில் எனது பணங் களையெல்லாம் தருமத்திற்கும், ஏழைக்குடும்பங்களுக் கும் செலவிட்டேன். எனக்கு எனது ஜென்ம பூமிக் குச் செல்லவேண்டுமென்ற ஆவல் உண்டாயதால், மீண்டும் அவ்விடம் வந்தேன். அங்கும் எனக்கு இருப் புக்கொள்ளவில்லை. மீண்டும் ஊர் சுற்றக்கிளம்பி னேன். இவ்விடம் வந்து ஒருவாரமாயிற்று. அன்று ட்ராமா நோட்டீசும், போட்டோவும் வீதியில் கண் டெடுத்தேன். அந்தப் போட்டோவிலிருந்த உருவம் என் கண்மணி ரமாமணியின் உருவம் போலவே இருந் தது. அதைக் கண்டு என் மனம் கட்டு மீறிய வருத் தத்தை அடைந்தது.

அந்த மனுஷியை நேரில் கண்டு களிக்கவேண்டி மனம் தாவியதால், டிக்கட்டு பெற்று அங்குவந்தேன். அங்கு ஆடிய அந்த மாது என் ரமாமணியைப்போ லவே தோன்றி, என்னைச் சற்று மகிழ்வித்ததால், முற் றிலும் உட்கார்ந்திருந்தேன்; புலம்பினேன். ஏது செய் தால், இனி மாண்டவர்கள் மீண்டும் வரப்போகிறார் கள்! இல்லை. பின்னர், நான் திரும்பி வருகையில்தான் இக்கதிக்கு ஆளானேன். நான் என் மகளைப் பறிகொ டுத்ததும், நாகரிகப்பேயை வெறுத்ததும் இந்தத் தீக்ஷையை வைத்துக்கொண்டேன். என் காலம் முடி யும் சமயமும் நேர்ந்துவிட்டது. நவ நாகரிகம் செய்த கதியை எண்ணி வருந்தும் என் காதினலேயே உன் சம்சாரத்தின் வார்த்தைகளை அன்று கனவு காண்பது போலக்கேட்டேன். கண்ணினலும் பார்த்தேன். நீயும் என்னைப்போல நாகரிகத்தினல் நாசமடைந்துவிட்டு,

அந்த நாகரிகத்தை வெறுத்ததையும் அறிந்தேன். இந்த நான்கு நாளாக என்னால் பேசக் கூடாத விதமாக ஏதோ செய்ததேயன்றி, விஷயங்களை என் மனத்தில் அறியும் நினைவு மட்டும் இருந்தது. என்னப்பனே! நவ நாரிகக் கொடுமையை இருவரும் சமமாக அனுபவித்த உறவும் ஆகிவிட்டோம். என் சகலமான ஐச்வரியமும் செலவாகிவிட்டது. எஞ்சியுள்ள ஓர் ஆயிரம் ரூபாயும் பையில் என் மடியிலிருக்கிறது. அதை நீ செய்த பேருதவிக்காக எடுத்துக்கொள். என் உயிர் இனி அதிக நாழிகை நிலைக்காது. இன்னும் சிறிது நேரத்தில் நீங்கிவிடும். உனக்கு உனது குண விசேஷத்திற்கு ஒத்த மனைவி கிடைக்காமல், இத்தகைய தாமகேது கிடைத்ததை எண்ணி நான் மிகவும் வருந்துகிறேன். நீ என்ன சொல்லியும் அவை அவளுடைய செவிக்கு எட்டாதது பெரிய வியப்பாயிருக்கிறது. உம். வியப்பாவானேன்! நவ நாகரிகத்தின் கேடு இது— என்று மெல்லத் தள்ளாடியவாறு கூறினார்.

வீர:—அன்பீர்! தங்களுடைய வார்த்தைக்கும், செய்கைக்கும் என்ன பதில் பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை. ஐயோ, நாகரிகமே! பாழும் நாகரிகத்தை என்னென்பேன்! என்னை அறியாது நான் மயக்கத்தில் மூழ்கி மோசம் போனேன். உங்கள் புதல்வி இறக்குங்காலையில் எழுதிய கடிதத்தைக்கண்ட பின்னரேனும் நான் நாகரிகத்தை விட்டேனா! நற்குணவதியாய், அறிவின் வளர்ச்சிக்காகப் படித்த நல்லாளை நான் மணந்தேனா! என் கர்மம் என்னைப் பலவிதத்திலும் ஆட்டிவிட்டது. உம். அந்தச் சனியனெல்லாம் தொலையட்டும். தாங்கள் திடீரென்று தங்கள் மரணத்தைக் கூறக் கேட்க என் மனம் நடுங்குகின்றதே!'' என்று கூறிக்கொண்டே நாடியைப் பார்த்தான். நாடி நின்றுவிட்டதுகண்டு திடுக்கிட்டான். அவனால் கூடிய வரையில் ஏதேதோ மருந்தைக் கொடுத்தும்பார்த்தான்.

கிழவர் கண்ணைத் திறக்காத ஒரே தூக்கமாய்த் தூங்கிவிட்டார்.

கிழவரின் மரணத்தைக் கண்டு நிரம்பவும் விசனித்து வீரநாதனே அவருக்கான சகலமான கருமாதிகளையும் செய்தான்: "ஐயோ! பாழும் சுயேச்சையும் நாகரிகமும் கூடி இப்படி ஒரு குடும்பத்தையே அதம் செய்துவிட்டனவே! ஆஹா! இவர் இருந்த இருப்பென்ன? இறந்த கண்றாவி என்ன?" என்று அபாரமாய் துக்கித்தான். "இறந்தவரைப்போல நாமும் ப்ரசங்கம் முதலியன செய்து மக்களைத் திருத்த முயல வேண்டும்" என்று தீர்மானித்தான். கிழவரின் பையில் அவர் சொல்லியதுபோல ஒரு ஆயிரம் ரூபாய் மட்டும் இல்லாமல், நூறு பவுன்களும் அவர் குடும்பத்தின் புகைப் படமும், வைரம் பதித்த ஓர் மோதிரமும், சிறிய கடிதத் துண்டும் இருந்தன. அக்கடிதத்தை வீரநாதன் படித்தான். அதில்,

"என் அந்திய காலத்தில் உதவுகிறவர்களுக்கு இந்த பையில் இருப்பவைகளெல்லாம் உரியனவாகும்.

கிருஷ்ணமூர்த்தி."

என்று வரையப்பட்டிருந்தது. அந்த மோதிரத்தை எடுத்துப் பார்த்தான். அதில் ரமாமணியின் பெயர் செதுக்கப்பட்டிருந்தது. "தமது புதல்வியைப் பார்ப்பதுபோல் அன்னவளின் மோதிரத்தை வைத்திருக்கிறார், பாவம்!" என்று எண்ணி விசனித்தான். கிழவருடைய கர்மக்கிரியைகளையெல்லாம் வெகு சிறப்பாக நடத்தினான். "கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றதை நாம் நமது நாஸ்திக தர்மத்திலிருக்கையில் தெரிந்து கொள்ளவில்லையே! இப்போது அல்லவா தெரிகின்றது. கிழவர், நமது வறுமைக் காலத்திலேயே பெருமையான அறிவைப் பிரகாசிக்கச் செய்தார். அப்போதே அவருடைய திருவுருவமும், அவரின் மகிமையும் விளங்குகின்றன. ஆஹா! நமக்கு இச்சமயம் புதையல் கிடைத்ததுபோல, இந்தத் தனத்தை அப்

பெரியார் அளித்து உதவிய மகிமையை என்னென்பேன்? என்னைக் கண்டு பிறர் நகைப்பதையும், நம் உயிர் குன்றித் தவிப்பதையும் கண்டு சகிக்கக்கூடாமையால், கடவுள் நமக்கு இத்தகைய நிதியை உதவினார் போலும். ஆஹா! என்னப்பனே! ஆதிமூர்த்தியே! என்னைப் பலவிதத்திலும் கெடுத்த் நாகரிக மயக்கத்தில் பின்னும் மூழ்கி உழன்று சாகச் செய்யாமல் என்னுடைய துர்க்குணம் நீங்க, எனக்கு வறுமையைப் போக்கும் வழி கற்பிக்கவல்ல மனையாட்டியையும் கூட்டிவைத்து, என்னைத் திருந்தச் செய்த வள்ளலே! என்னப்பனே! இனியாகிலும் என் மனத்தில் பக்தி என்னும் விதையை நட்டு முளைத்தெழச் செய்ய வேண்டும் அப்பனே!" என்று பிரார்த்தித்தான்.

கிழவர் கொடுத்த ஆயிரம் ரூபாயை மருந்து ஷாப்புக்கும் இன்னும் மற்றவைகளுக்கும் கொடுத்தான். பவுனை மாற்றிக் கடன் அடைக்க அவன் பெற்றோருக்கு இஷ்டமின்மையால் அவர்கள், "அவைகளை அப்படியே நகைகளாகச் செய்துவிடலாம்" என்றனர். பெற்றோர்கள், மறுபடியும் தமது மகனுக்கு நல்ல பெண்ணைத் தேடி மணம் செய்விக்கத் தீர்மானித்து ஏற்பாடு செய்தார்கள். வீரநாதன் வெறுப்பினாலும், முன் மனைவியாலடைந்த கஷ்டத்தினாலும் விவாகத்திற்கு இசையாது மறுக்கத் தொடங்கினான். எனினும் அன்பான பெற்றோர்களின் பிரியத்தைக் கெடுக்கக் கூடாமல்—அவர்கள் வார்த்தையைத் தட்டமாட்டாமல்—இசைந்தான். வீரநாதனிடம் மருந்துக்காக வந்த ஓர் யுவதி மகா ரூபவதி, குணவதி, சாமர்த்தியவதி, அறிவு பொருந்திய அணங்கு; அத்தகைய மங்கையினிடம் வீரநாதன் மனம் லயித்தது. மணந்தாலும் அம் மாதரசியை மணக்க வேண்டுமென்றெண்ணி, அதைப் பெற்றோருக்குத் தெரிவித்தான்.

பெற்றோரும் அந்தத் தருணீமணியின் பெற்றோரைக் கண்டு, "என் மகனுக்கு இரண்டாந்தாரமாகத்

தங்கள் குமாரத்தியைக் கொடுக்கவேண்டும்" என்று கேட்டுப் பேசி ஒருமனப்பட்டு விவாகத்தை நிச்சயித் தனர். அவளது பெற்றோர்கள் சாதாரணமான அந் தஸ்துடையவர்கள். அதிக செல்வவந்தர்கள் அல்லர். சம்சாரம் பெரியது. அந்தப் பெண்மணியே மூத்த குமாரத்தியாவள். அவளுடைய அபாரமான புத்தி சாமர்த்தியத்தைக்கண்டு அவளைக்கல்லூரியில் இலவச மாகப்படிக்குமாறு சேர்த்து மெட்ரிக்குலேஷன்வரை யில் இனமாகச் சொல்லிக்கொடுத்தார்கள். வஸந்தா என்னும் அம்மின்னிடை மாதரசியினுடைய குணத் தழகையும், ரூபத்தினழகையும், புத்தியின் அழகையும் மெச்சிக் கொண்டாடாத மக்கள் இல்லை. கர்வம், கபடம், பொறுமை முதலிய குணங்கள் அவ்வன்னப் பேடினிடம் மருந்துக்கும் கிடையா. அத்தகைய அணங்கைப்புத்திரியாயடைந்த பெற்றோர்கள் வறுமை யின் கொடுமையால் வீரநாதனுக்கு ஒரு தாரம் இருப் பதை அறிந்தும், கொடுப்பதற்கு இசைந்தார்கள். வீரநாதன் இனி முன் தாரத்தைப்பற்றிப் பயமில்லை யென்றும், அவளைச் சேர்த்துக்கொள்ளப்போவதில்லை என்றும், உறுதியான வாக்குதத்தம் செய்துகொடுத் திருப்பதால், அவர்கள் தங்கள் பெண்ணை மணம் செய்துகொடுக்கச் சம்மதித்தார்கள். பிறகு, ஓர் சுப முகூர்த்தம் பார்த்து, வீரநாதனுக்கும் வஸந்தாவுக்கும் விவாகத்தை நடத்தினார்கள். விவாகம் வெகு சிறப் பாயும், அன்யோன்ய பாவமாயும் நடந்தேறியது.

வஸந்தவல்லிக்குத் திருமணக் காலத்தில் அந்தப் பவுன்களைக்கொண்டு காசுமாலை, ஒட்டியாணம், சங்கிலி வளையல்கள், வங்கி, நாகஒத்து முதலிய நகைகளை வீரநாதன் செய்துபோட்டான். அந்தப் பவுன்களில் சிலவற்றை மாற்றித் தன் செலவுக்கு வைத்துக்கொண் டான். விவாக வைபவங்கள் நடந்தேறிய பின்னர், வஸந்தாவை அழைத்துக்கொண்டு, தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தான். 'பர்த்தாவுக்கேற்ற பதிவ்ரதை உண்

டாலல் எத்தாலும் கூடி வாழலாம்' என்ற பழமொழிப்படி வஸந்தவல்லி, தன் நாயகனிடம் பூவின் மணம் போலும், மணியின் ஒளிபோலும், தேனும் பாலும் போலும் இருந்து வரலானாள். அவள், தான் படித்து விட்ட கர்வத்தைச் சற்றும் கொள்ளாமல், தன் மாமி மாமனை உட்கார வைத்துச் சகலமான பணிவிடைகளையும் செய்து களிப்பிப்பதுடன் தன் பர்த்தாவுக்கு ஒரு விதமான குறைவுமின்றிச் சதா சந்தோஷமே கொண்டிருக்கும்படியாகவும் நடந்துவந்தாள். வீரநாதன், அப்போது அடையும் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. அவனுடைய மேனி முன்னிலும் செழித்தது. தன் காதலியைக் கண்டு களிக்கும் ஆனந்தம், அவனுக்கு ஓர் நூதனமாகவே தோன்றியது: தன் மனைவியைப் பார்த்துக்கொண்டிருப்பதே அவனுக்குப் பேரானந்தமாக இருந்தது. நாம் முன்னர் மனைவியுடன் பழகியிருந்தும், இப்போது இருக்கும் உத்ஸாகமும், ஆனந்தமும் ஏதோ தெய்வீகமாக உதித்தபோதிலும், இவ்வானந்தம் மனத்திற்குள்ளும், இதயத்திற்குள்ளும் பாய்ந்து ஒட்டிக்கொண்டிருப்பது போலும் தோன்றுகின்றதே! இதென்ன மாறுதல்! அந்த ஆனந்தம் ஆடம்பரத்தின் போர்வையாகவிருந்தது. இந்த ஆனந்தமோ, துல்லியமான தெய்வீகத் தன்மை பொருந்தியிருக்கின்றது. ஆஹா! இவையெல்லாம் ஈசனின் மாயையல்லவா!" என்று தானே எண்ணி வியப்புறுவான்.

வஸந்தாவின் நவநாகரிகமற்ற அலங்காரமும், சுசிகரமான தன்மையும் பார்க்கப் பார்க்க வீரநாதனின் அங்கம் பூரித்து, ஆனந்தப் பரவசமாயிற்று. அவளை, தன் கண்மணியைப்போல எண்ணி, அன்பு கொண்டு நடத்துகிறான்.

ஒருதினம் வீரநாதன் வெளியில் சென்று திரும்பி வருவதற்கு வெகு நேரமாயிற்று. அவனுடைய பெற்றோர், "இன்னும் நமது மகன் வரவில்லையே!" என்று

விசாரமுற்று ஏங்குகிறார்கள். வஸந்தவல்லியும் "நாயகன் எக்காரணம் பற்றி இன்னும் வரவில்லை? ஒன்றும் தெரியவில்லையே!" என்று அபாரமான விசாரங்கொண்டு தவிக்கின்றாள். கடவுளை வேண்டுகிறாள். விதியில் வந்து பார்க்கிறாள். உள்ளே செல்கிறாள். "ஹா! என்னப்பனே! கருணாநிதே! என் பர்த்தாவைச் சீக்கிரம் வீட்டிற்கு அனுப்பமாட்டாயா?" என்று தவித்துப் பிரார்த்தித்தாள். பிறகு, சற்று நேரத்திற்கெல்லாம் வீரநாதன் வந்தான். வஸந்தா, அவனைக் கண்டு அபரிமிதமான சந்தோஷமடைந்து, "நாதா! இத்தனை நேரம் என்னை ஏன் வருந்தச்செய்து விட்டீர்கள்? எங்கு சென்றிருந்தீர்கள்?" என்று வெகு வாஞ்சையுடன் கேட்டவண்ணம், அவனுடைய சட்டையைத் தானே கழற்றிவைத்து, அவனை ஓர் ஆசனத்திலமரச் செய்து, கால் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே சென்று, கால் அலம்ப ஜலம் கொண்டுவந்து கொடுத்து, அவனை யழைத்துச்சென்று அபாரமான அன்புடன் அன்னமிட்டு உண்ணச் செய்தாள்.

வீரநாதன், வஸந்தவல்லியின் அன்பான உபசாணையினால் மிக்க சந்தோஷயடைந்து போஜனம்செய்து கொண்டே, "என் அன்பின் உருவமே! ஆஹா! இந்த அளப்பரிய இன்பத்தை என்னென்று கூறுவேன்? எனது இன்பவல்லியின் கரத்தினால் இடப்படும் அமுதுக்கு நிகர் வேறெதுவும் வராது. முன்னர், டம்பாச்சாரியாயும், நாகரிகப்பித்தனாயும் நான் இருந்த காலத்தில் எனது பணிவிடைகளையெல்லாம் வேலையாட்கள் செய்யவும், நான் உண்டு உலாவுவதுமாயிருந்த ஆனந்தம் வெறும் வெளித்தோற்றம் என்பது இப்போது தெரிகின்றது. கண்மணீ! என் இன்ப வஸந்தா! உன் கரத்தினால் செய்யும் பாகத்தின் ருசியே ஓர் தனித்தது. அதை உன் கையினால் பரிமாற நான் புசிக்கும் பேரானந்தத்தைக் கூறச் சாத்யமன்று. பணம் மிஞ்சி இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனைவி

யின் அன்பிற்கு நிகர் ஏதுமில்லை. என்னைத் துறந்து சென்ற மனைவியின் உடன்பிறந்த அண்ணன் ஒருவன் இருக்கிறான். அவன் என்னை ஏதோ ஓர் காரியார்த்த மாக அழைத்தான். அங்கு சென்றேன். அவ்விடத்தில் நேரமாய்விட்டது. அங்கு எனக்குத் தெரிந்த மனிதர் ஒருவர் வந்திருந்தார். ஏதோ மருந்து ஷாப்புக்கு ஏஜண்டாகப் போகிறாராம். அவர் தம்மிடம் நம் ஷாப் பிற்குத் தேவையான மருந்துகளை வாங்கவேண்டு மென்று கூறினர். அது விஷயமாகப் பேச்சு வளர்ந்து நேரமானதேதெரியவில்லை. அவன் என்னை வரவழைத்த தற்குக் காரணம் அவன் குழந்தைக்கு அக்ஷராப்பி யாச முகூர்த்தம் வரப்போகிறதாம். அதற்கு நாம் இருவரும் பழய உறவை விடாது வரவேண்டுமாம். நீயே அவனது உடன்பிறந்தவளாம், என்று இன்னும் ஏதேதோ கூறி அழைத்தான். நான் வருவதாக ஒப் புக்கொண்டு வந்தேன்'' என்றான்.

வஸந்தா:—அவ்வளவு பிரீதியாக அவர் நம்மைக் கூப்பிடுகையில் நாம் சென்று வந்தால்தான் சிறப்பாக விருக்கும். குழந்தைக்கு உயர்ந்த பட்டு ஒன்றும், ஓர் மோதிரமும் கொடுக்கவேண்டும்...என்றாள். அதை அவனும் ஆமோதித்தான். பின்னர், அவன் உண்டெழுந்ததும், தானும் புசித்துவிட்டு, மற்றைய வேலைகளைச் செய்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றாள்.

இது இங்ஙனமிருக்க, வீரநாதனுடைய முன் மனைவியாயிருந்து கணவனை அலக்ஷியம் செய்துவிட் டுச்சென்ற மனோஹரி அன்றைக்கே பம்பாய்க்குப் போய் அங்கிருந்து சீமைக்குச் சென்றாள். அவளுடன் கூடவே சில ஸ்திரீகளும் ஒரு ஆடவனும் சென்றார் கள். அந்த ஆடவனே அந்தோனி என்பவன். அவன், மனோஹரியிடம் மிகுந்த நேசமுள்ளவன். அவன் தூபம் போட்டதன்பேரில்தான் மனோஹரி சீமைக்குச் செல்லவும் துணிபுகொண்டாள். அந்தோனி என்ப வன் கிறிஸ்தவன். அவன், தன் மதத்தில் எல்லோரை

யும் சேர்த்துவிடவேண்டுமென்ற கொள்கையில் தீவிரமாக உழைப்பவன். அவ்வகையில் பல பேர்களை அவன் கிறிஸ்தவமதத்தில் சேர்த்திருக்கிருன். தற்போது மனோஹரியையும் அவளுடைய தோழிமார் சிலரையும் அவ்வலைக்குட் புகுத்த சகல தீர்மானமும் செய்துவிட்டான்—வலையிலும் வீழ்த்திவிட்டான்—அவர்களையெல்லாம் சீமைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள மகிமையைக் கண்ணாரக்காண வைத்து, பரீக்ஷையிலும் பாஸ் செய்வித்து அழைத்துவருவதாகக் கூறி மயக்கி, அழைத்துச் சென்ருன். அங்கு சென்றவர் எல்லோரும், பின்னர், அவ்வூரின் வனப்பத்தையும் மற்ற எல்லாவற்றையும்கண்டு களித்து, பரீக்ஷைக்கும் படித்துப் பாஸும்செய்து, பட்டம் பெற்ருர்கள். மனோஹரியுடன்கூட வந்தவர்களும் கிறிஸ்துவமதத்தில் சேர்ந்தார்கள்; எனினும் தம்முடைய படிப்பு முடிந்ததும் தாய்நாட்டுக்குத் திரும்பிவிட்டார்கள். மனோஹரி அவ்வூரை விட்டு வருவதற்கு மனமற்று அவ்விடத்திலேயே அந்தோனியுடன் நின்றுவிட்டாள். அந்தோனி, இவளை மணம் புரிவதாகப் பலவிதத்திலும் ஊக்கியதால் அதற்கு மனோஹரி பூர்ணபிரியத்துடன் உடன்பட்டுவிட்டாள். நாட்கள்சென்று கொண்டே இருக்கின்றன. வருடங்களும் ஆகிவிட்டன. அந்தோனி, அவளை மணப்பதாகக் கூறி அவளுடன் சகலவிதத்திலும் பழகிஞனேயன்றி, உண்மையில் மணந்துகொள்ளாது தட்டிவிட்டான்.

வெகு நாட்களாக மணக்காது தட்டிக்கொண்டு வருவதால் மனேகரிக்குச் சந்தேகமுண்டாயிற்று. அதோடு அவள் கர்ப்பவதியானுள். ஓர் தினம் அவள் அந்தோனியைக் கண்டு, "எனது அன்பா! நீ என்னை விவாகம் செய்துகொள்வதாக அழைத்து வந்து உன் மதத்திலும் சேர்த்துக்கொண்டாய்; ஏன் என்னை இனியும் நீ விவாகம் செய்துகொள்ள பிரயத்தனப்படவில்லை!" என்று கேட்டாள்.

அந்தோனி:—மனோஹரி! உன்னை விவாகம் செய்து கொள்ள நான் ஆவாக்கொண்டது உண்மையே! ஆயினும் நீ ஒருவரையும் மணக்காத கன்னிகையாக இருந்திருப்பாயேயானால் மிகுந்த சிறப்பாயிருக்கும். நீயோ விவாகமானவள்; ஆகையால் எங்களுடைய மதாசாரப்படி விவாகமானவளை மணப்பது கூடாது. இந்த விவகாரம்கூட அறியாத நீ என்ன படித்தவள்? நான் உன்னை மணக்கமாட்டேன். ஆனால், உன்னை நான் விவாகம் செய்துகொண்ட மனைவியைவிட அதிக பக்ஷமாகவே நடத்துகிறேன்—என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் மனோகரி திடுக்கிட்டாள். ஒன்றுமே தோன்றாமல் திகைத்தாள். அவளுக்கு அந்தோனியின்மீது ஆத்திரமே உண்டாய் விட்டது. "ஆஹா! முன் சொல்லிய வார்த்தை என்ன? இப்போது நடக்கும் விதமென்ன? இவ்விதம் நீ சொல்வது தர்மமா! என்னை மணப்பதாகச் சொல்லியதற்கு கட்டுப்பட்டல்லவா நான் உன்னோடு வந்தேன். நீ என்னை இவ்விதம் கைவிடலாகுமா!" என்று கேட்டாள்.

அந்தோனி:—ஓ! என்னை நீ மிரட்டாதே! உன் வார்த்தையினாலே உன்னை மடக்குகிறேன். உன் புத்தி உனக்கே ஸ்வாதீனம் இல்லை. அக்கினி சாக்ஷியாக உன்னை மணந்த புருஷன் உனக்குச் சகலவிதத்திலும் உரிமையுள்ளவன். நீ அவனைவிட்டு என்வார்த்தைக்குக் கட்டுப்பட்டு என்னோடு வந்துவிட்டாய். நான் உன்னை மணந்து விடுவதாக வைத்துக்கொள். பின்பு உன் கணவனின் ஆத்திரத்திற்கு நான் பாத்திரமாகி எத்தகைய கதிக்கு ஆளாக நேருமோ தெரியாது. அதோடு உன் குழந்தைக்கும் உனக்கும் நான் பொறுப்பாளியாக ஆகவேண்டும். அவ்வாறு ஆவதாகவே நினைப்போம். நான் உன்னை யழைத்து நீ என்னுடன் வந்துவிட்டது போல இன்னும் எவனாவது பணக்கார முஸல்மான் ஒருவன் வந்து, "என் மதத்தில் சேர்ந்துவிடு; நான்

உன்னை மணக்கின்றேன்'' என்று உன் அழகைக்கண்டு கேட்டால், அவன் பின்னால் துருக்கிதேசத்திற்குச் சென்றுவிடுவாய். உன் குழந்தையை வைத்துக் கொண்டு நான் திண்டாட நேரும். இவ்விதமே நீ சென்றுகொண்டிருந்தால், உனக்கு யார் பொறுப் பாளியாவது? அதெல்லாம் முடியாது. உன்னை நான் மணக்கமாட்டேன். என் இனத்தில் எனக்குப் பெண் நிச்சயமாய்விட்டது. மணம் செய்துகொள்ளப் போகி றேன். நீ வேண்டுமானால், இவ்விடத்திலேயே ஓர் வேலையில் அமர்ந்து பிழைத்துக்கொள். இல்லையேல், உன் தேசம் திரும்பிச்செல்லலாம்'' என்றான்.

இம்மொழிகளால் மஞ்சரி அடைந்த துன்பத் தையும், மனக் கொதிப்பையும். வயிற்றெரிச்சலையும் கூறவேண்டுமா? அவளுடைய ஆத்திரம் பொங்கி வழிகின்றது. "ஆஹா! ஏ அந்தோனி! என்னை நீ கெடுத்து உன் ஜாதியில் சேர்த்துக்கொள்வதற்காகவா இத்தனை சூழ்ச்சிகள் செய்தாய்!'' என்று ஆக்ரோஷத் துடன் கேட்டாள்.

அந்தோனி:—ஓ! உன்னை நான் வலுவில் வந்து இழுத்தேனா! நீயாகவே விட்டில் பூச்சி விளக்கில் வந்து விழுவது போல விழுந்ததற்கு என்மீது குறைகூறுவது வெகு ஒழுங்காக இருக்கிறது, உன் கெடுமதியால் நீ அழிந்துபோனாய்! அதற்குப் பிறர் என்ன செய்யக் கூடும்? ஒரு தரம் ஒரு வீட்டில் திருடிய திருடன் மறு வீட்டில் திருடாது ஒழுங்காயிருப்பானோ? அவனுடைய புத்தி அவ்வாறாக இருக்காது; உன் மதாசாரப்படிக்கு ஒழுங்காக இல்லாது பிற மதத்தை அனுசரித்து நடத் தையில் காட்டினாய்; அதைக் கண்ட நான் என் மதத்தில் சேரும்படியாகக் கூறியதற்கு, அறிவு உள்ள வளாயின் அப்போதே என் மறுத்திருக்கக்கூடாது? முழுச் சம்மதத்துடன் என்னையும், என் மதத்தையும் நேசித்ததை நீ மறந்தாய் போலும். உன் மதாசாரப்படி கணவனுக்கு கீழ்ப்படிந்து அவன் விருப்பப்படி நடந்து,

வீட்டுடன் இராது சுயேச்சை வகித்துத் திரிந்ததன் பலன் இதுதான். என்னை இச்சிப்பதுபோல இன்னும் எத்தனை பேயரை நீ பார்த்திருக்கிறாயோ! அந்த ஆபாஸம் எனக்கேதற்கு? இனி உன்னை நான் மணக்க முடியாது. நீ அதை எதிர்பார்க்கவேண்டாம். வேண்டுமானால் வேலைக்குச் சிபார்சு செய்கிறேன். என்னுடன் இது வரை நீ பழகியதற்கு அந்த உபகாரந்தான் செய்ய இயலும்—என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு, அவ்விடத்திலிருந்து சென்றுவிட்டான்.

அப்போதுதான் மனோஹரியின் மனத்தில் பூர்வ நினைவுகளான சூரியன் உதயமாயிற்று. தனது அதோகதியான நிலைமையை அவள் எண்ணினாள். அன்னிய தேசத்தில் தான் ஒன்றி (தனி) யாக ஆதரிப்பாரற்று, திக்கற்று, அனாதையாய் நிற்கும் பரிபவம் அகக் கண்ணிற்கு அப்போதுதான் தெரிந்தது. அவ்வாறு தெரிந்தவுடனே "ஆ! என் கதி இவ்விதமாகவா முடிந்தது! நான் மனோஹரியா! ஐயோ! கஷ்டகாலக் கொடுமையே!" என்று அவள் எண்ணினாள். அவ்வாறு எண்ணிய மறு நிமிஷமே அவளால் தாங்கக்கூடாத துயரமும் மனவருத்தமும் ஒன்று கூடியபடியால், அப்படியே மூர்ச்சையானாள். வெகு நேரம் மூர்ச்சை தெளியவில்லை. அவளுடைய வீட்டு வேலைக்காரி அவளிருக்கும் நிலைமையைக் கண்டு பயந்து, 'ஏதோ வந்துவிட்டதே!' என்கிற திகிலடைந்து ஒரு வண்டியில் அவளை ஏற்றிக்கொண்டு, ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை செய்யவைத்தாள்.

மனோகரியினுடைய தாங்கமாட்டாத மனக் கொதிப்பும் வயிற்றெரிச்சலும் அபாரமாய்ப் பொங்கியதால் அவளுடைய கர்ப்பம் அழிந்து (அபார்ஷன்) விட்டது. அவள், தனக்கு ப்ரக்ஞை வந்து கண் திறந்து பார்க்கையில், தன் நிலைமையை நன்றாகத் தெரிந்துகொண்டாள். கர்ப்பம் சிதறிவிட்டதால், அவளுக்கு ஜுரம் கண்டுவிட்டது. ஆஸ்பத்திரியில்

ஒருவாரம் படுத்திருக்கவேண்டுமென்று அவர்கள் கூறியதால், அவளால் வீட்டுக்கு வரக்கூடவில்லை. நன்ருகப்படித்து பட்டம்பெற்றவளாகையால் அவளை ஆஸ்பத்திரியில் வெகு மேன்மையாகக் கவனிக்கலானார்கள். அவள் ஆஸ்பத்திரியில் ஜ்வரத்துடன் கிடக்கின்ருளேயன்றி, அவள் மனம் நிம்மதியடையாது நிரம்பவும் வருத்தத்தினுல் தத்தளிக்கின்றது.

"ஆ! நமதுகதி முடிந்த கோரத்தைஎன்னென்பது! ஐயோ!நமக்குஉடம்புகுணமாகாமல்இவ்விதமேஇறந்துவிடக்கூடாதா! சீச்சீ! என்ன பிறவி பிறந்தோம்? ஆதியில் என் அறிவும் என் குணமும் பாழாகியதன் பயனல்லவோ இவ்விதமான கதி நேர்ந்தது? நாம் மதியிழந்து மணாளனைப் பிரிந்து, மேன்மையான இந்து மதத்தைத் துறந்து, உன்னதமான கற்பு உரிமையைப் பறிகொடுத்து, நாட்டையும் விட்டு, நாணமற்று, மதியற்ற துணிவுகொண்டு வெளியேறியதன் பலன் இது தான். ஆஹா! மனோரம்மியமான ஹிந்து குலத்தில் பிறந்த என் பிறவி வீணாகியதை எண்ணும்போது அது என்னைச் சித்ரவதை செய்வதுபோல இருக்கிறதே! ஐயோ! ஆதியில் என் கணவன் என்னிடம் வந்து நவீன நாகரிகத்தை வெறுத்துக் கூறியதைக் கேட்க என் மனமடைந்த ஆத்திரம் அளவு கடந்து அவரையே வெறுக்கும்படியாக நேர்ந்தது. ஐயோ! பாழாய்ப்போன நாகரிகத் தீயின் தீக்ஷண்யத்தை இப்போதல்லவா உணர்ந்தேன்? பாவி என் மந்தமதியால் பாயக் குவியலுக்குப் பங்குதாரியாய் விட்டேனே! கட்டிய கணவனையும் மதியாது இந்தக் கோலத்தையடைந்து பரிதபிக்கின்றேனே! இதை நினைத்தாலும் தேகம் நடுங்குகின்றதே! என் பிறவியின் உன்னதமென்ன? என் மதத்தின் பெருமை என்ன? கற்பின் மாண்பென்ன? எல்லாவற்றையும் இழந்த பாவியாகி—நாஸ்திகப் பேயாகி—விட்டேனே! என் நிலைமையை நானே அல்லவா குலைத்துக்கொண்டேன்? கட்டிய

கணவன் தன் மனைவியை எத்தகைய ஆபத்திலும் கைவிடுவானு! அவன் காக்கும் கர்த்தாவல்லவா! நான் அதை அறியாத அவலக்ஷண ஸ்திரீயாக ஆகிவிட்டேனே! கணவனையும் துறந்த காதகி என்ற பட்டம் பெற்றதொன்றை நிலைக்கச் செய்தேனேயன்றி, நான் அறிவுக்காகப் படித்துப் பெற்ற பட்டத்தை நிலைக்கச் செய்யாது போய்விட்டேனே! மழை பெய்து, பயிர்களும் பூமிகளும் செழிக்கவேண்டுமே யன்றிப் பனி பெய்து செழிக்கா" என்பதைக் கண்கூடாக அனுபவித்துவிட்டேனே! நம்மை அன்று சீமைக்குப் போக வேண்டாமென்று அவர் தடுத்தபோது நின்றிருப்பேனேயானல், இந்தக் கதிக்கு ஆளாகாமல் இருப்பேனே ஐயோ! "பெண் புத்தி பின் புத்தி" என்பது என் வரையில் உண்மையாய்விட்டதே! நம் சகலமான ஆடம்பரத்திற்கும் உள்ளாயிருந்த குணநாதனின் சித்தம் சிதறும்படியாக என் கொழுப்பினுல் நடந்து விட்டேனே! கடன்காரர்களின் தொல்லையைக்கூறி அவர் வருந்துகையில் என் மனம் கல்லாய்விட்டதே! அதைச் சிறிதும் லக்ஷியம் செய்யாது ஏதேதோ உதாசீனமாகக் கூறி, அவர் மனத்தைப் புண்படச் செய்த மாபாவி யான் அநுபவிக்கும் இந் நிலைமை எனக்கு அதை உறுத்திக்கூறுகின்றதே! அவருடைய ஆபத்துக்கு உதவாத பேயாக இருந்ததன் பலனுகை என் மதம் என்னைப் பேராபத்தில் சிக்கவைத்துவிட்டதே! என் படாடோபத்தை எண்ணி, என்னை இவ் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டார்கள். இதற்கு எவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமோ தெரியவில்லையே! என் பர்த்தா (பாவி என்னுடைய பவிஷிற்கு அந்த மகாநுபாவனைப் பர்த்தாவென்று இயம்புவது சற்றும் பொருந்துமா') எனது வைர நெக்லேஸைக் கேட்டபோது கொடுக்க மறுத்த நானே அதை விற்றுச் சின்னபின்னமாகச் சிதற அடித்தேனே! குலஸ்திரீகளைப்போல குணவதியாயும், ஆடம்பர சுயேச்சை யின்றியும் நானிருந்தால்

என் நிலைமையும் எத்தகைய மேன்மை அடைந்திருக்கும்? ஐயோ! 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது' போல் காரியம் கெட்டு, கற்பும் அழிந்து, காறி உமிழும்படியான நிலைமைக்கு வந்த பிறகு இனி என்ன எண்ணி என்ன பயன்!" என்று தனக்குள் எண்ணுததும் எண்ணிக் கண்ணீர்விட்டுக் கதறுகிருள். மனத்தை வெறுத்து நொந்துகொள்கிருள்; தான் பதியை அலக்ஷியம் செய்ததன் பலன் இது என்பதை நன்ருக உணர்ந்துகொண்டாள். அபாரமான துயரத்தினுல் குன்றி வெதும்பிப் போனுள்.

அன்று சென்ற அந்தோனி என்பவனைப் பிறகு காணக்கூடவே இல்லை. அவள் திக்கற்ற அனுதையானுள். உடம்பில் இருக்கும் சில பூஷணங்களைத் தவிர வேறு காலணு கையில் இல்லை. என்ன செய்வாள் பாபம்! "ஏ, நாகரிகமே! பாழும் படாடோபமே! என்னைக் குட்டிச்சுவராக்கிய சுயேச்சையே! என்னைப் பலவிதத்திலும் அனுதை ஆக்கிய அகம்பாவமே! என் பிறவியைப் பாழ்படுத்திய துர்க்குணமே! உங்களை இனிமேல் ஒருவரும் கைக் கொள்ளாத வரத்தைக் கொடுக்கும்படியாகக் கடவுளை வேண்டுகிறேன்" என்று மனம் நொந்து துடிக்கிருள். இவ்வித நிலைமையிலேயே, "உடம்பு குணமாகிவிட்டது. செல்லலாம்" என்று ஆஸ்பத்திரியில் கூறி அவளுக்கு அன்று முதல் இன்றுவரையில் சிகிச்சை செய்ததற்காக 250 ரூபாய்க்குப் பில்லும் கொடுத்தார்கள்.

மனேகரியின் காதில் இருக்கும் வைரக் கம்மலைத் தவிர வேறு பூஷணமில்லை. ஹாரம் முதலியவற்றை விற்று ஆடம்பரமாக இதுபரியந்தம் செலவு செய்தாள். பிறகு, தன் காதுத் தோட்டை விற்று ஆஸ்பத்திரியின் பணத்தைக் கொடுத்துவிட்டுத் தன் விடுதிக்கு வந்தாள். அதற்குமேல் அவளுக்கு அங்கு இருப்பதற்குப் பிடித்தமில்லை. "ஐயோ! நம்முடைய இக் கோலத்துடன் நமது ஜன்ம பூமிக்கு எவ்விதம் செல்

வது? நம்மோடு வந்தவர்கள் சென்றகாலையிலேயே நாம் செல்லாதொழிந்ததன் பலனை எல்லாம் அநுபவித்துவிட்டோம். இனி, அவ்வூர் சென்று அங்குள்ளோரின் முகத்தில் எவ்விதம் விழிப்பது? நம்மைக் கண்ட பிறர் எவ்விதம் நகை புரிவாரோ! நமது கணவர் காண நேரின் நாம் எவ்விதம் வெட்கமின்றி அவர் கண்ணில் படுவோம்! ஹா! நாகரிகப் பைசாசமே! என்னை நாசம் செய்துவிட்ட விஷமே! ஐயோ! நமது அறிவைத் தீயப் பழக்கத்தில் திருப்பிய தப்பிதத்தை உணராது ஏன் குறை கூறவேண்டும்? அங்கு சென்று எல்லோரும் நகைக்கும்படியாக அவமானம் அடைவதைவிட நம் உயிரை இவ்விடத்திலேயே விட்டுவிடுவது உத்தமம். ஐயோ! பாவி நான் செய்த கணக்கில்லாத தப்பிதங்களை என் நாதனின் முன்னிலையில் சென்று கூறி, அவர் தாளில் பணிந்து என் குற்றத்திற்கு மன்னிப்பு வேண்டி, பிறகு இறப்பதே உத்தமம்: என் பிறவியில் அவ்விதப் புண்ணியமேனும் கிடைக்கட்டும்'' என்று தீர்மானித்துக்கொண்டு, முன்னர் தன் ஜன்ம பூமியைவிட்டு அவ்வூருக்குப் பிரயாணமாகி, கப்பலில் வருங்காலத்தில் கொந்தளித்துப் பூரித்த மனமும் வயிறும் இப்போது எரிந்து வெதும்பியபடியால், கண்ணீருடன் தன் பிரயாணத்தை முடித்து ஜன்மபூமியை அடைந்தாள்.

கப்பலை விட்டு இறங்கியதும், "எந்த இடத்திற்குச் செல்வது? ஐயோ! ஆதியில் என்னை விட்டு நீங்கியிருந்த லஜ்ஜை என்னை இப்போது தாக்குகின்றதே! எத்தனையோ விதத்தில் எனக்கு நற்புத்தி புகட்டிய என் தம்பியை நான் வெறுத்தேன். என்னைக்கண்ணிமை போல் காத்த கணவனின் சொல்லைத் தட்டினேன். என் ஜீவியத்தை நானே குலைத்துக்கொண்டேன். இனி, நான் யார் முன்பு செல்வேன்?'' என்று வெகு நேரம் வரையில் புலம்பிச் சிந்தித்துவிட்டுப் பின்பு, தனது சிநேகிதையின் வீட்டிற்கே சென்று பிறகு

யோசிப்போம்,—என்று தீர்மானித்து, அவளுடன் சீமைக்கு வந்தவர்களின் வீட்டில் சென்று விசாரிக்கையில், அவர்கள் ஊரிலில்லை என்று தெரிந்தது. பின்னர், வேறு சிநேகிதையின் வீட்டிற்குச் சென்றாள்.

அவள் இவளைக் கண்டதும் பழைய மாதிரி பேசாது ஒருவாறான முகத்துடன் பேசத் தொடங்கி "ஆஹா! மனோகரியா நீ! ஐயோ! நீ சீக்கிரம் சென்றுவிடு. உன் செய்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. நீ கேவலம் மிதமிஞ்சிக் கெட்டுவிட்டாய்! உன்னோடு பேசினால் என்னை என் புருஷர் திட்டுவார். அவருடைய மனதின்படியே நான் நடக்கவேண்டியவள். அவரது மனதுக்கு விரோதமாக எதுவும் செய்யமாட்டேனென்பதை நீ உணர்ந்திருப்பாய். நீயும் இங்கிருந்தவரையில் உன் புருஷனுடைய மனதின்படியே நடப்பதாக எண்ணி, உன்னுடன் பழகினேன். உன் நடக்கை எங்களுக்குச் சரிப்படவில்லை. நீ சென்றுவிடு. புருஷனை விட்டு, அவன் சொல்லை மீறி, அவனுக்கு விரோதமாய் நடக்கும்படியாக உனக்கு எந்தச் சட்டம் கிடைத்தது? ஜாதி, மதம், கற்பு முதலிய எல்லாவற்றையும்கைவிட்ட உன்னோடு பழக எனக்குப் பிடிக்கவில்லை" என்று கூறி உள்ளே போய்விட்டாள்.

அந்தோ! சுடுசரம்போலப் பாய்ந்த அந்தச் சொற்களைக் கேட்டவுடன் மனோகரியின் மனம் கருகியேவிட்டது. அவளுடைய மனம் தவிப்பதை அளவிட்டுக் கூறச் சாத்தியமில்லை. தனது பிழைப்பை எண்ணித் துடிக்கின்றாள்; தானும் தன் நாயகனுடன் கூட இருந்து ஒழுங்கான முறையில் பழகாது போனதை யெண்ணி ஏக்கமடைந்து வாடினாள்; தாங்கமாட்டாத அவமானத்தினால் குழம்பிப்போய் மறுபேச்சின்றி அவ்விடத்தை விட்டு வெளியே வந்தாள்.

வீதியில் போய்க்கொண்டிருக்கையில், அவள் முன்னால்வேலையாயிருந்த காலேஜ் உபாத்தியாயினியை அகஸ்மாத்தாக வழியில் காண நேர்ந்துவிட்டது. அவள்,

"ஓ! மனோகரியம்மா! நீ கர்ப்பவதியாக இருப்பதாகக் கேள்விப்பட்டேனே! குழந்தை எங்கே! ஆணா, பெண்ணா? உங்களுடைய ஜாகை தற்போது எவ்விடத்திலிருக்கிறது? எப்போது இவ்விடம் வந்தீர்கள்? உங்களுடைய இரண்டாவது கணவர் அந்தோனி எங்கே!" என்று அடுக்கடுக்காகப் பல கேள்விகள் கேட்டதும் மனோகரி முன்னிலும் அதிகரித்த அவமானமும், துக்கமுமடைந்து இன்னது பேசுவதென்பதை யறியாது துடித்தாள். தனக்கு இரண்டாவது கணவன் என்ற பதத்தையும், குழந்தை எங்கே என்பதையும் நினைக்க அவளுடைய உயிர் அவளை விட்டு வெளிக்கிளம்பிவிடும்படியான நிலைமைக்கு வந்தது. தாங்கமாட்டாத அவமானத்துடன், பதில் பேச முகமின்மையால் விரைவாக நடந்து சென்றாள். வழியில் எத்தனையோ தெரிந்தவர்களையெல்லாம் சந்திக்க நேரும்போது அவள் உயிர் சிறிது சிறிதாக நீங்கிக்கொண்டே வந்தது. அவள் அந்த நிலைமையில் பின்னும் சிறிது தூரம் நடந்தாள். பழைய விஷயங்களெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவள் நினைவிற்கு வந்தன. தான் சுயேச்சை வகித்து அனுபவித்த பலன் இதுதான் என்பதை அவள் முற்றிலும் அறிந்துகொண்டாள். 'நீ சுயேச்சையாகத் திரியாதே! சுயேச்சை என்பது கொடிய விஷம் போன்றது' என்று எனது தம்பி சொல்லியவைகளையெல்லாம் அடியோடு செவி சாய்க்காது மறுத்துவிட்டுத் திரிந்த என் மடமையை இப்போதல்லவா நான் கண்டேன். ஆ! என்னுயிரை மாய்த்துக்கொள்வதற்குள் என் தம்பியின் திருமுகத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று எண்ணி அங்கு சென்றாள்.

அப்போது அவன் ஏதோ காரியமாக வீதியில் வந்தான். அவனைப் பார்க்கவும் மனோகரிக்கு மனம் தவித்தது. அவனுடைய எதிரில் தான் எப்படிப்போவதென்று மயங்கியவாறு சென்று, அவன் காலில்

விழுந்து, "என்னருமை சோதரா! என் வினையும் என் அகம்பாவமும் என்னைப் பாழ்படுத்திவிட்டன. சுயேச்சை என்னும் தீயினுல் நான் எரிந்துவிட்டேன்" என்று கூறிக் கதறினுள். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்ட அவளது சோதரன் பிரமிப்பும் திகைப்பும் அடைந்து சற்று தம்பித்தான்; தன்னுடன் பிறந்த சோதரியாயினும் அவளுடைய விஷயத்தில் அவன் வெறுப்புக் கொண்டுவிட்டாளுகையால், அவளைக் கண்டதும் வெறுப்பும் கோபமும் அடைந்தான்.

"சீச்சீ! குல த்ரோகி! குடியை கெடுக்கவந்த கோடரிக்காம்பே! இனத்திற்கே இழுக்கை விளைவித்த பைசாசம்! என் முன்னுல் நிற்காதே! ஓடிவிடு; நீ இறந்துவிட்டதாக எண்ணி,நாங்கள் தலைமுழுகியாய்விட்டது.இனி,உன் முகத்திலும்விழிக்கலாகாது .மகா உத்தம சிகாமணியாகிய பர்த்தாவினிடத்தில் இருந்து வாழக்கொடுத்துவைக்காத கள்ளீ! கபடீ! வெட்கமில்லாமல் எங்கள் முகத்தில் விழிக்கவும் வந்துவிட்டாயே! மானங்கெட்டும் உலாவ மனம்வருகிறதே! என்மானம் போகிறது. நீ இங்கு வந்ததாகவே தெரியக்கூடாது. ஓடிவிடு. நிற்காதே! இப்போதும் உனது சுயேச்சையும் படித்த ஆணவமும் உனக்குத் துணையாயிருக்கட்டும். உம். ஓடிவிடு. உன் புருஷன் உன்னைக் காண நேரிடின், உன் கதி அதோகதிதான். எடு ஓட்டம்" என்று மறு பேச்சுப் பேச இடமின்றி, ஆத்திரத்துடன் கூறிக் கதவை மூடிக்கொண்டு போனுன்.

ஐயோ! மனேகரியின் மனத்தோற்றத்தை மொழிதல் கூடுமா! தன் பால்ய லீலைகளையும் தான் பாழாகிக் கெடத் துணையாய் நின்ற சுயேச்சையையும் எண்ணி அவள் மனம் தவித்தாள். "சீச்சீ! இனிமேல் உயிருடன் இருப்பதில்லை. உடனே என்னுயிரை விட்டுவிடவேண்டும். கடைசித்தரமாக என் பிராணநாதரைக் கண்டு அவர் காலில் விழுந்து முறையிட்டு அவரிடமுள்ள விஷ மருந்தையுண்டு உயிரை விடுவதுதான்

நலம்" என்று தீர்மானித்துப் புலம்பிக்கொண்டே நடக்க லானுன்......அவனுடைய சகோதரனும் ஓர் முக்கிய காரியமாக மறுநாள் உதயத்திற்கு ஊருக்குப் போனுன்.

மனேகரி "சீ! நாம் இனி அரைக்கணமும் உயிருடன் இருப்பதுகூடாது" என்று தீர்மானித்துத் தன்னுயிரைத் தன் நாதனின் பாதத்தில் விட்டுவிடுவதென்றும் துணிந்து, அவனிருக்கும் இடத்தை விசாரித்து அறிந்து கொண்டாள். அப்போது இரவு மணி 8-க்கு மேலாகி விட்டது. அவள் மனவேதனையினுலும் பசியின் கொடுமையினுலும் நடக்கவும் சக்தியற்ருள்; மெல்ல தள்ளாடிக்கொண்டு, தன் கணவன் இருக்கும் வீட்டு வாயிலையடைந்தாள்.

அவளுடைய துயரம் முன்னிலும் பதின்மடங்கு பெருகிப்போய் அவளை வதைத்துக் கொன்று கொண்டேயிருக்கின்றது. தனது மானங்கெட்ட தன்மையில் எவ்விதம் உள்ளே செல்வதென்று வெகுநேரம் யோசித்தாள். அப்பொழுது மணி 10 ஆய்விட்டது. ஊரிலும் ஜன சந்தடி அடங்கிவிட்டது. தான் வெளியில் நிற்பதை யாரேனும் கண்டால் என்ன சொல்வார்களோ, என்ன நினைப்பார்களோ என்கிற பேரச்சம் போராடுகின்றது. அந்நிலையில் அந்த வீட்டின் தெருத் திண்ணையில் ஒரு சிறிய அறை இருப்பதைக்கண்டு சென்று அதில் அமர்ந்தாள். தனது மாமனர், மாமியார் வீதியில் வருவதையும், தன் பர்த்தா ஆடம்பரமான கோலமின்றிச் சாதாரணமான உடையுடன் செல்வதையும் கண்டாள். "ஆஹா! அப்போதிருந்ததைவிட இப்போதுள்ள இவருடைய கோலம் எத்தனை சிறப்பாயும் அல்லியமாயு மிருக்கின்றது! ஐயோ! இத்தகைய புருஷருடன் கூடி வாழாது மமதையாலும், நவ நாகரிகத்தினுலும் பாழாய்விட்டேனே! என் ஜென்மமே நாசமுற்று விட்டதே!" என்று தனக்குள் எண்ணி, அவள் நிரம்பவும் விசன

மடைந்து கதறுகிறாள். தான் எவ்விதம் உள்ளே செல்வதென்று யோசித்து வெறுப்பும், வெட்கமும் அடைந்து புலம்பியபடியே இருக்கையில், அவளுடைய மாமனார் வீதிக் கதவைத் திறந்துகொண்டு தேகபாதை நிவர்த்திக்குச் சென்றார்.

அதுதான் தருணமென்று எண்ணிய மனோகரி சரேலென்று எழுந்து மெல்ல உள்ளே சென்று ஒரு புறம் மறைந்து நின்றாள். அவளுடைய மனம் அப்போது பட்டபாடு விவரித்தற்பாலதன்று. மணி 12 அடித்தது. அபாரமான சங்கடமும், விசனமும், அவமானமுங்கொண்டு தவித்து, தன் கணவனின் மருந்துகள் வைத்திருக்கும் அறை எது என்பதை மெல்லத் தெரிந்துகொண்டு, அதனுள் புகுந்தாள்......அவ்வறைக்குப் பக்கத் தறையிலேயே தன் புருஷனும் ஓர் அழகிய நங்கையும் (வஸந்தாவும்) நித்திரை செய்வதைக் கண்டாள். "ஹா! என் பர்த்தா பிறகு விவாகம் செய்துகொண்ட வனிதை இவள்போலும்! ஹா! மகாலக்ஷ்மிபோல் சயனித்துக்கொண்டிருக்கும் இந்த அம்மாள் செய்த புண்ணிய மெங்கே! மகா பாவி நான் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்த பரம பாதகமான பாவ மெங்கே! ஐயோ! நான் இந்த மகானுபாவனுடன் வாழ்ந்த நாளிலும் என் சயனத்தை இவ்விதம் என் ப்ராணநாதரின் அருகில் கொள்ளாது தனித்த விடுதியில் ஒன்றியாய்க் கிடந்தேனே! ஹா! இந்த மேன்மையான ஆனந்த ஊற்று என் மனத்தில் அப்போது சுரக்காது போய்விட்டதே! அப்போது ஒன்றியாய் வாணாளைக் கடத்தியது போலவே என் காலம் முற்றும் பாழாய்விட்டதே! ஐயோ! என் அறியாமையை என்னென்றெண்ணி யழுவேன்? பகவானே! உலகத்தில் இனி யாரும் சுயேச்சையையும், படாடோபத்தையும் வகிக்காது கணவனுக் கேற்ற குணவதிகளாயிருந்து உத்தமமான வாழ்க்கையை நடத்தி மகிழும்படியான அருளையே சகல ஸ்திரீகளுக்கும்

அருளுவாய். என்னப்பனே! பக்தியற்றேன்; பதி சேவை அற்றேன்; கற்பு நிலை அற்றேன்; நற்குண மற்றேன், ஐயோ! பலவிதத்திலும் பாழாய்விட் டேனே! ஹா ப்ராண நாதா! தாங்கள் சொல்லிய சகல மான வார்த்தைகளையும் தட்டினேன். நவநாகரிகத்தின் மயக்கில் சிக்கி, அனுபவப்பட்ட உங்களது மொ ழியை அலக்ஷ்யம் செய்தேன். உங்களுடன் கூட வாழும் பாக்கியத்தை அற்றேன். ஜாதி மதத்தை இழந்த பிரஷ்டையானேன். ஆ மாதரசி! பர்த்தாவை நித்திரையிலும் களிக்கச்செய்து அவரது ஆலிங்கனத் தினின்று வழுவாது சயனித்துள்ள நற்குணவதியே! நாரி சிரோமணியே! இந்த மகிமையை எனக்கு கட வுள் கொடுத்தும் அனுபவிக்காது குரங்கின் காத்துப் புஷ்பமாய்விட்டேனே! ஏ ஸ்திரீ ரத்தினமே! இனி உலகத்தில் என் போன்ற மதியும், மமதையும் கொண்ட துர்க்குணியைக் கண்டால், என் சரிதையை எடுத் துரைத்து அவளை நல்வழிபடச் செய்வாய்" என்று எண்ணி, தான் ஏற்கெனவே கொண்டுவந்திருந்த கடி தச் சுருளை அந்தக் கட்டிலின் மீது விட்டெறிந்தாள். அதில் அடங்கியிருந்த விஷயங்களாவன:—

"என் ப்ராணநாதரின் இரு பாதங்களில் பணிந்து பாவியாகிய மனோகரி செய்யும் விக்ஞாபனம். என் நாதா! தங்களுக்கு நேரில் நிற்பதற்கும் அருகதை யற்ற அற்பப் புழுவாய்விட்டேன். என் வாயினால் நாதா வென்றழைக்கவும் நான் அபாத்திரமானேன். இனிமேல், இப் பூமண்டலம் என்னைத் தாங்காது. நான் என் அகம்பாவத்தினாலும், கர்வத்தினாலும் என் மேன்மையான பிறவியைப் பாழ்படுத்திக்கொண் டேன். நான் செய்த குற்றங்களையெல்லாம் தங்க ளிடம் முறையிட்டுத் தாங்கள் என் மன்னிப்பைக் கேட்ட பின்னர் உயிர்துறக்க எண்ணி, தங்களில்லம் வருவதற்கு உத்தேசித்திருக்கிறேன். இதோடு என் கெட்டழிந்த புத்தியினால் நான் கண்டறிந்த அனுபவ

மொழிகளையும் வரைந்து வைத்திருக்கிறேன். அதை எல்லா சகோதரிகளுக்கும் காட்டி, சுயேச்சை என்னும் கொடிய விஷத்தை மேன்மையான பெண்மணிகளிடம் இனி அணுகாது ஒழித்து விடுங்கள். நான் செய்த பாபத்தின் பயனை இம்மையிலேயே அனுபவித்துவிட்டேன். நான் உங்களைக்கண்டு தரிசிக்கும் ப்ராப்தமிருப்பின் தரிசிக்கின்றேன். இல்லையேல், இக் கடிதத்தையேனும் தம்மிடம் சேரும்படியான முயற்சியைச் செய்கிறேன். என்னை மன்னிக்கவும். நாதா! இனி நான் உயிரோடிருக்க யோக்யதையில்லாமையால் உங்களை தரிசித்த பின்னர் விஷமுண்டு இறந்துவிடத் தீர்மானித்து விட்டேன். மறு பிறவியிலேனும் நற்குணவதியாகப் பிறக்கும்படியான ஆசியைக் கூறி, இந்தப் பாவியை மன்னிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

தங்களை வருத்திய மகா பாபி

மனோஹரி."

"உலக மாதரசிகளே! உத்தமப் பெண்களே! ஹிந்துமத மாமணிகளே! பதியே தெய்வம் என்பதையும், பதியே கதி என்பதையும், பதியின் பாதமே துணை என்பதையும், என்போன்று மதிக்காதிராமல், அன்னவரை அண்டி அருமையான பேறுபெறுங்கள். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட பாவியாகிய என் சரிதையை எண்ணுங்கள், 1. நாயகனுக்கு உகந்த நாரீமணியாய் விளங்குங்கள். 2. பெரியாரின் கொள்கையைத்தள்ளாது அநுசரித்து அன்புடன் ஒழுகுங்கள். 3 ஜாதிமத ஆசாரத்தைக் கைவிடாதீர்கள். 4. அந்நிய நாட்டுப்பழக்கத்தையும், அந்நிய மதத்தையும் ஆசிக்கவேண்டாம். 5. அந்நிய அனுஷ்டானங்கள் பின்னமுறச் செய்துவிடும். 6. என்றும் கடவுளை மறக்காதீர்கள். 7. தாய் தந்தையர் இஷ்டப்படியே நடவுங்கள். 8. உங்களுடைய அறிவை வளரச்செய்வதற்கு மட்டும் கல்வி பயிலுங்கள். 9. நவநாகரிக மயக்கத்தில்

உழலாதீர்கள். 10. நாகரிகம் என்பதிலுள்ள முதல் இரு எழுத்துக்களையும் கடை எழுத்தையும் சேர்த்தால் நாகம் என்பதாகப் பொருள் படுகிறது. அப் பொருளுக்கு ஏற்ற கொடிய நாகத்தின் விஷம் போன்ற வலையில் இறங்காதீர்கள். 11 சுயேச்சையை ஒரு போதும் வகிக்கவேண்டாம். 12. பெண்களுக்குச் சுயேச்சை ஓர் கொடிய தீயைப் போன்றதாகும். 13. பெரியாரை உதாசீனம் செய்யாதீர்கள். 14. கணவன் மனம் நோக நடக்காதீர்கள். 15. கணவனின் முகமாகிய ஆம்பல் மலருவதற்கு நீங்கள் சந்திரனாய் இருங்கள். 16 கணவனின் அருகிலிருக்கும் பாக்கியத்தை இழக்காதீர்கள். 17. கணவனுடன்கூட உண்ணும் சுகத்தைக் கைவிடாதீர்கள். 18. கணவனுக்குப் பரிந்து பணிசெய்து பேர் பெறுவதைக் கோருங்கள்; என்னைப்போல் பாவியாகாதீர்கள். 19. கணவன் வறுமையால் வாடுகையில் உங்கள் மேனியில் வீற்றிருக்கும் பூஷணத்தைக் கொடுத்தேனும் அவனுடைய வறுமையை நீக்கத் துணைபுரியுங்கள்; இன்பம் பெறுங்கள். என்னைப்போல் நிர்த்தாக்ஷண்யமாகக் கணவன் சொல்லை மறுக்காதீர்கள். 20. என்னைப் போல் அவன் விரும்பாத காரியத்தைச் செய்து நாசமடையாதீர்கள். 21. என்னைப்போல் தைரியத்தைத் தீய முறையில் கைக்கொள்ளாமல், கணவனை மகிழ்விப்பதிலும் அவனுடைய நலனைக் கோருவதிலும் உற்சாகம்கொள்ளுங்கள். 22. ஆடம்பரமான செலவு செய்யாதீர்கள். 23. அளவுக்கு மீறிய அன்பை நாதனிடத்தில் செலுத்துங்கள். 24. அன்னிய ஆடவனுடன் பழக்கம் வைத்து என்னைப்போல் பாவியாகாதீர்கள். 25. அன்னியருடைய பேச்சை நம்பாதீர்கள். 26. எந்தக் காரியத்தையும் உங்கள் கணவருக்குத் தெரிந்து செய்யுங்கள். 27. எந்த இடத்திற்குச் சென்றாலும் உங்கள் புருஷரின் துணையுடன் செல்லுங்கள். 28. உங்கள் புருஷனுக்கு அழைத்துச்செல்ல

சந்தர்ப்பமில்லையெனில், பெரியோராகிய மாமி, மாமன், தாய், தந்தை முதலியவர்களின் துணையுடன் புருஷனின் அநுமதி பெற்றுச் செல்லுங்கள். 29. புருஷன் அறியாது செய்யுங்காரியம் தீயை மூடிவைப்பதற்கு ஒப்பாகும். 30. புருஷன் அநுமதியின்பேரில் தகுமான பெண்மணிகளைச் சிநேகங்கொள்ளுங்கள். 31. உங்களது உறவினனாகவிருப்பினும் ஆடவனிடம் உங்கள் புருஷரில்லாத நேரத்தில் பேசாதீர்கள். 32. உங்களுக்கு எத்தகைய அவசரமான காரியம் இருப்பினும் அதை உங்கள் பெரியோருக்கும் புருஷருக்கும் தெரிவித்து அவர்களின் உதவியை நாடுங்கள். 33. ஆபத்துக்கு உதவுவதாகப் பசப்பும் அன்னியர் வார்த்தையை நம்பவேண்டாம். 34. அன்னியரின் வார்த்தையும் காரியமும் அவ்வளவு நன்மைகளைத் தரா. 35. உங்கள் புருஷனும் பெற்றோரும் உங்களுக்கு உதவுவதுபோல அன்னியர் உதவமாட்டார்கள். 36. உங்களுடைய சகலமான அந்தரங்க விஷயங்களையும் உங்கள் புருஷரைத்தவிர இதாருடன் கூறவேண்டாம். 37. அவ்வாறு கூறுவதால் உங்களுக்கே தீங்கு நேரும். 38. நான் என் கெடுமதியால் பட்ட அநுபவத்தைப் பிறரிடம் கூறவும் வெட்கி உயிர்விடப்போவதுபோல நீங்களும் கெடுமதி கொள்ளாதீர்கள். 39. நாதனை நம்பி நானிலம் கொண்டாடும் நாரீமணிகளாய் விளங்கி முக்தி அடையுங்கள். 40. ஆனந்தத்தை அநியாயமாக இழக்காதீர்கள். 41. அன்புடைமையைக் கணவனிடத்தில் சூட்டுங்கள். 42. உங்களை என்றும் காப்பதற்குக் கர்த்தா அவன் என்பதை உணருங்கள். 43. என்போல் அவமானமுற்று அவதிக்கு உள்ளாகாமல் கணவன்மாரை ஆதரித்துப் பேரின்பம் அடையுங்கள். 44. கடவுளுடைய நினைவை மறக்காமல் மனத்தில் கொண்டு உங்களுடைய கணவரின் சுக வாழ்க்கையைக் கோருங்கள். 45. சதா உங்கள் பர்த்தாவின்

நலனை வேண்டி, ஆயுள் விருத்தியைக் கோரி, பகவானை பூஜை செய்யுங்கள்."

பின்னர், தன் கணவனின் பாதத்தைத்தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள்; கண்ணீரைப் பெருக்கினாள். வஸந்தாவின் காலையும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். ஜன்னலுக்கு அருகாமையில் கட்டிலமைந்திருந்தமையால் அவ்வாறு செய்ய அநுகூலமிருந்தது. அதன்பிறகு இனி நாம் இங்கு நிற்பது கூடாது; எவரேனும் விழித்துக்கொண்டால் அனர்த்தம்" என்று எண்ணி, மருந்துகள் வைத்திருந்த இடத்திற்குச் சென்று உடனே கொல்லக் கூடிய விஷத்தை எடுத்தாள்; "ஆ! என் விஷம புத்தியின் முடிவு விஷத்தினால் என்பதை இந்த மருந்து நிதரிசனமாக்கி விட்டதே! எனனப்பனே ஜகதீசா! பாவி என்னுடைய பாபத்தை க்ஷமிக்கும்படியாக நான் வேண்டவும் அருகதை இழந்தேன். என் பிராண நாதா! என் அன்பா! என் ஆருயிரே! என் செய்கையால் நான் மரணமடைகின்றேன். மகா உத்தமியாகிய உங்கள் பக்கலிலிருக்கும் வனிதை நீடூழி வாழட்டும். ஏ; கடவுளே! என்னைப் பலவிதத்திலும் கெடுத்த அந்தோனிப் பாவியை நீ பார்த்துக்கொள். என் ஆவியை நீக்கிவிடு" என்று வேண்டிக்கொண்டே கையிலிருந்த மருந்தை மடமடவென்றுவாயில்வார்த்துக்கொண்டுகுடித்தாள்.

அந்தோ! அவ்வாறு குடித்த தக்ஷணமே சொல்ல முடியாத சங்கடமும் எரிச்சலும் அவஸ்தையும் உண்டாய்த் திடீரென்று அவள் கீழே விழுந்தாள். அப்படி விழுந்த நிமிஷமே அவளுடைய மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அதாவது, 'நான் இங்குவந்து இரகஸியமாக இறந்த உண்மை தெரியாமற்போய்க் குற்றம் இங்குள்ளவர்களின்மேல் சாரும். ஐயோ! அந்தப் பயங்கரமான ஆபத்தில் ஒருவரையும் சிக்க வைக்காது நாம் இப்போதேவெளியேறிவிடவேண்டும்' என்று எண்ணி மெல்லத் தள்ளாடி திணறி நடக்கமாட்டாது நடந்து,

வீதிக் கதவைத் திறந்துகொண்டு, மீண்டும் சாற்றி விட்டு, படி இறங்குவதற்குள் தாங்கமாட்டாது வாந்தி எடுத்துவிட்டாள். அப்போது அவளுடைய விழி சுழல ஆரம்பித்தது. அறிவு மழுங்கத்தொடங்கியது. மெல்ல அவ்விடத்தை விட்டுப் பின்னும் நாலடி வைத்ததும் மீண்டுமொருமுறை இரத்தமாக வாந்தி எடுத்தாள். அதற்குள், நிலை புரள ஆரம்பித்தபடியால்,தடாலென்று கீழே விழுந்தாள். விழுந்தும் புரண்டுகொண்டே பின்னும் இரண்டடி தூரம் சென்றாள். அவளுடைய அவஸ்தை அதிகரிக்க அதிகரிக்க, தான் செய்த தீய பழக்கத்தையும் தனது முடிவின் கோரத்தையும் எண்ணி, நிரம்பவும் வருந்தியவாறு உயிரை இழந்தாள்.

அப்போது விடியற்காலம் மூன்று மணி இருக்கும். அவ்வழியில் வந்த ரோந்துக்காரன் மனோகரி விழுந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு, உற்றுப் பார்க்கையில், உயிரற்ற சவம் என்பதைத் தெரிந்து கொண்டு, உடனே அபார பிரமிப்பும், குழப்பமும், திகிலும் அடைந்து,"ஆ! நடு ரஸ்தாவில் சவம்! சவம்!!" என்று ஓவெனக் கூவியவாறு நின்றான்.

அதிகாரம் 4

பகலவனைக் கண்ட பனி

வீரநாதன் தன் மருந்து ஷாப்பு நிறைய மருந்துச் சரக்குகளை வாங்கி நிரப்பி, வியாபாரத்தைப் பலக்கச் செய்யவேண்டுமென்று, தான் முன்பு நினைத்திருந்ததற்கு இணங்க முயன்றான். ஏஜண்டு முன்னரே பணம் வாங்கிக்கொண்டு அளவற்ற பாட்டல்களை ஒரு பெட்டியில் வைத்து முத்திரையிட்டு, வீரநாதன் வீட்டிற்கு அனுப்பினான். வீரநாதன், அந்த மருந்துகளைப் பீரோக்களில் வைப்பதற்காகக் காகிதங்களை அவிழ்த்துப்பார்க்கையில், எல்லா பாட்டில்களும் மருந்தின்றிக் காலியாக இருந்தன; அதைக் கண்டு திடுக்

கிட்டு 'ஆ! இதென்ன மோசம்! பாட்டில்கள் மருந்து களே இல்லாமல் காலியாக இருக்கின்றனவே! பணத்தையும் முன்னதாக வாங்கிக்கொண்டானே!'' என்று பெருந்திகிலடைந்து, ஏஜண்டு வீட்டிற்குப் போய் விசாரித்ததில், அவன் அவ்வீட்டில் இருப்பவனல்ல வென்றும், எப்போதேனும் வருவான் என்றும், அவன் அங்கே இல்லை என்றும் செய்தி கிடைத்தது.

அதைக்கேட்டதும் முன்னிலும் அதிகரித்த குழப்பத்தை யடைந்து, "ஐயோ! பாவியை முன்பின் அறியாது மோசம் போனேனே! இனி, இந்த மருந்துகளைச் செய்த ஷாப்பிற்கு எழுதிக் கேட்கலாம்'' என்று எண்ணி, அவர்களுக்கு விவரம் எழுதிக் கேட்டதில், "அந்தப் பெயர் கொண்ட மனிதன் எங்களுக்கு ஏஜண்டேயல்ல; அவன் யாரோ தெரியாது. நாங்கள், சமீபத்தில் 500 ரூபாய்க்கு மருந்தும் அனுப்பவில்லை'' என்று பதில் கிடைத்தது. வீரநாதன், இந்த மோசடியைப் போலீஸாருக்குத் தெரிவித்தான். அவர்கள், என்ன விசாரித்தும் புலன் கிடைக்கவில்லை. 500ரூபாய் அநியாயமாக நஷ்டமானதால் உண்டான பெருந்துக்கம் தாங்காது வருத்தமுற்றான். தெரிந்த ஒருவரிடமிருந்து அந்த ரூபாயைக் கைப் பதிலாகக் கடன் வாங்கியிருந்தான். ஒரு மாதத்தில் திருப்பிக் கொடுப்பதாகப் பேச்சு; அதேபோல ஒரு மாதமாயிற்று. அவர்கள் பணத்தைக் கேட்க வந்துவிட்டார்கள். ஷாப்பிலும் மருந்து இல்லாமையால், உள்ளூரிலுள்ள ஷாப்புகளில் மருந்து அப்போதைக் கப்போது வாங்கி அங்கும் பாக்கி சேர்ந்துவிட்டது. "ஐயோ! என்னசெய்வது?'' என்ற ஏக்கத்தினால் வீரநாதன் மிகவும் இளைத்து மெலிந்து போனான்.

இவன் இளைத்துப்போனதைக் கண்ட வஸந்தா நிரம்பவும் வருத்தங்கொண்டு, "நாதா! எக்காரணம் பற்றித் தங்களின் மேனி இளைத்துவிட்டது! என்னிடம் காரணங் கூறலாகாதா?'' என்று கேட்டாள். இது

கேட்ட வீரநாதன் மிக்க வருத்தமடைந்து, "கண்மணி! உன்னிடம் கூறினுல், உன் சந்தோஷம் கெடுமே என்று கூருதிருந்தேன். நீயே கேட்டும் கூருது மறுப்பது சரியல்லவாகையால் உரைக்கிறேன்" என்று கூறி நடந்த சகல விஷயங்களையும் எடுத்துரைத்தான்.

அம்மொழி கேட்ட மின்னிடை மாதரசியாகிய வஸந்தவல்லி திடுக்கிட்டு, "ஹா! நம்பின மனிதனு மோசம் செய்தான்! ஐயோ! இதென்ன கலிகாலத்தின் கோலம். அவனை நம்பித் தாங்கள் பெருந்தொகையாகிய 500 ரூபாயைக் கொடுக்கலாமா! இக்காலத்தில் வேண்டியவர்களாயிருப்பவர்களே மோசம் செய்வதும், நம்பிக்கைத் துரோகம் செய்வதும் சகஜமாக நடைபெற்று வருகையில், அந்த மனிதனை நம்பியது நமது போதாத காலந்தான். எல்லாம் கடவுளின் செயலே. சரி! தொலைந்ததைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். எவ்விதமோ காரியம் நடைபெறும். நாதா! இதற்காக வருந்தி உடம்பு இளைக்கக் கவலைப் படுவது நன்ரு! ஏதோ நம்மைப் பிடித்த பீடை தொலைந்ததென்று எண்ணுங்கள். நேற்று ஒரு கடிதம் வந்தது. அதாவது,—தாங்கள் இந்த மருந்துஷாப்பிற்கு பாக்கி தரவேண்டுமாம். இம் மதியுடன் வருடம் முடிந்துவிடுகிறபடியால், இந்த வாரத்திற்குள் (அகவுண்ட்) கணக்குப் பைசல் செய்துவிடவேண்டுமென்று கண்டிப்பான கடிதம் எழுதியிருக்கிருர்கள். நாதா! இந்தக் கடன்களையெல்லாம் உடனே செலுத்திவிட்டு, நஷ்டமின்றி நாம் கஷ்டமற்ற ஜீவனம் செய்யலாம்" என்று மிகுந்த வாஞ்சையுடன் கூறினுள்.

வீர:—கண்மணி! உனக்கு நான் மேலும் நகைகளைச் செய்து பூட்டி அழகு பார்க்க முடியாத பாவியாய்விடினும் உனது மேனியிலிருப்பதை வாங்கிக் கொள்ள நான் பிறந்தேனே! முன்னர் பாக்கியிருந்த கடனுக்கு, நீ உன் காசுமாலையை விற்று, நான் ஊரில்லாத சமயத்தில் நீயே கொடுத்துத் தீர்த்துவிட்

டாய். இப்போதும் அவ்வகையில் செய்வதற்குத் தானே காலம் வந்துவிட்டது.

வஸ:—நாதா ! நான் தாங்கமாட்டாத ஆபரணங்களைச் சுமைபோன்று சுமந்திருப்பது, சமயத்திற்கு உபயோகப்படுத்துவதற்குத்தானே ! பின் வேறு எதற்கு? நேற்று, நான் அக் கடிதம் பார்த்தவுடனே, உங்கள் பிதாவிடம் எனது ஒட்டியாணத்தைக் கொடுத்து விற்றுவிடச் செய்தேன். அதில், 300 ரூபாய் கிடைத்தது. அந்த ரூபாயில் அந்த ஷாப்பின் பாக்கியை உங்கள் பிதாவைக்கொண்டே செலுத்தி விடச்செய்தேன். மிகுந்தவற்றை மளிகைக்கடைக்கும் வீட்டு வாடகைக்கும் கொடுத்தேன். இதோ, இந்தச் சங்கிலியையும், வங்கி, நாகஸத்தையும் உங்கள் பிதாவிடம் கொடுத்தனுப்புகிறேன். இதை விற்று மேலே ஆகவேண்டியதைச் செய்யலாம். இந்தப் பூஷணம் குறைவதால், என் அழகு குறைந்துவிடாது. கடவுள் சிருஷ்டி என்றும் ஒரே தன்மையுடையது.

வீர:—ஐயோ! வஸந்தா! உன் எல்லா ஆபரணங்களும் இவ்விதமே ஒழிந்துவிட்டால், மீண்டும் எப்போது இவைகளைக் காண்பது? என் கண்ணே! உனது அழகு இயற்கையிலேயே மிக்க மேன்மையாக விளங்கினாலும் அழகுக்கு அழகு செய்தால் இன்னும் அழகாயிராதா ! நான் எவ்விதம் இவைகளை விற்பேன்?

வஸ:—நாதா! என் ஆபரணங்கள் எல்லாம் தங்களுடைய அன்பும் காதலுமேயன்றி வேறில்லை. இந்தப் பூஷணங்கள் இன்று சென்றால் நாளை வரும். இதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆபத்திற்கு உதவாத பொருள் எதற்கு? இதை நீங்கள் கவனிக்கவேண்டாம். எல்லாக் காரியங்களையும் கடவுள் தம் செயல்படி நடத்துகிறார். இதுவும் அவருடைய திருவுள்ளமே!- என்று கூறிக்கொண்டே முன் தெரிவித்த நகைகளை எடுத்துத் தன் மாமனாரிடம் அளித்து விற்றுக்கொண்டு

வரச் செய்தாள். அவரும் இதுவிஷயமாகப் பேசியதற்குத் தகுந்த சமாதானம் சொல்லி அனுப்பினாள்.

கிழவர், நகைகளைக்கொண்டு நகை ஷாப்பிற்குச் சென்று கூலி தள்ளிப் பவுன் விலைக்கு விற்று, பணம் வாங்கிக்கொண்டு வந்தார். அவைகளை விற்றதில், மொத்தம் 700 ரூபாய் கிடைத்தது. வஸந்தா அதை வாங்கித் தன் பர்த்தாவிடங் கொடுத்து, சகல கடன்களையும் அடைத்துவிட்டு வரும்படியாக வேண்டினாள். பிறகு, வீரநாதன் சகல பாக்கிகளையும் கொடுத்துவிட்டு வந்தான். அன்றுமுதல், தான் இனி மருந்துஷாப்பு வைப்பதில் பிரயோஜனமில்லை என்றும், ஒரு ஆஸ்பத்திரியில் வைத்தியனாக அமருவதே உசிதமென்றும் கணவனும் மனைவியும் கூடி யோசனை செய்து ஆஸ்பத்திரிக்குத் தக்க சிபார்சுடன் சென்று வெகு நாள் பிரயத்தனம் செய்ததில் ஒரு வேலை கிடைத்தது. அவ்வாறு வேலை கிடைத்தபிறகு தன்னிடம் மிச்சமிருந்த மருந்து வகைகளில் சிலவற்றை வைத்துக்கொண்டு மிகுதியைக் கம்பெனிகளில் போட்டுவிட்டு மருந்துச்சாலையை எடுத்துவிட்டு வைத்தியத்திற்கு வருவோருக்குத் தக்க மருந்துகளை எழுதிக் கொடுத்துவிடும் வழக்கத்தில் வந்தான். ஆஸ்பத்திரியில் வரும் சம்பளத்தையும்;பிரத்யேக வைத்தியத்தில் கிடைக்கும் தொகையையும் வைத்துக்கொண்டு சுகஜீவியாக கவலையற்ற மனத்தினனாய் வஸந்தாவுடனும், தன் தாய் தந்தையருடனும் சந்தோஷமாகக் காலத்தைக் கடத்திவந்தான்.

இவ்விதம் சந்தோஷமாக இருக்கும் நாளில் வஸந்தா ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றாள். அதை வஸந்தாவின் மாமியாரும் மாமனாரும் வெகு செல்வாக்குடன் வளர்த்து வந்தமையால், அது தன் தாயை நினைக்காமலும், தாயிடம் இருக்காமலும் பாட்டியினிடமே இருந்தது. குழந்தையின் சகல பாதுகாப்பும் கிழவர் கிழவிகளே செய்துவந்தார்கள். இவ்விதம் இருக்கும் நாளில்தான் நம் முன்னதிகாரத்தில் தெரி

வித்தபடி, மனோகரி வீரநாதன் வீட்டிற்கு வந்தது; கோர சம்பவம் நடந்தது.

சவத்தைக் கண்டு ரோந்துக்காரன் கத்தியதும், அண்டை அயலில் நித்திரை செய்யும் எல்லோரும் திடுக்கிட்டு எழுந்து, வீதியில் ஓடி வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களெல்லோரும், "என்ன! என்ன!" என்று கேட்டுக்கொண்டே பார்க்க, ஒரு அழகிய வனிதை சவமாகக் கிடக்கக் கண்டு, "ஹா! இதென்ன! இதென்ன! அநியாயக் கொள்ளையாய் இருக்கின்றதே! நடு வீதியில் இச் சவம் எங்கிருந்து வந்தது?" என்று எல்லோரும் பிரமித்து நடுங்கிக் கேட்டார்கள். சிலர், "ஆ! இந்த மாதை நாங்கள் எங்கேயோ பார்த்திருக்கிறோம்; அது நினைவுக்கு வரவில்லையே!" என்றார்கள். பின்னும் சிலர், "ஆ! இந்த அம்மாளின் புகைப்படம் பேப்பரில் வந்திருக்கையில், நாங்கள் பார்த்திருக்கின்றோம். சீமைக்குப் போயிருக்கிறார்கள் இவர்கள்; அந்தச் சந்தர்ப்பத்திலேதான் எடுத்தது அந்தப் படம்" என்றார்கள். இவ்விதமான குழப்பத்தில் அதிகமான கூச்சல் கிளம்பினபடியால், அந்த வீதியிலுள்ள அநேகர் ஓடிவந்து இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

ஒருவர் பேசுவது ஒருவர் செவிக்கெட்டாத விதமாக இரைச்சல் உண்டாயிற்று. அதில் ஒருவன், "ஆ! இவள் டாக்டர் வீரநாதனின் மனைவி. இவளை நான் டாக்டர் வீட்டில் பன்முறை பார்த்திருக்கிறேன். இவள் சீமைக்குச்சென்றிருந்தாள். எப்போது திரும்பி வந்தாள்? ஏன் இவ்விதம் வீதியில் அநாதைச் சவமாகக்கிடக்கிறாள்?" என்றான். அந்த அமளியின் இரைச்சலினால் நமது வீரநாதனும் விழித்துக்கொண்டு ஓடி வந்தான். அவனுடைய சயனக்கிரகம் பின்புறமுள்ளதாகையால், இந்தக் கூச்சல் அதி விரைவில் கேட்காது, சற்று தாமதமாயிற்று. உடனே எழுந்து வந்த அவன் "என்ன!" என்று கூறிக்கொண்டே வீதியில் கும்பலை

விலக்கிக்கொண்டு அங்கு சவமாகக்கிடந்த மனோகரி யை நோக்கியதும் தன்னையும் அறியாது திடுக்கிட்டு, நடுநடுங்கி, "ஆ! இவளுடைய சவம் இவ்விடத்தில் எவ்வாறு வந்தது? ஐயோ! மனோகரி! உன் நாகரிகச் சுயேச்சை உன்னை நடுச் சந்தியில் சவமாக்கிவிட்ட தா?" என்று பழைய பாசத்தினால் வாய்விட்டுக் கூறி, அவளுடைய கோரமான காட்சியைக் கண்டு கண்ணீ ரும் உதிர்த்து அப்படியே நின்றான்.

இதைக் கேட்ட (கண்ட) எல்லோரும் அவள் வீர நாதனுடைய மனைவிதான் என்பதைத் தெரிந்துகொண் கொண்டார்கள். அதற்குள், போலீஸுக்குச் செய்தி எட்டி, அவர்களும் வந்து தமது அதிகார தோரணை யைச் செலுத்தலானார்கள். "இந்த மனுஷி இங்கு எப் படி சவமானாள்? இது தற்கொலையா? வேண்டுமென்று யாரேனும் செய்த கொலையா?" என்ற பிரச்னைகள் கிளம்பின. இந்த அலங்கோலத்தில் அளவற்ற கும்ப லும் கூடியபடியால், வீரநாதன் சவத்தின் வார்சு என்பதை எல்லோரும் தெரிந்துகொண்டார்கள். போலீஸார் 'ஐயா! இந்த மனுஷி உம் மனைவி என்று தெரிகின்றது. ஏன் இவர்கள் நடு வீதியில் இறந்து கிடக்கவேண்டும்?' என்று வீரநாதனைகேட்டார்கள்.

வீர:—(இக் கேள்வியால் நடுக்கங்கொண்டு) இவள், எனது மனைவியாக ஒருகாலத்தில் இருந்தாள். இவளுக்கும் எனக்கும் சம்பந்தம் விட்டுப்போய் வருடக்கணக்காயிற்று. இவளுடைய நடத்தை எனக் குப் பிடித்தமில்லாது நான் கண்டித்ததற்கு இவள் என்னை விட்டுவிட்டு அக்கரைச் சீமைக்கு ஓடிவிட் டாள். இவளுடைய முடிவான சந்திப்பு அன்றுடன் நீங்கியது. இவள் செல்கையில் எழுதிச்சென்ற முறியல் சீட்டும் என்னிடம் இருக்கின்றது. அன்றுடன் இவளை நான் வெறுத்துத் தள்ளிவிட்டு மறுமணம் செய்து கொண்டேன். அன்று சென்ற இவளை நான் இப்

போதுதான் சவமாகக் கண்டேன். எனக்கு இவளுடைய செய்தி ஒன்றும் தெரியாது.

போலீஸ்:—அப்படியானால் உங்களிடம் மனஸ்தாபம் கொண்டுதான் இவர்கள் சென்றுவிட்டார்களோ?

வீர:—எனக்கும் அவளுக்கும் வேறு எந்த விதத்திலும் மனஸ்தாபம் கிடையாது. புது நாகரிகத்திலும் சுயேச்சையிலும் அவள் ஈடுபட்டு நிரம்பவும் அநீதியாக நடந்தாள். முதலில் நானும் அந்த நாகரிகத்தில் பழகியவனெனினும் அந்த அனுபவத்தில் மிகுந்த கஷ்டத்தை அடைந்தேனாதலால், நாகரிக மயக்கில் மூழ்கிப் பாழாகாதே என்று அதிலுள்ள சாதக பாதகங்களை எடுத்துக் கூறியது அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவள், "நான் இந்து மதத்தைவிட்டுக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துவிடப் போகிறேன்; இனிமேல், உனக்கும் எனக்கும் பாத்யதை இல்லை" என்று கூறிப் போனாள். அன்றிரவே அவள் இவ்வூரையும் விட்டுப் போனதாகத் தெரியவந்தது. அவள் சென்ற பிறகு அவளுடைய கள்ளத்தனம் ஒன்று எனக்கு ஓர் கடிதமூலம் தெரிந்தால், என் மனம் மிகவும் வருத்தமுற்றது. பிறகு என் மனத்திற்கு உகந்த மாதை நான் மணந்துகொண்டேன். இவ்வளவுதான் விஷயம். இச்சமயம் இவளுடைய சவம் இவ்விடத்திற்கு எவ்விதம் வந்ததென்பதே எனக்குத் தெரியவில்லை—என்றான்.

அதற்குள், ஒரு போலீஸ் வீரன் டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தான். டாக்டர் பிரேத சோதனை செய்து பார்த்து, "இவள் வியாதியினால் இறக்கவில்லை; விஷத்தினால்தான் இறந்திருக்கிறாள். இவள் விஷம் உண்டதும் ரத்தமாக வாந்தியாகி இருக்கிறது. இதோ அந்த ரத்தம்" என்று மனோகரியின் பக்கத்தில் இருந்த வாந்தியைக் காட்டினான். விளக்கு வெளிச்சத்தில் போலீஸார் நன்கு அதைக் கவனித்தார்கள். மற்றையோரும் பார்த்தார்கள். வாந்தி ஒரே ரத்தமாக இருந்ததுடன் அது சற்று தூரத்திலும் தெரிவதைக்கண்ட

போலீசார் அந்த அடையாளத்தைக் கண்டு அங்கு சென்று பார்த்தார்கள். விளக்கின் வெளிச்சம் பிரகாச மாகத் தெரிவதால், ரத்த வாந்தி இருக்குமிடமெல்லாம் தெரிந்தது. அந்தக் குறிப்பைப் பார்த்துக்கொண்டே சென்றதில், வீரநாதன் வீட்டு வாசலில் வாந்தி எடுத் திருப்பதையும் அதற்குமேல் வாந்தி இல்லாமையையும் நன்ருகத் தெரிந்துகொண்டதும் அவன் மிகுந்த ஆச்ச ரியமடைந்து அந்தக் குறிப்புகளையும், ரத்த வாந்தி வீர நாதன் வீட்டு வாயிற்படியிலிருந்தே ஆரம்பமாயிருக் கிறதென்றும் அதற்கு அப்புறம் ஒன்றுமில்லை என்றும், அந்த மாது அந்த வீட்டிலிருந்தே வாந்தி எடுத்துக் கொண்டு வந்திருப்பதாக இந்த வாந்தி நன்ருக நிரூபிக் கின்றது என்றும் போலீஸ் அதிகாரிகளிடம் கூறினுன்.

இதைக்கேட்ட போலீஸ் அதிகாரிகள், அவ்விடத் திற்குச் சென்று, அவைகளை நன்ருகக் கவனித்துப் பார்த்து, அந்தச் சேவகன் கூறியதை ஆமோதித்து, "ஆ! அப்படித்தான் இருக்கலாம்" என்ருர்கள். தன் வீட்டுப் படியில் வாந்தி எடுத்திருப்பதைக் கண்டதும் வீரநாதன் திடுக்கிட்டு, "இவள் நம்முடைய வீட்டு வாயிலில் வந்து ஏன் வாந்தி எடுத்திருக்கவேண்டும்? இதென்ன ஆச்சரியம்! இந்த விஷம் நம்முடைய அல மாரி பாட்டலிலிருப்பதுபோல இருக்கின்றதே!" என்று தனக்குள் வியந்து நின்ருன். போலீஸ்காரர்க ளெல்லோரும் ஒன்று கூடி யோசித்து, "இந்த வீட்டி லிருந்து வாந்தி ஆரம்பமாயிருப்பதிலிருந்து இவ் வீட் டிற்கும் அந்த அம்மாளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த வீட்டார் விரோதியாக இருக்கவேண்டும். இவர்கள் பலவந்தமாக விஷத்தைக் கொடுத்து அவளை வீதியில் தள்ளியிருக்கவேண்டும். அப்போது அந்த அம்மாளுக்கு விஷத்தின் உபத்திரவம் அதிகரித்துவிட்டதால் வாந்தி எடுத்துக்கொண்டே ஸ்மரணையற்று விழுந்திருக்கவேண்டும். அப்படியே புரண்டுசென்ற இடத்திலும் வாந்தியாயிருக்கவேண்

டும். அவ்வமயமே உயிர் நீங்கி இருக்கவேண்டும். இவ் வீடு யாருடையது?" என்று கூறிக்கொண்டே கவ னிக்கையில், டாக்டர் வீரநாதன் என்று பெயர் பதித்த பலகை தொங்குவதைக் கண்டு வியப்புற்று, வீரநாதனை நோக்கி, "ஓ! இது உங்கள் வீடா! இந்த அம்மாளைத் தாங்கள் இப்போதுதான் சவமாகப் பார்த்ததாகச் சொன்னீர்களே! இந்த அம்மாள் இந்த வீட்டிலிருந்து விஷத்தை உண்டு வாந்தியுடன் வெளிப்பட்டிருப்பது நன்றாக விளங்குகின்றதே! அப்படியிருக்க, நீர் ஏதும் அறியாதவர்போலப் பேசிவிட்டுத்தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீரே! இவள் உம் வீட்டிற்கு எப்போது வந் தாள்? உண்மையில் நடந்ததைக் கூறும். எங்களுடைய சந்தேகம் உங்கள்மீதே இருப்பதால், இனி நாங்கள் உங்களை விடமுடியாது" என்று கேட்டார்கள்.

இதைக் கேட்ட வீரநாதன் தலையில் இடிவிழுந்தது போலத் தவித்தான். "ஐயோ! கனவிலும் கருதாத இந்தப் பேரிடி எவ்விதம் வந்தது!" என்று எண்ணிப் போலீஸாரை நோக்கி, "எனக்கு உண்மையில் இவளு டைய செய்தியே தெரியாது. இவள் எவ்விதம் இங்கு வந்தாளோ, எவ்வாறு விஷமுண்டு இறந்தாளோ கட வுள்மீது ஆணையாக நான் பார்க்கவில்லை; இவளுடைய சவத்தையே நான் முதலில் பார்த்தேன். இவளுடைய சீமைப் பிரயாணத்திற்குப் பிறகு எனக்கு இவளுடைய சம்பந்தமே கிடையாது" என்றான்.

போலீஸ்:—ஓ! அப்படி உமக்கு ஒன்றும் தெரி யாமற்போனால் உமது வீட்டில் விஷம் குடித்த வாந்தி எவ்விதம் வரும்? உம்மைப் பகைத்துக்கொண்டு அவள் சீமைக்கு ஓடிவிட்டாள் என்கிற ஓர் க்ரோதத்தை அவள் மீது கொண்டு அவளை விஷமிட்டுக் கொன்றும் இருக் கலாம். உமது வீட்டை நாங்கள் சோதனை போட வேண்டும்—என்றுகூறி, அவனை அழைத்தார்கள்.

வீதியில் நடக்கும் இத்தகைய கலவரக் கூச்சலைக் கேட்டு வலந்தவல்லியும் கண் விழித்துக்கொண்டு

வீதியில் வந்தாள். ஓரே கூட்டமாயும் இரைச்சலாயும் இருந்ததால், அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ சவம் இருப்பதாயும் அதைப் பற்றியே பேசுவதாயும் யூகத்தினால் தெரிந்துகொண்டாள். அவ்விடத்திலேயே நின்று கவனித்துக்கொண்டிருக்கையில், ரத்த வாந்தியைப் போலீஸார் பார்த்ததையும், அவர்கள் அது விஷயமாகச் சந்தேகித்துக் கூறிய வார்த்தைகளையும் கேட்டு, இறந்த மாது தனது மூத்தாள் என்பதும் அவளுக்கு விளங்கியது. தன் கணவன்மீது சந்தேகிப்பதாகக் கூறுவதைக் கேட்டதும், அவள் தீயை மிதித்தவள்போலானாள். அவளுடைய நிலை புரண்டுவிட்டது. "ஐயோ! இதென்ன பரிபவம்! இதென்ன கொடுமை!" என்று வருத்தமுற்று நின்றுகொண்டிருக்கிறாள்.

அத்தருணம் போலீஸார் வீட்டைச் சோதனை போடவேண்டுமென்று கூறியதைக்கேட்ட வீரநாதன், திக்பிரமை கொண்டு, "ஐயோ! என் வீட்டை ஏன் சோதனை போடவேண்டும்? இவள் என் வீட்டிற்குள் வரவே இல்லையே! ஆயினும் உங்கள் சட்டப்படி நீங்கள் செய்துகொள்ளுங்கள். எனக்கு அதைப்பற்றிச் சந்தேகமே இல்லை" என்று கூறித் தன் வீட்டிற்குள் அவர்களை அழைத்துக்கொண்டுவந்தான். வஸந்தவல்லி, தன் சயன அறையில் ஒரு ஓரமாக நின்றிருந்தாள். வீரநாதன், மனோகரியின் கடிதத்தையும் அந்தோனியின் கடிதத்தையும் எடுத்துப் போலீஸாரிடம் கொடுத்தான். அதை அவர்கள் பார்வையிட்டதும் தமது தீர்மானத்தை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு, முதலில் மருந்து வைக்கும் அறையிற் சென்று மருந்துகளைக் கவனித்தார்கள். மனோகரி விஷத்தை எடுத்துக் குடித்ததும் அதன் அருசியின் பாதையால் பாட்டலைக் கீழேயே போட்டுவிட்டதால், அது ஒரு பக்கம் உடைந்துவிட்டது; கார்க் ஒருபுறம் கிடந்தது. இந்த அலங்கோலத்தைக் கண்டதும் போலீஸார் முன்னிலும் அதிக சந்

தோஷத்துடன், "ஆ! இதோ இதோ! இந்த மருந்து பாட்டல் உடைந்திருக்கின்றது. இதைச் சோதித்துப் பாருங்கள்" என்று டாக்டரிடம் கூறினார்கள். போலீஸாருடன் வந்த டாக்டர் அந்த மருந்தையும், வாங்கியான ரத்தத்தையும் சோதித்து, "இதே மருந்துதான் கொடுத்திருக்கிறது. அந்த மாது இவரை அலக்ஷியஞ் செய்து ஜாதிவிட்டு ஜாதியில் சேர்ந்துகொண்டு, அன்னியனையும் மணம் புரிய நிச்சயித்து விட்டபடியால், அவள்மீது அளவு கடந்த ஆத்திரங்கொண்டு பகைமை பாராட்டியிருக்கவேண்டும். அவள் சீமைக்குப் போய் விட்டபடியால் அவர் ஒன்றும் செய்வதற்கு இயலாதவராயிருந்திருக்கிறார். இன்று அவளைக் கண்டதும் அவள் மீதிருந்த ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு இந்த விஷத்தைக் கொடுத்து அவளுடைய நினைவு தப்பும் சமயத்தில் வீதியில் தள்ளியிருக்கிறார். இவ்விடத்திலிருந்தால் சந்தேகமதிகரிக்குமென்று அவ்வாறு செய்துவிட்டது நன்றாகத் தெரிவதால், குற்றம் இவர்மீதுதான்" என்று வைத்தியர் கூறியதைப் போலீசார் ஆமோதித்து, வீரநாதனை நோக்கி, "ஐயா! குற்றவாளி நீர்தான் என்ற சந்தேகம் எமக்குப் பலவிதத்திலும் புலப்படுவதால், நாங்கள் உம்மைக் கைது செய்கிறோம்" என்று கூறி, அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

அந்தோ! வீரநாதனின் நிலைமை அப்போது எவ்விதமிருக்கும் என்பதைக் கூறவேண்டுமா! அவனுக்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்கிற நிலைமை வந்துவிட்டது. இந்த கோரத்தை மறைந்து கவனித்த வஸந்தவல்லிக்கு ஆத்திரமும் விசனமும் பொங்கின. "ஆ! அநியாயமே! அக்ரமமே!" என்று முட்டிக் கொள்கிறாள். சற்றுப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. போலீஸார், தன் கணவனின் கையைப் பிடித்திருப்பது அவளுடைய உயிரையே பிடித்துவிட்டதுபோலவிருக்கிறது. வீரநாதன், தான் குற்ற

வாளியல்ல; தனக்கொன்றும் தெரியாது என்று பன் முறை கூறியும் போலீஸார், "எங்கள் தீர்மானத்தை மாற்ற முடியாது. குற்றவாளி இல்லை என்பதை நீர் கோர்ட்டில் நிரூபித்து விடுதலையடையலாம்" என்று கூறி, ஸ்டேஷனை நோக்கி நடக்கவாரம்பித்தனர். வீர நாதனின் பெற்றோர்கள் இந்த அநியாயமானகோரக் காட்சியைக் கண்டு துடித்துப் புலம்பி வாயில் வந்த வாறு கதறுகிறார்கள்.

போலீஸார் வீரநாதனை அழைத்துக்கொண்டு செல்லத் தயாராய் வீதிப்பக்கம் சென்றார்கள். அவ் வமயம் வஸந்தா வெகு துணிவுடன் ஒரு பாத்திரத்தை எடுத்து விஷம் வைத்த பாட்டல் உடைந்த இடத்திற் குச் சென்று அங்கு கீழே உடைந்த இடத்தில் சிதறிக் கிடந்த விஷத்தை அப்பாத்திரத்தில் தடவி, தன் கையி லும் தடவிக்கொண்டு அந்தப்பாத்திரத்துடன் வீதிக்கு ஓடிவந்து அந்தக் கூட்டத்துக்கு மத்தியில் வெகு தைரி யத்துடன் புகுந்து, " கனம் பொருந்திய போலீஸார் அவர்களே! குற்றவாளி யொருவராயிருக்க நிரபரா தியை நீங்கள் கைது செய்வது உங்கள் கண்ணியமான சட்டத்திற்குச் சிறிதும் அடுக்காது. கேஸ் ஜோடிப் பதில் நீங்கள் நிரம்பவும் சமர்த்தர்கள் என்பது உலக மறிந்ததேயாகும். இவ்விடத்திலும் அதையே கையாடி விட்டீர்கள்; உண்மையில் அவர் நிரபராதி என்பதைக் கடவுள்மீது ஆணையாக நான் கூறுவேன். குற்றவாளி நானேயாவேன். அவரைவிட்டு என்னைக் கைது செய் யுங்கள். இம்மாதைக் கொன்றவள் நானே! இவளை நான் படத்தில் பார்த்திருக்கிறேன். இரவு இவர்கள் இவ்வீட்டு வீதியில் வந்தபோது இவர்களைக் கண் டேன். உடனே நான் தெரிந்துகொண்டேன். 'நீ யார்? இங்கு ஏன் இருக்கிறாய்?' என்றேன். அதற்கு இந்த அம்மாள், "என் பர்த்தா இவ்வீட்டிலிருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன்; கதவை இடித்தேன். யாரும் திறக்காமையால், தூக்கக் கலவரம் என்று எண்ணி

னேன். நீ யார்? எனக்குத் தாகமாகவிருக்கிறது; கொஞ்சம் தண்ணீர் கொடு'' என்று கேட்டாள். இதைக் கேட்டதும் எனக்குக் குழப்பமுண்டாய் விட்டது. "இவளுடைய அழகில் மீண்டும் என் நாதர் ஈடுபட்டு, இவளை மறுபடியும் வீட்டில் வைத்துக் கொண்டு என்னைத் தள்ளிவிடுவாரோ, எனக்கு என்ன துன்பம் இவளால் நேருமோ!'' என்கிற பொறாமை என் மனதில் குடியேறியது. நான் உடனே மாறிவிட்டேன். 'இவள் உயிருடன் இருப்பதே நமக்கு ஆபத்து' என்று எண்ணி, இந்தக் கோப்பையில் தண்ணீர் வார்த்து அதில் அந்த விஷத்தைக் கலக்கிக் விட்டேன். கொடுத்த க்ஷணமே, அவள் இங்கு இருந்தால் ஆபத்து நேரும் என்று எண்ணி, மெல்ல அவளை வீதியில் அழைத்துச்சென்று யார் வீட்டிலே னும் விட்டு விட எண்ணினேன். அதற்குள் அவளுடைய ஸ்மரணை தப்பிவிட்டது. அவளுக்கு, பலமான வாந்தி ஆரம்பித்துவிட்டது. உடனே என் மீது சந்தேகம் வராதிருக்கும் பொருட்டு, அவளை நடு ரஸ்தாவில் விட்டுவிட்டு, உள்ளே சென்று விட்டேன். இது இப்படியே அநாதைப் பிணமாகப் போய்விடும்; கேஸ் வெளிவராதென்று எண்ணினேன். அவ்வாறு நடக்காது, கேஸ் வெளியாய் நிரபராதியாகிய என் கணவரின்மீது குற்றம் ஏற்பட்டதாகையால், நான் செய்ததை நானே ஒப்புக்கொண்டேன். இதோ விஷங் கலந்து தண்ணீர் கொடுத்த கோப்பையைப் பாருங் கள்; என் கையைப் பாருங்கள்'' என்று கூறியவாறு கோப்பையையும் கையையும் காட்டினாள்.

இந்த அதிசயமான—ஆச்சரியமான—வரலாற்றைக் கேட்ட போலீஸார்முதல் எல்லோரும் ப்ரமித்துத் திகைத்துப்போனார்கள். வீரநாதன் மட்டும், "இது என்ன! விவரமே தெரியவில்லையே! இந்த உத்தமி என்னை மீட்டுவிட எண்ணங்கொண்டு பழியைத் தன்மீது போட்டுக்கொண்டிருக்கிறாள்'' என்று

தீர்மானங்கொண்டான். இதற்குள் நன்ருய் உதய மாய்விட்டது. வஸந்தவல்லி, தன் கணவனைக் கண் சாடையினுலேயே பேசாதிருக்கும்படியாகக்கூறினுள். வஸந்தவல்லி சொல்லிய காரணங்கள் யாவும் உண்மை யாக இருக்கலாம் என்று நம்பி ஆமோதித்து, அந்தப் பாத்திரத்தைப் பார்த்துப் பெரிய வெற்றி கண்டுவிட்ட தாகச் சந்தோஷித்து, இவள்தான் குற்றவாளி என்று சில வாக்குமூலங்கள் கேட்டு வஸந்தவல்லி அளித்த பதிலால் திருப்தி கொண்டு வீரநாதனை விட்டுவிட்டு, வஸந்தவல்லியைக் கைது செய்து, பிணத்தையும் எடுத் துக்கொண்டு, போலீஸார் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தனர்.

ஐயோ! வீரநாதன் வஸந்தவல்லியின் கண்ஜாடை யைக் கவனிக்காமல் எவ்வளவோ கூறினுன். அவை யெல்லாம் போலீஸாரால் தள்ளப்பட்டன. "ஆ! என் கண்மணீ! வஸந்தா! வஸந்தா! உன் பேரறிவை நான் என்னவென்று கூறுவேன்? நீ என்னைக் காக்கும் பொருட்டாக, குற்றவாளியாக அகப்பட்டுக் கொண் டாயே! இவ்விதம் உயிரைக் கொடுத்துக் காக்கும் உத் தமியை உலகில் இக்காலத்தில் கண்டதுண்டோ? என் ரத்தினமே! வஸந்தாமணி! என் ஆபத்தை நீக்கும் நிமித்தம் ஒரு வைரமாலையைக் கொடுக்க மறுத்த இரா க்ஷஸியின் பொருட்டு, நீ உன் உயிரையே த்ருணமாக மதித்துக் கொடுக்க முன்வந்தாய்! உனது உயரிய குணத்தை-உத்தமப் போக்கை, விலை மதிக்கக்கூடாத அன்பை—என்னென்று புகழ்வது? ஹா! என் இல் லரசியே! இன்பவல்லியே! என்னவித சாக்ஷியத்தைக் கொண்டு உன்னை நான் தப்பவைப்பேனடீ! என் கிளியே! என்னை அலக்ஷ்யம் செய்து சென்ற பாபி, இருக்கையில்தான் துன்பம், இறக்கையிலும் தீராத துன்பத்தைத் தலைமீது வைக்கும்பொருட்டு, என் வீட் டில் எவ்விதம் விஷமுண்டாள்? ஒன்றும் தெரியவில் லையே? ஐயோ! ஆபத்தே! இதென்ன ஒருவிதமான

புலனும் தெரியாத மர்மமான—மாயமான—வேலை நடந்திருக்கின்றதே! என் கண்ணே! என்னைக் காக்கும்பொருட்டு நீ உன்னுயிரைக் கொடுத்துவிட்டாய்! உன்னைக் காக்க நான் என்ன செய்வேன்? பாவி,சண்டாளி இறந்தும் என்னை வருத்த வேண்டுமா? இந்த அநாதைச் சவம் கிடந்த பரிபவத்திற்கு என் பக்கம் கடவுளையன்றிச் சாக்ஷி கூற யாரேனுமுண்டா! ஐயோ! என்ன செய்வேன்!'' என்று தாங்கமாட்டாத சங்கடத்தினால் தவித்துத் துடிக்கின்றான்; வீதியெல்லாம் புலம்பிக் கொண்டே தானும் ஸ்டேஷனை அடைந்தான்.

இந்த கோரமான காட்சியைக் கண்ட எல்லோரும் ஒன்றுமே விளங்காமல் தவித்து நின்று அவரவர் மனம்போலப் பேசலானார்கள். வீரநாதனின் சினேகிதன் ராமநாதன் என்பவன் அவனுக்குத் தேறுதல்களைக் கூறி, ஒரு பிரபல வக்கீலை இவன் பக்கத்திற்கு அமர்த்தி, கேஸ் நடத்தத் தீர்மானித்தான். வீரநாதன், வஸந்தாவாகிய உயிரைப் பிரிந்ததும் சவம்போலானான். "ஹா! வஸந்தா! வஸந்தா!'' என்று பிதற்றுவதைமட்டும் கைக்கொண்டான்; அன்னாகாரத்தை மறந்தான்; ஸ்மரணையற்று பூமியில் விழுந்தான்.

வஸந்தவல்லியோ போலீஸாரால் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டாள். அவள், தான் எவ்விதத் துன்பம் அநுபவித்தாலும் தன் நாயகன் ஆபத்திலிருந்து நீக்கப்பட்டதையே பேரின்பமாக எண்ணி மகிழ்ச்சியடைகிறாள். "அந்த மாது எந்த விதம் இவ்விடம் வந்து விஷத்தைக் குடித்திருக்கக்கூடும்?'' என்ற சந்தேகம்மட்டும் அவள் மனத்தில் போராடியது. சட்டத்தின் முறைப்படி கேஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்குப் போய், பின்னர் ஸெஷன்ஸுக்கு அனுப்பப்பட்டது. வஸந்தா வீட்டில் சொல்லிய வாக்குமூலத்தையே கோர்ட்டிலும் கூறிவிட்டாள். குற்றவாளியே உண்மையை ஒப்புக்கொள்கிறபடியினாலும் அவளுக்குசாக்ஷி

களே இல்லாமையாலும் இந்தக் கேஸ் சீக்கிரத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வீரநாதன், வஸந்தாவைப் பிரிந்த அன்று பிரக்ஞை யற்று விழுந்தவன் கடுமையான நோய்வாய்ப்பட்டு வருந்துகிறான். கிழங்களோ, விசனம் தாங்காது துடிக் கின்றனர். குழந்தையும் தன் தாயின் வரவைக் காணு மையால் ஏக்கங்கொண்டு கத்த ஆரம்பித்தது. இந்நிலை மையில் ஸெஷன்ஸ் கோர்ட்டு விசாரணை பலான தேதி யில் என்று குறிப்பிட்டாயிற்று. மனோகரியினுடைய சகோதரன் ஏதோ தன் சொந்த காரியமாக வெளியூர் சென்றிருந்து திரும்பிவந்தான். அவ்வாறு வந்ததும் அங்கு நடந்த தன் சகோதரியின் மரணத்தையும், அதன்மூலம் வீரநாதனின் இளைய மனைவி கைது செய் யப்பட்டிருப்பதையும், அந்த வீட்டில் வீரநாதன் படுத்துவிட்டதையும் கேட்டு மிக்கதுக்கத்தையடைந்து, "ஐயோ! அந்தச் சனியனுடைய உயிர் நீங்கியும், இத் தகைய உத்தமர்களுக்கும் பேராபத்து விளைந்துவிட்ட தே!" என்று நிரம்பவும் வருத்தமுற்று வீரநாதனுடைய வீட்டிற்கு ஓடிவந்தான். அவனுடைய கோரமான படுக்கையையும், குழந்தையும் கிழவர்களும் கதறும் கண்றாவியையும் கண்டு அபாரமான துக்கத்தை யடைந்து வருந்தி, வீரநாதனை நோக்கி, நடந்த விவரங் களைக் கேட்டதும் சேதுபதி திடுக்கிட்டு, "என்ன! என்ன! அந்தப் பாதகியின் சவத்தைக் கண்ட பழி உங்கள்மீது சார்ந்ததா! ஐயோ! இதென்ன அக்கிரமம்! அவள் இறந்ததாகச் சொல்லும் அதே இரவில் அவள் என்னைக்கண்டு பேசியிருக்கிறாளே! நான் அவள் முகத் திலும் விழிக்கப் பிடிக்காது அவளைத் துரத்திவிட்டு, எனது அவசரமான வேலையின் நிமித்தம் ஊருக்குப் போய்விட்டேன். பாவி அவள் வேண்டுமென்றே செய்துகொண்ட தற்கொலை இது என்பதை நான் நிரூ பிக்கின்றேன். நீ இதைப்பற்றி வருந்தாதே. அடாடா! சண்டாளி இருக்கையிலும் அவமானமும் அபவாதமும்

உலாவின; இறந்தும் உயிருக்கும் உலையாக இடர்நேர்ந்ததே! வீரநாதா! நீ சிறிதும் வருத்தமுற வேண்டாம்" என்று அவனுக்கு அநேக தேறுதல்களைக் கூறிவிட்டு, வஸந்தாவின் பதிபக்தியைக் கொண்டாடினான். "இத்தகைய மங்கையர் மாணிக்கம் கூட உலகத்தில் உண்டா!" என்று வியப்புற்றான். "ஆஹா! சர்வேசா! ஓர் பாதக, சண்டாளிக்காக ஒரு குடும்பத்தையே அதோகதியாகும்படி விடலாகுமா!" என்று கடவுளை நோக்கி முறையிட்டு, வீரநாதனிடம் சொல்லிவிட்டு, ஒரு அவசர வேலையாக வெளியில் சென்றான்.

வீரநாதன், தனது காதலியை விடுதலைசெய்வதற்கு எந்த விதத்தில் தான் முயன்றால் வேலை நடக்கும் என்ற யோசனையிலேயே சுழன்று தத்தளிக்கிறான். அதற்காகப் பலவித ஏற்பாடுகள் செய்கிறான். எவ்விதமாவது அவளை விடுதலையடையச் செய்த பின்னரே தான் உயிர் தரிப்பது, இல்லையேல் மரிப்பது என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டான். தன் பெற்றோரின் கலக்க நிலையையும், குழந்தையின் பரிதாபத்தையும் கண்டு சகிக்க முடியாமல் கதறுகிறான்; அவர்களுக்குத் தேறுதல் கூறிவிட்டு, நேரே சிறைச்சாலைக்குச் சென்று வஸந்தாவைக் கண்டு, "ஐயோ! நான் உண்மையை இனி எடுத்துரைத்தாலும் நியாயமாகாமற் போய்விடுமோ! என் கண்மணி! வீணாக உன்னுயிரைக் கொடுக்க முன் வந்தாயே? நான் என் செய்வேன்? சண்டாளி யொருத்தியினால், இத்தனை பெயருக்கும் அநியாய மரணம் நேர்ந்துவிடும்போலிருக்கிறதே!" என்று கதறுகிறான். இதைக் கேட்ட வஸந்தா "நாதா! நம் பூர்வ வினை இது. நாம் எவ்விதம் வரம் வாங்கிக் கொண்டு வந்தோமோ, அதை அநுபவித்துந்தான் தீர வேண்டும். நமது குற்றமற்ற தன்மையை நிரூபிக்கும்படியாகக் கடவுள் கிருபை செய்தால், எந்தவிதமேனும் நிரூபித்துவிடுவார். நீங்கள் பயப்படாதீர்கள். என் முடிவு நாளைக்கு நிச்சயமாகத் தெரிந்துவிடும். உங்கள்

மாதா பிதாக்களுக்கு நீங்கள் மைந்தனையும், உங்கள் குமாரன் விஜயராகவனுக்கு தந்தையாயும் வாழுங்கள். என் முடிவு இதோடு முடிந்துவிட்ட பின்னரேனும் உங்களைத் துன்பம் பிடிக்காதிருக்கட்டும். என்வார்த்தைகள் மிகவும் கடினமாகத்தான் தோன்றும். என் நிலைமையை மாற்றிக்கொண்டால், தாங்களே தெரிந்துகொள்வீர்கள். என்னைப் பிரிந்தபின் இன்பமுண்டோ எனலாம். என்னைத் திடீரென்று எமன் கொண்டுபோய்விட்டால், என்ன செய்வது? இப்பொழுது அவ்விதந்தான் எண்ணவேண்டும். என் துரையே! அன்பரே! வருந்தாதீர்கள்; வருந்தாதீர்கள்'' என்று கூறினாள்.

வீர:—என் கண்ணூர் மணியே! ஐயோ! இம்மொழியை நான் எப்படிக் கேட்டுச் சகிப்பேன்? இது வேண்டுமென்று நீயாக வைத்துக்கொண்ட சங்கடமல்லவா? உன் இந் நிலைமையைக் கண்டு என்னுள்ளம் படும்பாட்டை நான் எவ்விதம் இயம்புவேன்? என்னுருயிர்த் துணைவியே! என்னுயிர் அதிக நேரம் தாங்காது போலவிருக்கின்றதே! என் கண்ணே! நான் தற்கொலை செய்துகொண்டு உயிரை விட்டுவிடுகிறேன். அன்றி, நீ குற்றவாளியல்லவென்பதைக் கூறிவிடுகிறேன். உன்னை இக்கோலத்துடன் என்னால் காணமுடியவில்லையே!

வஸ:—என் கண்ணாளா! இன்ப துரையே! நமக்கு எதுவரையில் ப்ராப்தமோ அதுபரியந்தந்தான் யாவும் நடக்கும். என் பிறவியின் பயனும் கோரிக்கையும் தம்மைப்பற்றியவையே யாகும். தங்களுடைய சுகமான வாழ்க்கையை, ஜீவியத்தைத்தான் நான் கோரவேண்டியவள். என்னுயிர் இருக்கையில், நீங்கள் அநாவசியமாய்த் துன்பப்பட்டு வருந்த—பழியேற்று ஏங்க—நான் சகிக்கமாட்டேன். தாங்கள் இவ் ஆபத்தில் சிக்காது விடுதலை அடைந்ததே எனக்குப் பெரிய சந்தோஷம். நாதா! தாங்கள் இப்போது நான் குற்றவாளியல்லவென்று சொல்வீர்களாயின்,

விஷயம் கெட்டுவிடும். நம் இருவர் பேரிலும் சந்தேக மேற்பட்டுப் பிடித்து விடுவார்கள். வயதுமுதிர்ந்த கிழவர்களையும் பாதிக்கலாம். வீணுகக் காரியத்தைக் கெடுத்துவிடாதீர்கள்.

வீர—கண்மணீ! உன்னை நான் வேண்டுமென்று உயிருடன் பறிகொடுப்பதென்ருல், என் மனம் சம்மதிக்குமா? நான் இந்தப் பாதகத்திற்கு ஆளாய்விட்டேனே! என்ன செய்வேன்?

வஸ—நாதா! வருந்தாதீர்கள்! தன்னுயிரைக் கோடுத்தேனும் கணவனைக் காப்பது பெண்களின் கடமை, அத்தகைய கடமையையே நான் செய்கிறேனேயன்றி வேறில்லை. பூர்வ ஜன்மத்தின் பாபத்தினுல் இத்தகைய ஆபத்து தலையில்வந்து மூண்டது. உங்கள் பெற்ருேருக்குப் புத்திரராயும், குழந்தைக்குப் பிதாவாயும் இருப்பதைக் கெடுத்துக்கொள்ளவேண்டாம். நாதா! நமக்குக் கடவுள் இவ்விதமான அடாத பழியின்மூலம் பிரிவினைக்காலத்தை உண்டாக்கினுற் போலிருக்கிறது. இதற்கு வருந்தினுல் பயன்தானுண்டோ? அக் கடவுளே நேரில்வந்து சாக்ஷி சொல்லி, நம்மை விடுதலையடையச் செய்தால் தப்பும் வழி கிடைக்குமேயன்றி, மற்ற வகையில் எதுவும் இடையாது" என்று மெல்லப் பேசிக்கொண்டிருக்கையில், காவற்காரன் அருகில் வந்தமையால், அவ்விருவரும் பிரிந்துவிட நேர்ந்தது. கண்ணில் நீரை உதிர்த்துக்கொண்டே அவ்விடத்தை விட்டு வீரநாதன் சென்ருன். ஒன்றுமே தோன்ருது அவன் துக்காக்ராந்தனுய்ப் படுத்தவன் தன் நிறையழிந்து ஏதேதோ பிதற்றுகின்ருன். "ஐயோ! வஸந்தவல்லி! என் கண்மணீ! நான் என் செய்வேன்? உன்னை எவ்விதம் விடுவிப்பேன்? மகாபாவியாகிய என்பொருட்டு உன்னுயிரைக் கொடுக்க வந்த உன் அன்பை என்னென்பேன்? சண்டாளி த்ரோகியாகிய மனோஹரி செத்தும் நம்மைப் பிடித்து ஆட்டவேண்டுமா! என் கண்ணே! வஸந்தமணி!

பிரேமாமணி! என்னுயிரை நான் இனி ஏன் சுமக்க வேண்டும்? என் வினை என்னை வாட்டுகின்றதே! இப் பழியை நான் நீக்கி, உன்னை விடுதலை யடையச் செய்யாவிட்டால், நான் ஜென்மம் எடுத்ததன் பய னென்ன? ஏ, கருணையங் கடவுளே! நான் இது விஷயமாகப் பிடியாத மனிதனின் கால்களைப் பிடித்து வேண்டுவதை நீ யறிய மாட்டாயா! என் கண்மணியை வீணான குற்றத்தினால் தவிக் கச் செய்வது தருமமாகுமா? நீ கண் திறந்தால் முடியாத காரியமும் உண்டோ! என்னப்பனே! சர் வேசா! ப்ரபோ! நான் படும்பாடு உலகினர் நவிலும் பஞ்சுதான் படுமோ! எண்ணத்தான் படுமோ! சொல்லத்தான் படுமோ! என்உள்ளம் கலங்கிநிற்பதை நீ யன்றி அறிந்து நிவர்த்திக்க வேறொரு வள்ளல் உல கிலுண்டோ? என் குறையைத் தீர்த்து என் வசந் தாவை மீட்டு எனக்களிப்பாயா! என் மனத்தைக் களிப்பிப்பாயா? என் சஞ்சலத்தைத் தீர்ப்பாயா! என் னப்பனே! பரந்தாமா!'' என்று தனக்குள் பலவித மாக எண்ணிப் புலம்பிக்கொண்டே இருந்தான்.

அத்தருணம் வெளியில் சென்ற சேதுபதி விரைக்க விரைக்க ஓடோடி வந்து, "வீரநாதா! அந்தப் பாதகி யாகிய மனோஹரியினுடைய சிநேகிதையின் வீட்டிற் குச்சென்று விசாரித்தேன். அவள் அன்றிரவே அவள் வீட்டிற்கும் வந்தாளாம். அந்த மாதும் நான் கூறியது போலவே அவளை அலக்ஷ்யமாகப் பேசி, உடனே போய்விடும்படியாகக் கூறினாளாம். நாங்கள் இருவ ரும் அவ்வாறு செய்ததால், அவள் மனந்துணிந்து இங்கு வந்து, தானே விஷத்தை உண்டு இறந்திருக்கி றாள். இதை நான் எப்படியாவது நிரூபிக்க வழி செய் கிறேன். எழுந்திரு. படுத்துப் புலம்பாதே!'' என்று அவனைத் தட்டிக்கொடுத்து எழுந்திருக்கச் செய்தான்.

அப்போது வீரநாதனின் படுக்கையில் கால் நீட் டும் பாகத்துத் தலையணையின் பக்கமாகக் கடிதச் சுருள்

ஒன்று இருப்பதை சேதுபதி கண்டான். அதன்மேல் தெரிந்த எழுத்து மனோகரியின் கையெழுத்தாக இருக்கக் கண்டு திடுக்கிட்டு, "வீரநாதா! அதோ பார்! அதென்ன கடிதச் சுருள்! அதிலுள்ள எழுத்து மனோகரியின் கையெழுத்துப்போலவிருக்கிறதே!" என்றான்.

உடனே வீரநாதன் அலறி எழுந்து அந்தச் சுருளை எடுத்துப் பார்த்தான். அதில் சிறிய கடிதம் ஒன்றும், பெரிய கடிதம் ஒன்றுமாக இருக்கக் கண்டு வெகு வியப்படைந்து சிறிய கடிதத்தைப் படித்தான். சேதுபதியும் அதைக் கேட்டான். ஆஹா! அந்த விஷயத்தைப் படித்ததும் இருவரின் மனமும் பூரித்தது. பேரானந்த வெள்ளத்தில் மிதப்பவர்கள்போல, "ஆ! என் வஸந்தமணியின் விடுதலைக்குஎம்பெருமான் வழிகாட்டி விட்டார்" என்று கர்ஜனை செய்தார்கள். எனினும் மனோகரியின் கடிதத்தையும், அவளுடைய அநுபவக் குறிப்புகளையும் படித்து, அவள் அதோகதியாக மாண்டதை எண்ணி "ஐயோ! மனோகரீ! நான் உன்னுடன் ஒரு வார்த்தை பேசுவதற்கு விரும்பியபோது என்னை நீ ஒருநாள் பூராவும் இழுத்தடித்தனையே? உன் வைர மாலையை நான் என் ஆபத்திற்காகக் கேட்டபோது அதைக் கொடுக்க மறுத்ததுடன் என்னை லக்ஷ்யம் செய்யாது என் வார்த்தையைத் தட்டிவிட்டுச் சீமைக்கு ஓடியதன் பயன் இதுதானா? உன் மனத்தில் சுயேச்சை வகிக்கமட்டும் ஆசை இருந்ததேயன்றி, அதையடைந்து பரிசுத்தமாக ஜெயிக்கும்சக்தியும் மன உறுதியும் இல்லாது பாழாய்விட்டாயே! மனோவுறுதியற்றவர்களுக்குச் சுதந்திரமும் சுயேச்சையும் ஒரு சத்ரு போல் அல்லவா முடியும்? மனோதிடமுள்ளவர்களாயின் எல்லாம் வகித்து நன்மை அடையலாமோ, என்னவோ! மனோஹரி! உனது முடிவு என்னவிதமாக ஆகிவிட்டது!" என்று வீரநாதன் கண்ணீர் உதிர்த்தான். சேதுபதியும் கூடப்பிறந்த பாசத்தின் பொருட்டு வருந்தினான்.

மனோகரி, தானாக தற்கொலை செய்துகொண்டு விட்டாளென்பதற்கு அவளுடைய இக் கடிதங்களே சான்றாகையால் இவற்றை இப்போதே எடுத்துக் கொண்டுபோய் நீதிபதியிடம் காட்டி உண்மையை விளக்கி வஸந்தாவை விடுதலை செய்துவிட வேண்டு மென்று சேதுபதிகூறி, வீரநாதனையும், தங்கள் சார்பில் அமர்த்தியுள்ள வக்கீலையும் மற்றுமுள்ளோரையும் அழைத்துக்கொண்டு நேரே நீதிஸ்தலத்தை அடைந்து, தமது வரவைத் தெரிவித்து, நீதிபதியின் அனுமதியின் பேரில் அவரிடம் சென்று, இந்தக் கடிதங்களைக் காட்டினார்கள்.

நீதிபதியும் அக்கடிதங்களைக் கண்டு அதியாச்சரிய மடைந்து "இதுதான் அந்த அம்மாளின் கையெழுத்து என்பதற்கு என்ன சாக்ஷி?" என்று கேட்டார். சேது பதி, தான் ஏற்கெனவே சேகரித்துக் கொண்டுவந்த மனோகரியின் கையெழுத்துப் பிரதிகளினாலும், அவளு டன் கூட காலேஜில் இருந்தவர்களின் சாக்ஷியினாலும் கடிதத்திலுள்ள எழுத்து மனோகரியினுடையதுதான் என்பதை நிரூபித்துவிட்டதைக் கண்டு ஜட்ஜு நிரம்ப வும் திருப்திகொண்டு, வஸந்தாவை வரவழைக்கச் செய்தார். அவரது அநுமதி பெற்று வீரநாதனும் சேதுபதியும் சேவகர்களுடன் ஜெயிலுக்குச் சென்றார்கள்.

அப்போது வஸந்தவல்லி, மிகுந்த துயரத்துடன், "ஏ கிருஷ்ணா! கோபாலா! நான் என் முடிவைத் தெரிந்துகொண்டேன். என் மாமி மாமன்மார்களையும், என்னருயிர்க் கணவரையும், என் செல்வக் குழந்தை யையும் ஒரு இடுக்கணுமின்றிக் காப்பாற்றவேண்டும். அப்பனே! என் பிறவியில் இதுதான் எனது கோ ரிக்கை. என் முடிவால் அவர்களை வருந்த விடாது, உன் மாயையால் துயரத்தை மறைத்துவிடு. அவர் களைக் கைவிடாது காப்பாற்று. என் பிராணகர்த்த ருக்கு ஓர் உயர்ந்த கன்னிகாரத்தினத்தை மணம்புரி

வித்துவிடு. என் செல்வக் குழந்தையிடம் என் கண வருக்கும், அவருக்கு மனைவியாக வரப்போகும் மாத ரசிக்கும் மாருத பிரியத்தை உண்டாக்கிவிடு. மனோ கரியம்மாளைப்போல இனி உலகத்திலுள்ள பெண் களின் மதி கெடும்படியான கொடுமை நடக்கவேண் டாம். மன உறுதியைக் கொடுத்து ரக்ஷி. சஞ்சல புத்தியுடையவர்களுக்கு மகா பயங்கரமான சுயேச் சையை வகிக்கத் திடனில்லை; அதை யறியாது சுயேச் சையைக் கோள்ள நினைப்போருக்கு இவ்விதம்தான் கதி என்பதை எல்லோருடைய மனத்திலும் படும்படி யாகச் செய்துவிடு. என் அப்பனே! சர்வேசா! தீன ரக்ஷகி! என் சகல பிழைகளையும் க்ஷமித்து, என்னை ஆட்கொண்டருளவேண்டும். உலகத்தில் தேடற்கரிய அபூர்வ வஸ்துவாகக் கருதக்கூடிய பிராணநாதரை அடைந்தும் அவருடன் நான் அதிக நாட்கள் இருந்து பணிசெய்து இன்பமாய் இல்லறம் நடத்தாது இவ் விதம் பிரிய நேர்ந்தது ஒன்று மட்டும் சிறிது வருத்த மாக இருப்பினும், என் பிராணநாதரின் இடர் நீங்கிய ஆனந்தத்தில் எல்லாம் மறைந்தன. மறுமையில் அவ ரையே நான் நாதனாக அடையும்படியாக அருள் பாலிப்பாய். அதுவே எனக்குப் போதுமானது. என் செல்வா! என் கண்மணீ! உலகத்தில் நீ நல்ல புத்தி சாலியாயும், பரோபகார சிந்தையுடனும், தர்மகுணத் துடனும், பிதாவின் வார்த்தையைத் தட்டாமலும், பெரியோருக்கு அடங்கியும், கல்வியில் சிறந்தும் விளங் கும்படியான நிலைமையில் இருந்து, உன் பெரியோரை மகிழ்விப்பாய்! கண்ணே! நான் இருந்து அவ்வைபவங் களைப் பாராவிடினும் என் ஆத்மா அதையறிந்து சந் தோஷமடைந்துவிடும். கண்மணீ! உன் விஷயமாக நான் ஆகாயக் கோட்டை கட்டியதெல்லாம் பலித மடையாவிடினும் உனது தந்தை ஆபத்தில் சிக்காது காத்த ஒரு சந்தோஷம் வேறெதற்கும் இணையாகாது. சர்வேசா! எல்லோரையும் காப்பாற்றவேண்டும்''

என்று இவ்வாறு பலவிதமாக எண்ணியும் கூறியும் புலம்பிக்கொண்டிருந்தாள்.

அச் சமயந்தான் வீரநாதன், சேதுபதி முதலியவர்கள் அங்கு சென்றூர்கள். ஜெயில் கதவு திறக்கப்பட்டதும் வீரநாதன் அடங்காத ஆனந்தத்துடனும், பேரன்புடனும், ஓடி, "என் கண்மணி! வஸந்தா! நற்காலம் பிறந்துவிட்டது. என் செல்வக் கிளியே! உன்னை விடுதலைசெய்து காப்பாற்றிவிட்டார் கடவுள். எழுந்து வா; புலம்பாதே! இறந்துவிட்ட மனோகரியின் கடிதமே உன்னை விடுதலையடையச் செய்தது!" என்று அக் கடிதத்தின் விவரத்தைக் கூறி, அவளை அணைத்துக்கொண்டான்.

இந்த எதிர்பாராத அதிசயத்தைக்கேட்ட வஸந்தா பேரானந்தமடைந்து, "ஆ! இது உண்மையா! என்னே கடவுளின் கருணை! நம்பியவர்களைக் காப்பாற்றுமல் கைவிடுவாரா அவர்! நாதா! உங்கள் பூஜையின் பலனலேதான் இவ்வித நற்காலம் பிறந்தது" என்று கூறிக்கொண்டு, அவர்களோடு நீதி ஸ்தலத்திற்கு வந்தாள்.

அவளைக் கண்ட நீதிபதி மிகுந்த வாஞ்சையுடனும், மதிப்புடனும் பேசத்தொடங்கி, "அம்மா வஸந்தா! குற்றமற்றவளாயிருக்கையில், நீ ஏன் குற்றவாளி என்று சொன்னுய்?" என்று கேட்டார்.

அதற்கு வஸந்தா, "கனம் பொருந்திய நீதிபதி அவர்களே! இக்கடிதம் என் படுக்கையிலிருப்பதை நான் அறியவில்லை. நான் பொழுது புலர்வதற்குமுன் படுக்கையை விட்டு எழுந்துவிட்டேன். குற்றமற்ற நிரபராதியாகிய என் பிராணநாதர்மீது குற்றம் அநியாயமாக ஏற்பட்டுவிட்டதைக் கண்டு, என் மனம் சகியாமல் அவரை மீட்கும்பொருட்டு, அக் குற்றத்தை நான் ஏற்றுக்கொண்டேனேயன்றி, உண்மையில் இருவரும் குற்றமற்ற நிரபராதிகள் என்பது எங்கள் மனமும், கடவுளும் அறிந்ததேயாகும்; "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்கிறபழமொழிப்படி அவரை

அனவரதமும் துதித்துத் தொழும் எங்களை அவர் காப்பாற்றினர். மனிதப் பிரயத்தனத்தினுல் மேலுள்ள விஷயம் உண்மைபோல விளங்கினும் குற்றமற்ற கோவிந்தன் அதைச் சகிப்பான? அவனருளே எம்மைக் காத்தது. எனக்கு என் பிராணநாதரை விட வேறு பொருள் இவ்வுலகத்திலில்லை. அவருக்கு அநியாயமாக ஆபத்து நேருவதைச் சகிக்க என் மனம் இடந்தரவில்லை. சுகமோ, துக்கமோ, இரண்டிலும் கணவனுக்கு மனைவியும் பாத்யமுடையவள் என்பதை, கணம் பொருந்திய தாங்களே அறிவீர்கள். என் பர்த்தாவின்மீது குற்றம் ஏற்பட்டு அவருக்கு ஆபத்துநேர்ந்து வருந்தி, அவர் சிக்ஷைக்கு உள்ளாவதைவிட அந்தக் குற்றத்தை நான் ஏற்று அநுபவிப்பதே எனக்கு ஆனந்தமாகத் தோன்றியது. என்னுயிர் நீங்கினுலும் எனக்குச் சம்மதமே. என் பதியின் மனம் வருந்த நான் கண்டு சகியேன். என் பிறவியே அவருடைய நலனைக் கோரி நடக்கவேண்டியது; அதன்படியே நான்நடக்க முன்வந்தேன். கடவுளின் கருணையால் வந்த ஆபத்து நிவர்த்தியானதற்குச் சந்தோஷப்படுகிறேன்'' என்றுள்.

வஸந்தவல்லியினுடைய பதிபக்தியையும், தெய்வ பக்தியையும் கண்டு கோர்ட்டிலுள்ள நீதிபதிமுதல் எல்லோரும் அதியாச்சரியமடைந்து அவளைக் கொண்டாடினர்கள். நீதிபதி, அவளை நோக்கி, "அம்மா! உன் பதிபக்தியைக் கண்டு என்னுள்ளம் பூரிக்கின்றது. நீயும் உன் பர்த்தாவும் பல்லாண்டு வாழவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன். நீ சொன்னது போல உண்மையற்ற விஷயம் மனித சட்டத்தினுல் உண்மைபோலத் தோன்றும். உண்மைச் சட்டக்காரனுகிய கடவுள் உண்மையை விளக்காது போகமாட்டார். உன் பக்திக்கு உகந்து உனது ஆபத்தை நிவர்த்திசெய்த கடவுளை நானும் தொழுகிறேன்; இக் குறிப்புகளிலிருந்து இது தற்கொலை என்பது நன்ருக விளங்கியதால், உன்னை விடுதலை செய்கிறேன்'' என்ருர்.

இதுகேட்ட தம்பதிகளும், அவர்களைச் சார்ந்தவர்களும் அளவற்ற சந்தோஷத்துடன் நீதிபதிக்கும் மற்றையோருக்கும் வந்தனம் செய்து விடைபெற்றுக் கொண்டு, வீட்டிற்கு வந்தார்கள். அந்தத் தம்பதிகளின் மனோ உற்சாகமும், சந்தோஷப்பெருக்கும் அப்போது எத்தகைய உச்ச நிலைமையையடைந்திருக்கும் என்பதைக் கூறவேண்டுமா? வஸந்தவல்லி, தன் குழந்தையை எடுத்து ஆவலடங்கக் கட்டிமுத்தமிட்டுக் கொஞ்சினாள். மாமி மாமன் புகழ்ச்சிக்குப் பாத்திரமானாள். தன் நாயகனின்மீது வந்த குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு காப்பாற்றும் பொருட்டு, உயிரைத் தூக்கு மரத்திற்குத் துணையாக்கத் துணிந்த மாதரசி—கற்பரசி—யின் பெருமையைக் கொண்டாடிப் போற்றுதார் கிடையாது. எல்லோரும் நேரில் வந்து விசாரிப்பதும் கங்கு கரை இல்லை.

நாகரிக மயக்கத்தில் உழன்று நடுச்சந்தியில் பிணமாகக்கிடந்த மனோஹரியைத் தூற்றாதோர்கிடையாது. அவளுடைய உயிர் நீங்கியும் பலபேர்களின் வசைக்கு இலக்காக நின்றாள். மனோஹரியின் அலங்கோலமான கோர சரிதையைக் கேட்டவர்களும் நவநாகரிகப் பிரியராய், சுயேச்சையாய் இருப்பவர்களும் மனம் மாறுதலடைந்து புராதன கொள்கையைக் கைவிடாமல், கடைப்பிடித்தொழுகத் தலைப்பட்டார்கள். நவநாகரிகம் என்பது தற்காலத்தில் கொடிய நாகத்தின் விஷமென்றும், நாகப்புத்து என்றும் எண்ணும்படியான நிலைமைக்கு வந்துவிட்டது. உலகில் வஸந்தவல்லியினுடைய கற்பின் பெருமையானது ஏகதேசமாக ஜொலிக்க ஆரம்பித்தது.

கும்மியடிப் பெண்ணே ! கும்மியடி
கற்பை மனத்தெண்ணி கும்மியடி
நம்மவர் நவீன நாகரிகத்தினால்
நாசமடைவதைக் கும்மியடி. 1.

ப்ராணநாதனிடர் தீர்க்கத் துணிந்து தன்
ப்ராணனை ஈந்திட முன்னே வந்து
வேணுகானனன் திருஅருளினால் அம்மங்கை
விடுதலை பெற்றதைக் கும்மியடி 2.
பொல்லாத நாகரிகமாம் கும்பியில்
புரண்டோர் கதி கூறிக் கும்மியடி
கொல்லும் ஆடம்பர ஷோக்கினாலே பல
குற்றங்கள் மூண்டதைக் கும்மியடி. 3.
கொண்ட கணவனைத் தள்ளிவிட்டு மங்கை
கொடிய சுயேச்சை கொண்டதனால்
கண்டவர் கேட்டவர் எண்ணி நகையாடக்
காரண மானதைக் கும்மியடி. 4.
நாதனே தன்னுயிர்! நாதனே தன் இன்பம்!
நாதனே கதி என்றே உரைக்கும்
கோதிலா மணியாம் வஸந்த வல்லியின்
குணத்தைக் கொண்டாடி கும்மியடி. 5.

என்கிற பாட்டுக்கள் பல அடங்கிய சிறிய கும்மிப் புத்தகங்களும் பறக்கவாரம்பித்துவிட்டன; பறக்கின்றன! வஸந்தவல்லியினுடைய ப்ரபாவம் எங்கும் பரவிவிட்டதால், வீரநாதனின் பெயர் எங்கும் உலாவலாயிற்று. அவனுடைய மருத்துவமும் செழித்துக் கிளைத்தோங்கவாரம்பித்தது. வீரநாதன் பெரிய டாக்டராயும், அவன்மனைவியே அவனுக்கு நர்ஸ், கம்பவுண்டர், உதவி மருத்துவர், வேலையாள் ஆகிய எல்லோருமாக இருந்து, உதவி புரிந்துவரத் தொடங்கினாள். கணவனும் மனைவியும் தேனும் பாலும்போல இருப்பதைப்பற்றிக் கூறவேண்டுமோ?

இப்படியிருக்கையில், ஒரு நாள் வீரநாதன், "என் இன்பவல்லியே! இணையிலா மாணிக்கமே! சென்ற வருடத்திய இன்றைய தேதி என்னைப் பெருந்திகிலுக்கும் கலக்கத்திற்கும் உள்ளாக்கியது. அந்த நினைவையெல்லாம் எண்ண இப்போதும் அவ்வுணர்ச்சிகள் எனக்குண்டாகின்றன. என் கண்மணீ! சென்ற வருடம் இந்தக் குறியிட்ட நாளில் இதே நேரத்தில்

நான் குளத்தில் விழுவதற்குத் துணிந்து மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வெகு நேரம் புலம்பினேன்; அந்தச் சமயந்தான் மனோகரியின் கடிதம் கிடைத்தது. ஆஹா! அத்தருணம் என் மனம் பூரித்ததை என்னாலேயே அளவிட்டுக் கூறமுடியவில்லை. "என் ரத்தினத்தைப் பார்க்கப் போகிறேனா? இச்சொல் உண்மையானதா! என்று நானே ப்ரமித்து ஓடோடியும் வந்தேன். என் அமுதத்தைக் கண்டேன். இன்பப் பெருக்கைக் கொண்டேன். அந்த நினைவு எனக்கு இப்போது உண்டாகின்றது. ஆஹா! நான் கேவலம் நாஸ்திகனாகி, நவ நாகரிகத்தில் உழன்று கிடக்கையில், இந்தப் பக்தியின் மகிமையும் ருசியும் தெரியவில்லையே! இப்போதல்லவா இராம நாமம் மிட்டாய் என்ற பெரியோர் வாக்கின் உண்மை விளங்குகின்றது. சென்ற வருடம் இன்று இத்தேதியில் நாம் இருந்த இருப்பினால் நமது மனம் தவித்த தவிப்பையும், அதே மனம் இப்போது நம்முடைய இடையில் மற்றொரு பெண் குழந்தை ஆடிக் களிக்கப்பெற்ற ஆச்சரியத்தையும் என்னென்பேன்!" என்று அளப்பரிய ஆனந்த வெள்ளத்தினால் கூறினான்.

இதுகேட்ட அவன் மனைவி, "நாதா! எல்லாம் கடவுளின் செயல் என்பதைக்கூறவேண்டுமா? ஆக்குவதும் அழிப்பதும் யாவும் அவன் அருள்; அவனுடைய கருணைவெள்ளத்தினால் இப்படி நாம் களிக்கின்றதை எண்ணி மகிழ்ச்சியடைந்து, அவனை இடைவிடாது பஜித்துக்கொண்டிருந்தால், என்றும் குறைவிலாத க்ஷேமத்தையும் அளவிலாத நன்மைகளையும், எல்லையில்லாத இன்பத்தையும் நல்கி, இறுதியில் மோட்சத்தை அவ்வன் கொடுப்பான். இது திண்ணம். அவனடியை மறவாத அன்பரின் அகமே அவனுக்குக் கோயிலாகும். அவர்களுடைய தூய்மையான பக்தி-மாலையே சிறந்த புஷ்ப-மாலையாகும். என் ஆருயிர் ப்ராணவல்லபா! நாம் அக் கடவுளை இடைவிடாது தொழுது பேரானந்த

மடைவதையே முக்யமாகக் கொள்ளவேண்டும். அவ் ஆனந்தமே நமக்குப் பிறவிப்பயனை அளிக்கும்" என்று சொல்லிப் பின்னர் இருவரும் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மேற்படியான ஆனந்தத்துடன் தினந்தோறும் இடைவிடாமல் அவர்கள் கடவுளுக்குப் பூஜை செய்து வேண்டித் தொழுவதும், பெரியாரின் மனங்கோணாமல் நடப்பதும், நாகரிகப்பேயைக் கனவிலும் நினையாமல் கோதிலாத குணமணிகளாயும், கண்டோர் கொண்டாடும் காதல் கிளிகளாயும் இரு குழவிகளுக்குப் பெற்றோராகி, மருத்துவத்தில் மகா ப்ரக்யாதி பெற்று, நித்ய மங்களவைபவகோலத்துடன் வாழ்ந்துவருகின்றார்கள்.

ஒழுக்க முடைமை குடிமை *இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். —திருக்குறள்.

* இழுக்கம்—ஒழுக்கத்தில் தவறுதல்.

போங்கும் மங்களம் எங்கும் தங்குக.

வீரவஸந்தா
முற்றிற்று.

'ஜகன்மோகினி' பிரஸ், சிங்கப்பெருமாள் கோவில்,

(ருசசச)

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதிய நாவல்கள்

1—5—'43 முதல் மாற்றப்பட்டுள்ள விலைகள்.

ரூ. 3—8

வைதேகி
ராதாமணி
சாருலோசனு
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2—12

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
பொங்கும் காதல்

ரூ. 2—4

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
தயாநிதி
ஞானதீபம்

ரூ. 2—0

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்
வாத்ஸல்யம்
மதுர கீதம்

ரூ. 1—12

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனுதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச் சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல்நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை
கலாநிலயம்

ரூ. 1—8

சுகந்த புஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணைலயம்

ரூ. 1—4

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

ரூ. 1—2

* கதம்பமாலை

ரூ. 1—0

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
பிரார்த்தனை

அணு 12

நளினசேகரன்.
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
ப்ரேமப்ரபா
மாலதி
வத்ஸகுமார்
படகோட்டி

அணு 8

பக்ஷமாலிகா
சுடர் விளக்கு

அணு 6

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
* ஸரஸராஜன்
உணுத்த இதயம்

குறிப்பு—இவ்வருடம் தயாராகியுள்ள புதிய பதிப்புகளில் பேப்பரின் விலைக்குத் தகுந்த மாதிரியும், பக்கங்களுக்குத் தகுந்த மாதிரியும் ஒவ்வொரு புத்தகத்தின் விலையை நிர்ணயித்திருக்கிறோம். அதன்படி வீரவஸந்தாவின் விலை ரூ. 1/- என்பதை மேலட்டையில் காண்க.